# சுவடிப் பதிப்பாசிரியர்கள்

முனைவர் சி.இலட்சுமணன்

யாதும் ஊரே யாவரும் கேளிர்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
International Institute of Tamil Studies

# சுவடிப் பதிப்பாசிரியர்கள்

முனைவர் **சி. இலட்சுமணன்**

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
**INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES**
இரண்டாம் முதன்மைச் சாலை மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை - 600 113

பதிப்புச் செம்மல் ச. மெய்யப்பன் அறக்கட்டளைச் சொற்பொழிவு
(அறக்கட்டளை நிறுவியவர் : பேராசிரியர் ச. மெய்யப்பன்)
வரிசை எண் : 4

## BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | Cuvaṭip patippāciriyarkaḷ |
| Author | : | Dr. S. Lakshmanan<br>Head, Rare Paper Manuscripts<br>Tamil University, Thanjavur. |
| General Editor | : | Dr. T. Mahalakshmi<br>Associate Professor<br>Faculty of Tamil Literature and Manuscriptology<br>International Institute of Tamil Studies<br>Tharamani, Chennai-600 113 |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>II Main Road, C.I.T. Campus,<br>Chennai-600 113<br>Ph: 22542992 |
| Publication No. | : | 717 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Year of Publication | : | 2011 |
| Paper Used | : | 18.6 Kg TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type used | : | 10 Point |
| No. of Pages | : | vi + 96 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs. 45/- (Rupees Fortyfive only) |
| Printed by | : | Powerman Printers<br>6/15, Dr. Radhakrishnan Nagar<br>3rd Street, Korukkupet<br>Chennai - 600 021 |
| Subject | : | Editors of Palmleaf Manuscripts |


அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகளுக்கு நிறுவனம் பொறுப்பன்று.

இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113

# அணிந்துரை

*செந்தமிழ் நூல்கள் பழங்காலத்தில் பனைஓலைகளில் எழுதப்பெற்றன. அவை காலந்தோறும் தக்கவர்களால் புதுப்பிக்கப் பெற்றன.*

*அச்சு ஊடகம் நம் நாட்டில் அமைந்தபின் வெளிநாட்டுத் தமிழறிஞர்களும் நம் நாட்டுத் தமிழறிஞர்களும் பழந்தமிழ் நூல்களை அச்சேற்றும் பணியில் ஈடுபட்டனர். அவர்களில் சிலர் ஓலைச் சுவடிகளில் இருப்பனவற்றை அப்படியே பதிக்கத் தொடங்கினர். பின்பு பதிப்புப் பணியில் பல்வேறு நுணுக்கங்களைக் கண்டறிந்து பழந்தமிழ் நூல்களைப் பதிப்பிக்கத் தொடங்கினர்.*

*இவ்வாறாகப் பழந்தமிழ் நூல்கள் பல பதிப்பாளர்களின் கைவண்ணங்களால் பல்வகையாகப் பதிப்பிக்கப் பெற்று, அவை தொடர்பான ஆராய்ச்சிக்கும் உறுதுணையாக அமைந்தன.*

*பதிப்பாசிரியர்கள் பல வகை நூல்களைப் பதிப்பித்தாலும், சுவடிப் பதிப்பாசிரியர்கள் எனப் பலர் அடையாளங் காணப்பட்டுள்ளனர். இவர்கள் இந்நூலில் மாவட்டந்தோறும் பட்டியலிடப்பட்டுள்ளனர். மேலும் உரையாசிரியர்கள் பற்றி அமையும் நூலையும் அச்சு நூல்கள் வரலாறு பற்றி எழுதப் பெற்றுள்ள மற்றொரு நூலையும் பெரும்பாலும் அடியொற்றி இச்சொற்பொழிவு நூல் எழுதப் பெற்றுள்ளது குறிப்பிடத்தகுந்தது.*

*பதிப்புச் செம்மல் ச. மெய்யப்பன் பெயரில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் ஏற்படுத்தப் பெற்றுள்ள அறக்கட்டளையின் வாயிலாக இச்சொற்பொழிவு நூல் வெளிவருவது பொருத்தமாகும்*

*பின்னிணைப்புகளைச் சேர்த்து இந்த நூலை மேலும் மெருகூட்டியுள்ள இந்நூலாசிரியர் பாராட்டுக்குரியவர்*

இந்த அறக்கட்டளையின் பொறுப்பாளரும் இப்பொழிவு நூலின் பொதுப்பதிப்பாசிரியருமான முனைவர் தி. மகாலட்சுமி (இணைப்பேராசிரியர், தமிழ் இலக்கியம் மற்றும் சுவடிப்புலம்) அவர்களும் பாராட்டுக்குரியவர்.


இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையைக் காட்டிவரும் **இந்து சமய அறநிலையம் மற்றும் தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறை அமைச்சர் மாண்புமிகு எஸ்.பி. சண்முகநாதன்** அவர்களுக்குத் தமிழுலகம் என்றும் நன்றிக் கடன்பட்டுள்ளது.

நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் தமிழக அரசின் **தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும் செய்தித் துறைச் செயலாளர் திரு. து.நா. இராமநாதன் இ.ஆ.ப.** அவர்களுக்கும் நன்றி.

இச்சொற்பொழிவின் எழுத்துருவை மெய்ப்புத் திருத்தம் செய்த முனைவர் ஆ. தசரதன் அவர்களுக்கும் இச்சொற்பொழிவு மற்றும் நூல் தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த நிறுவனப் பணியாளர்கள் மற்றும் கணிப்பொறியாளர் திருமதி எ.ம. லட்சுமி ஆகியோருக்கும் எம் நன்றிகள் என்றுமுண்டு. இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த பவர்மேன் அச்சகத்தாருக்கு எம் பாராட்டுகள்.

இயக்குநர்

# ஆசிரியர் பற்றி. . .



**பெயர்: சி. இலட்சுமணன்**

**பிறப்பு:** மதுசூதனபுரம், கன்னியாகுமரி மாவட்டம்

**கல்வி:** முதுகலை முதல் வகுப்பில் தேர்ச்சி. ஆய்வியல் நிறைஞர் பட்டப் படிப்பில் பேரா. மு. சண்முகம்பிள்ளையின் பதிப்புப் பணி என்னும் தலைப்பில் ஆய்வு மேற்கொண்டு சிறப்பு நிலையில் தேர்ச்சி. தொல்காப்பிய எழுத்ததிகாரப் பதிப்பும் உரைகளும் (சிறப்பாகப் பாவலரேறு ச. பாலசுந்தரம் உரை) என்னும் தலைப்பில் ஆய்வு மேற்கொண்டு முனைவர் பட்டம்.

**பணி :** இவர் மதுரை அரசரடி இறையியல் கல்லூரியில் 4 ஆண்டுகள் சிறப்பாகப் பணியாற்றினார். தமிழ்ப் பல்கலைக்கழகச் சுவடித் துறையில் 27 ஆண்டுகள் பட்டறிவும் பயிற்சியும் பெற்றவர். ஓலைச்சுவடி, காகிதச்சுவடி ஆகிய இரு துறைகளிலும் புலமை நலம் வாய்க்கப்பெற்றவர். தற்பொழுது அரிய கையெழுத்துச் சுவடித் துறையின் தலைவராகப் பணியாற்றி வருகின்றார்.

**நூல்கள் :** ஆய்வுலகு போற்றும் தமிழறிஞர்கள், தமிழியல் ஆராய்ச்சி அறிஞர்கள், தாது வருஷப் பஞ்சக்கும்மி, தமிழுலகம் கண்ட ஆராய்ச்சி நன்மணிகள், ஒப்பாய்வு நோக்கில் வேதாத்திரி மகரிசியின் நூற்படைப்புகள், ஆய்வு நோக்கில் வேதாத்திரி மகரிசியின் கவிதைகள் ஆகிய நூல்களின் பதிப்பாசிரியவராவார். தொல்காப்பியத்தில் எழுத்துக்களின் வரிவடிவம், வாழ்வியல் சிந்தனை, பேரா. மு. சண்முகம்பிள்ளையின் பதிப்புப்பணி ஆகிய நூல்களின் நூலாசிரியராவார். ஓலைச்சுவடி விளக்க அட்டவணையின் தொகுப்பாசிரியரும் ஆவார்.

**பிற சிறப்புகள்:** சுவடியியல், வாழ்வியல், உளவியல், தமிழியல், மரபுக் கவிதைகள், இலக்கணம், தத்துவம் போன்ற பல துறைகளில் இவர் சிறப்பு ஈடுபாடு கொண்டவர். 50க்கும் மேற்பட்ட கருத்தரங்குகளில் பங்கேற்றுள்ளார். 100க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் எழுதியுள்ளார்.

# பொருளடக்கம்


| | |
|---|---|
| | பக்கம் |
| நூற்பதிப்புக் கலை | 1 |
| சுவடியியல் நூல்களில் பதிப்பாசிரியர்கள் | 7 |
| யாழ்ப்பாணத்துப் பதிப்பாசியர்கள் | 19 |
| நெல்லை மாவட்டப் பதிப்பாசிரியர்கள் | 30 |
| தஞ்சை மாவட்டப் பதிப்பாசிரியர்கள் | 34 |
| புதுவைப் பதிப்பாசிரியர்கள் | 44 |
| இராமநாதபுரத்துப் பதிப்பாசிரியர்கள் | 47 |
| சென்னைப் பதிப்பாசிரியர்கள் | 50 |
| மதுரை மாவட்டப் பதிப்பாசிரியர்கள் | 55 |
| திருச்சி மாவட்டப் பதிப்பாசிரியர்கள் | 58 |
| வடஆர்க்காடு பதிப்பாசிரியர்கள் | 61 |
| நிறைவுரை | 69 |
| பின்னிணைப்புகள் | 76 |

# நூற்பதிப்புக் கலை

சுவடியியல் கல்வியில் பதிப்புக்கலை கலங்களை விளக்கமாகும். பதிப்பியல் கலைச்சொற்களின் விளக்கங்கள் பதிப்புக்கலை பற்றி அறிய விழைவார்க்குப் பெரிதும் துணையாகும். ஆய கலைகள் அறுபத்துநான்கு என்பர். ஒவ்வொரு கலையும் இன்று கல்வியாக வளர்ந்து வருகின்றது.

சுவடிகள் என்பது பண்டைய தமிழ் மக்கள் நமக்களித்த பண்பாட்டுச் சின்னங்கள். நம் முன்னோர்கள் அருளிய ஞானக் கருவூலங்கள். அத்தகைய கலைச்செல்வங்களாக விளங்கும் சுவடிகளைத் திரட்ட வேண்டும். தேடித் தொகுத்தவற்றைத் தக்க முறையில் பாதுகாக்க வேண்டும். பாதுகாப்பதோடு மட்டுமல்லாமல் தக்க முறையில் பதிப்பிக்க வேண்டும். இக்கல்வித் துறையில் மாணவர்களும் சுவடியியல் ஆர்வலர்களும் பங்கேற்றுப் பயன் கொள்ள முன்வர வேண்டும் என்பதே சுவடியியல் கல்வியின் நோக்கமாகும்.

## சுவடியியல் கல்வி

சுவடியியல் என்பது சுவடிகளைத் திரட்டுதல், பாதுகாத்தல், பதிப்பித்தல் தொடர்பான பல்வேறு செய்திகளை வகுத்தும், தொகுத்தும் தருவதாகும். தமிழ் இலக்கிய வரலாறு, நூற்பதிப்பு வரலாறு என்பது போலச் சுவடியியல் கல்வியின் வரலாறும் குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழ் இலக்கிய வரலாறு என்பது ஏறத்தாழ 3000 ஆண்டு களுக்குள் இருக்கலாம். இதில் நூற்பதிப்பு வரலாறு என்பது ஏறத்தாழ 200 ஆண்டுகளைக் கூட முழுமையாக எட்டவில்லை எனலாம். சுவடியியல் கல்வி என்பது 20 அல்லது 25 ஆண்டுகளாக வளர்ந்துவரும் கல்வியும் வரலாறுமாகும். இலக்கியப் பரப்பில் படைத்தல், பதிப்பித்தல், ஆய்வு செய்தல் என்பன முப்பெரும் பணிநிலைகளாகும். சுவடியியல் கல்வியில் சுவடிகளைத் திரட்டுதல், பாதுகாத்தல், பதிப்பித்தல் என்பன முப்பெரும் பணிநிலைகள் என்றே கூறலாம்.

சுவடியியல் கல்வி என்பது பல்வேறு கலைகளின் சங்கமம் என்றே கூறலாம். சுவடிக்கலை, அச்சுக்கலை, ஆராய்ச்சிக்கலை,

பதிப்புக்கலை, சுவடிப்பாதுகாப்புக் கலை, மூலபாடத் திறனாய்வுக் கலை போன்ற பல்வேறு கலைகளின் சங்கமம்தான் சுவடியியல் கல்வி எனலாம். இவ்வடிப்படையில் பதிப்புக்கலை என்பது சுவடியியல் கல்வியின் ஓர் அங்கம் என்று கூறலாம்.

## பனையோலைப் புத்தகங்கள்

இன்று நாம் பயன்படுத்தும் அச்சுப் புத்தகங்களுக்குப் பதிலாக முன்னோர்கள் பயன்படுத்திய பனையோலைப் புத்தகங்கள் தாம் சுவடிகள். காகிதமும், எழுதுகோலும் வழக்கிற்கு வராத காலத்தில் ஓலை நறுக்குகளில் எழுத்தாணி கொண்டு எழுதப்பட்ட நூல்களே சுவடிகள் எனப்படும்.

சுவடியில் எழுதுவதும் எழுதியதை வாசிப்பதும் தனிக் கலையாகும். சுவடிப் பதிப்புக் கலையின் தோற்றுவாய் சுவடி எழுதும் கலையின்பாற்பட்டதாகும். அச்சுக்கலை தோன்றாத காலத்தில் எழுதும் கலை எவ்வளவு அரிதாக இருந்திருக்கும் என்பது எண்ணி எண்ணி இன்புறத்தக்கதாகும்.

> *அச்சுப் புத்தகங்கள் இன்று பயன்பாட்டில் இருப்பது போல ஏறத்தாழ 200, 300 ஆண்டுகளுக்கு முன்னால் பனையோலைப் புத்தகங்கள் பயன்பாட்டில் இருந்தன. அப்புத்தகங்களைச் சுவடி, ஏடு, ஏட்டுச் சுவடி என்ற பெயர்களில் அழைத்தனர். அக் காலத்தில் ஓலைச்சுவடி என்று அழைக்க வேண்டிய தேவைகள் ஏற்படவில்லை*
>
> (புதுமுகங்கள், ப. 44)

அச்சுப் புத்தகங்களைப் பதிப்பு நெறிமுறைகளின் அடிப்படையில் பதிப்பு வகைகளை அடியொற்றி வகுத்தும் தொகுத்தும் வரன்முறைப்படுத்துதல் பதிப்பு வரலாறு என்பதாகும். வரலாறு என்று குறிப்பிடுவதால் கால அடிப்படையில் அமையும் என்பது சொல்லாமலே அமையும்.

## சுவடி எழுத்தும் வகையும்

சுவடிகளில் மெய்யெழுத்துகளும் உயிர்மெய் எழுத்துகளும் வரிவடிவ வேறுபாடு இல்லாமல் காணப்படும். மெய்யெழுத்துகளைப் புள்ளி இல்லாமல் எழுதுவதே இயல்பு. சுவடி எழுத்துகளின் இயல்பும் அதுவேயாகும். தொல்காப்பியரின் மெய்யெழுத்துக் கோட்பாட்டில்

புள்ளி என்பது வரிவடிவைக் குறிக்கவில்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

> *புணரியல் இலக்கணம் கூற முற்படும் தொல்காப்பியர் எழுத்துக்களின் வரிவடிவம் பற்றிக் கூறியுள்ளார் என்பது நூலாசிரியர்க்குப் பெருமை சேர்ப்பதாக அமையாது. தொல் காப்பியத்திலுள்ள எந்த ஒரு நூற்பாவிற்கும் வரிவடிவ நோக்கில் கருத்து உரைப்பதற்கு இடமில்லை.* (உலகத் தமிழியல் ஆய்வு வளர்ச்சிக் கருத்தரங்க ஆய்வு மாலை, ப.204)

மொழி, எழுதுபொருள், துறை, அமைப்பு, மொழிநடை, அகப்புறத் தன்மை, இடம், காலம், சிறப்புத் தன்மைகள், தொகுத்தோர் காப்பகங்கள், பதிப்பு நிலை போன்ற வரையறைகளில் சுவடிகளை வகைப்படுத்தும் வாய்ப்புகள் உள்ளன.

## பதிப்பு வகைகள்

சுவடிகளைப் பல்வேறு நிலைகளில் வகைப்படுத்துவதுபோல, நூற்பதிப்புகளையும் இடம்பொருள் நோக்கிப் பலவாக வகைப்படுத்தலாம்.

> *பதிப்பின் தன்மை, நூலின் அளவு, அச்சிடப் பட்ட தடவை, அமைப்பு, விலை, உள்ளடக்கம், உரிமை, வெளியீட்டு நிறுவனம், பதிப்பாசிரியர், வெளியாகும் காலம், வெளியாகும் இடம், மொழி, துறை, நூற்பெயர் உரை என்பன போன்று பல்வேறு நிலைகளில் வகைப்படுத்தலாம்.* (பதிப்பு நிறுவனங்கள், ப. 69)

## பதிப்பு – பதிப்பித்தல் –வெளியிடுதல்

பதிப்பு என்றால் என்ன என்பதற்குப் பல்வேறு விளக்கங்களைக் கூறலாம். பதிப்பு உருவாக்கம் செய்து அச்சிட்டு [Editing and printing] வெளியிடப்பட்ட நூற்பிரதி பதிப்பு எனப்படும்.

> *பதிப்பு உருவாக்கம் என்பது பதிப்பு நெறி முறைகளைப் பயன்படுத்திச் செப்பம் செய்து பயன்பாட்டு நோக்கில் நூலை உருவாக்கு வதாகும்.*

பதிப்பு வகையின் அடிப்படையிலும், பதிப்பு என்றால் என்ன என்பதற்கு விளக்கங்கள் தரலாம். பொதுப்படையாக

> ***அச்சுக் கோர்த்தல் முறையாலோ, நிழற்பட முறையிலோ ஒரு தடவை வெளியிடப்பெறும் பிரதிகள் எத்தனையானாலும் அவை ஒரு பதிப்பு எனப்படும்.***

பதிப்பு வகைகள் பற்றிய கோட்பாடுகளையும் சான்று களையும் உணர்ந்து கொண்டால்தான் பதிப்பு என்றால் என்ன என்பது புலனாகும்.

பதிப்பு என்பது நூற்பெயரை முதன்மைப்படுத்த விதந்து கூறுவதாகும். எடுத்துக்காட்டாக, தொல்காப்பியப் பதிப்பு, குறுந்தொகைப் பதிப்பு, திருக்குறள் பதிப்பு, கம்பராமாயணப் பதிப்பு என்பன போன்று கூறுவதாகும்.

பதிப்பித்தல் என்பது நூல் உருவாக்கிய பணிகளை முதன்மைப்படுத்திக் கூறுவதாகும். சான்றாக, உ.வே. சாமிநாதையர் ஏறத்தாழ 74 நூல்களைப் பதிப்பித்துள்ளார். பேரா. மு. சண்முகம் பிள்ளை 24 சிற்றிலக்கியங்களைப் பதிப்பித்துள்ளார் என்பன போன்று கூறுவதாகும். இவ்விரண்டிற்குமுள்ள நுண்ணிய வேறுபாடு உணரத்தக்கதாகும்.

இதேபோன்று பதிப்பித்தல் என்பது வேறு. வெளியிடுதல் என்பது வேறு. பதிப்பித்தல் என்பது பதிப்பு உருவாக்கிய பணியினைக் குறிக்கும். வெளியிடுதல் என்பது நூல் வெளியீட்டுச் செலவை ஏற்றல் என்ற நிலையில் அமையும்.

## பதிப்பியல் சிந்தனைகள்

பதிப்பித்தல் என்பது ஆசிரியர் பணி, அலுவல் பணி என்னும் பல்வேறு பணிகளுள் இதுவும் ஒருவகைப் பணியாகும். பதிப்புப் பணி என்பது பதிப்பாசிரியர் செய்து வந்த பணிகளைக் குறிக்கும். பதிப்புப்பணியைப் புறநிலையிலும், அகநிலையிலும் கட்டலாம். பதிப்பாசிரியர் பதிப்பித்த அனைத்து நூல்களையும் குறிப்பது புறநிலையில் கூறுவதாகும். அவர்தம் பதிப்பு நெறிமுறைகளைக் குறிப்பது அகநிலையில் கூறுவதாகும். பதிப்புப் பணி என்பது ஒருவர் பெயர்சுட்டி அமையும். பதிப்பாசிரியர் ஒருவர் பெயரைச் சுட்டி அவர்தம் நூல் உருவாக்கப் பட்டியலிட்டும், பதிப்பு நெறிமுறைகளையும் வெளிக்கொணர்வது ஒன்று. ஒரு நூலை

எவ்வாறு பதிப்பிப்பது என அறிந்துகொள்ள விழைவது மற்றொன்று. பதிப்பு நெறிமுறைகள் பற்றிய புலமை பெற்றவராக இருப்பின் மிகச் சிறந்த நூற்பதிப்பினைத் தமிழ்கூறு நல்லுலகிற்குக் கொண்டு வரலாம். அதுமட்டுமல்ல; நூற்பதிப்புகளில் காணப்படும் பதிப்பு முறைகளை மதிப்பீடும் செய்யலாம். முன்னது பதிப்புப் பார்வை எனலாம். பின்னது ஆய்வுப்பார்வை என்றும் கூறலாம்.

பதிப்பு வரலாற்றில் பதிப்பு நிறுவனங்கள் மிக முக்கிய இடம்பெறும். சுவடியியல் கல்வியில் பதிப்பு நிறுவனங்கள் என்பது சுவடிப்பதிப்பு வரலாற்றில் பதிப்பு நிறுவனங்கள் என்று பொருள்படும். இவ்வடிப்படையில் பதிப்பு வரலாற்றில் பல்கலைக் கழகங்கள், சுவடி நூலகங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள், சமய நிறுவனங்கள், நூற்பதிப்புக் கழகங்கள் என்றெல்லாம் கூறலாம்.

பதிப்புத்துறை என்பது வேறு; நூல் வெளியீட்டுத் துறை என்பது வேறு. நூல் வெளியீட்டுத் துறையில் பதிப்பு உருவாக்கம், அச்சிடுதல், வெளியிடுதல் என்னும் மூன்று வகையான பணிகள் உண்டு. இப்பணிகளைச் செய்துவரும் நிறுவனங்கள் தற்காலத்தில் பதிப்பகங்கள் என்ற பெயர்களில் வருகின்றன. முற்காலத்தில் அச்சகங்களே பதிப்பு நிறுவனங்களாகச் செயல்பட்டு வந்துள்ளன.

> *முற்காலத்தில் அச்சகங்கள் நூற்பதிப்புகளை அச்சிட்டு, வெளியிட்டு, விற்பனை செய்து கொண்டிருந்தன. இன்று பதிப்பகங்கள், அதே பணியைச் செய்து கொண்டிருக்கின்றன*
>
> (பதிப்பு நிறுவனங்கள், ப. 71)

பதிப்பியல் ஆராய்ச்சி நெறிமுறைகள் என்பதும் பதிப்பியல் சிந்தனை சார்ந்த ஒன்றாகும். ஓர் ஆய்வினை எவ்வாறு மேற் கொள்வது போன்ற பல்வேறு படிநிலைகளே ஆராய்ச்சி நெறிமுறைகள் என்பதாகும். ஒரு நூலைப் பதிப்பிப்பதும் ஆராய்ச்சியின் பாற்பட்ட தாகும். பதிப்பித்த நூலின் பதிப்பு நெறிமுறைகளைக் கட்டுவதும் ஆராய்ச்சியின் பாற்படும். பதிப்பியல் ஆராய்ச்சி நெறிமுறைகள் என்பதில் மூன்று வகையான பணிகள் உள்ளன. ஆராய்ச்சி நெறிமுறைகள், பதிப்பு நெறிமுறைகள், புத்தக உருவாக்கம் ஆகிய மூன்றின் கூட்டுக் கல்வியே பதிப்பியல் ஆராய்ச்சி நெறிமுறை களாகும்.

பதிப்பு நெறிமுறைகள் என்பது கோட்பாடுகளாகும். பதிப்பாசிரியர் மேற்கொண்ட அல்லது மேற்கொள்ள வேண்டிய

பதிப்பியல் கோட்பாடுகளே பதிப்பு நெறிமுறைகளாகும். பதிப்பு உருவாக்கம் செய்வதற்கும் பதிப்பாசிரியர் மேற்கொண்ட பணி நிலைகள் யாவும் அவர்தம் பதிப்பு நெறிமுறைகளாகும்.

சங்க இலக்கியப் பதிப்புகள், தொல்காப்பியப் பதிப்புகள், ஆறுமுக நாவலர் பதிப்புகள், வ.உ. சிதம்பரம்பிள்ளை பதிப்புகள், டாக்டர் உ.வே.சா.வின் பதிப்புப்பணி, பேரா. மு. சண்முகம் பிள்ளையின் பதிப்புப்பணி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனப் பதிப்புகள், கரந்தைத் தமிழ்ச் சங்கப் பதிப்புகள் என்பனவெல்லாம் பதிப்பியல் சார்ந்த ஆய்வுகளாகும்.

ஆய்வுத் தலைப்புகள் வெவ்வேறு போன்று காணப்பட்டாலும் ஆய்வு முடிவுகள் ஒன்றேயாகும். இன்னும் விரிவாகச் சொல்வதாயின் பதிப்பு, பதிப்பு வகை, பதிப்பாசிரியர், பதிப்புப்பணி, பதிப்பு நிறுவனம் போன்ற தலைப்புகளில் மேற்கொள்கின்ற ஆய்வுகள் அனைத்தும் பதிப்பு நெறிமுறைகளை வெளிக்கொணர்வதாய் 'அமையும்'. இலக்கிய வரலாற்றில் இலக்கிய நயம் சுட்டிக்காட்டப்படும். பதிப்பு வரலாற்றில் பதிப்பு நெறிமுறைகள் சுட்டிக்காட்டப்படும்.

பதிப்பாசிரியர் என்னும் சொல்லுக்குப் பெருமை சேர்த்தவர்கள் சுவடிப் பதிப்பாசிரியர்கள் ஆவர். உரையாசிரியர் என்று சொன்னவுடன் இளம்பூரணர், சேனாவரையர், பரிமேலழகர், அடியார்க்குநல்லார் போன்றோர் நினைவுக்கு வருவதுபோலப் பதிப்பாசிரியர் என்று சொன்னவுடன் ஆறுமுக நாவலர், உ.வே. சாமிநாதையர், சி.வை. தாமோதரம்பிள்ளை, பேரா. வையாபுரிப் பிள்ளை போன்றோரே நினைவுக்கு வருகின்றனர். இவ் அடிப்படையில் சுவடிப் பதிப்பு பதிப்பியல் சிந்தனையில் குறிப்பிடத்தக்கதாகும்.

சுவடிப் பதிப்பு என்பது ஓலைச்சுவடிகளில் இருந்து முதன் முதலாகப் படியெடுத்துப் பதிப்பிக்கப்படும் நூலாகும். சுவடிப் பதிப்பு இரண்டு நிலைகளில் அமையும். இதுவரை வெளிவராத சுவடிகளைப் (நூல்களை) பதிப்பிப்பது ஒன்று. வெளிவந்த நூல்களாயின் ஓலைச் சுவடிகளோடும், பிற பதிப்புகளோடும் ஒப்புநோக்கிப் பதிப்பிப்பது மற்றொன்று. இவ்விரண்டுமே சுவடிப் பதிப்பு என்னும் நிலையில் சுட்டத்தக்கதாகும். பதிப்புலகில் சுவடிப்பதிப்புக்கு எனத் தனியொரு மதிப்புண்டு என்பதைக் கற்றோர் நன்கறிவர்.

சுவடிப்பதிப்பு உருவாக்கத் தொழில்நுட்பத்தின் நுண்மாண் சிறப்பின் விளைவுகள் பதிப்புக் கலையென மிளிர்கின்றன. பதிப்பியல் கலைஞர்கள் என்போர் சுவடிப் பதிப்புக்கலை வல்லுநராகவே இருப்பர்.

# சுவடியியல் நூல்களில் பதிப்பாசிரியர்கள்

## உரையாசிரியர்கள்

1968இல் வெளிவந்த உரையாசிரியர்கள் என்ற நூலில் மு.வை. அரவிந்தன் அவர்கள் பதிப்பாசிரியர்கள் பற்றிய ஆய்விற்குத் தோற்றுவாய் செய்துள்ளார் எனலாம். இவர்தம் நூலுக்கு மதிப்புரை வழங்கிய சி. பாலசுப்பிரமணியன்

> *பதிப்பாசிரியர்கள் என்ற தலைப்பு தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு அரண் செய்வதாகும்.*[1]

என்று குறிப்பிடுகின்றார்.

பதிப்பாசிரியர்களின் நுண்மாண் சிறப்புகளையும் பாராட்டு வதற்கு முன் அச்சு நூல்களுக்கு ஆதாரமாக விளங்கும் சுவடி எழுதும் கலையை நினைவுகூர்கிறார். பதிப்பியல் என்பது சுவடிக் கலை, அச்சுக்கலை, பதிப்புக்கலை என்னும் மாபெரும் கலைகளின் சங்கமம் என்பதை இவர்தம் ஆய்வில் வெளிப்படுத்துகின்றார்.

சுவடி எழுதியோரை மட்டுமல்ல, துளையிட்டு, கயிறுகட்டி, சட்டம் சேர்த்து வைத்தவர்களை, சுவடிகளில் மை தடவிப் பாதுகாத்தவர்கள் என ஒவ்வொருவரையும் நினைத்து அவர்கள் ஆற்றிய அரும்பணிகளை நினைத்து நினைத்து நெஞ்சம் உருகுகின்றார்.

> *அச்சுக்கலை தோன்றாத காலத்தில் எழுதும் கலை எவ்வளவு அரிதாக இருந்திருக்கும். பனையோலைகளில் எழுத்தாணியின் உதவியால் பல நூறு பக்கங்களைக் கொண்ட நூல்களை எண்ணெய் விளக்கின் முன்னால் உட்கார்ந்து கொண்டு கைவலிக்க வலிக்க எழுதியவர் களைப் பெருந்தொண்டர்கள் என்று போற்ற வேண்டும். அவர்கள் எழுதியெழுதிக் குவித்த ஏடுகளை ஒன்றன் பின் ஒன்றாக அடுக்கித்*

---

1. மு.வை. அரவிந்தன், உரையாசிரியர்கள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1968, ப. 32.

> *துளையிட்டு, கயிறுகட்டி மேலே சட்டம் சேர்த்து வைத்தவர்களை மதிக்க வேண்டும். எழுத்துக்களின் மீது மை தடவி எளிதில் படிக்கும் நிலையில் வைத்துக் காத்தவர்களை என்றும் நினைக்க வேண்டும்.*[2]

என்று உரைநடைக் கவிதை போல் உள்ளத்து உணர்ச்சிகளை ஓவியமாய், வரைந்து காட்டுகின்றார்.

பழைய நூல்களை அச்சிட முயன்ற பெரியவர்களை, அவர்கள் பட்ட இன்னல்களைத் தொட்டுக் காட்டுவதும் இவண் சுட்டிக் காட்டத்தக்கதாகும்.

> *பனையோலைகளில் இருந்த நூல்களை அச்சேற்றி வெளியிட அரும்பாடுபட்ட அறிஞர் பெருமக்கள் பலராவர். அவர்கள் உழைப்பும் முயற்சியும் இன்று நம் கற்பனைக்கும் எட்டாதவை. அவர்களுக்கு ஏற்பட்ட இடையூறுகள் சொல்லில் அடங்காதவை.*[3]

என்று ஏடு தேடிப் பீடுபுகழ் பெற்ற தமிழ்ப் பெரியவர்களின் அரும்பணிகளைச் சுருக்கமாகவும் உருக்கமாகவும் கூறுகின்றார்.

"பதிப்பாசிரியர்கள்" என்ற தலைப்பில் பல பதிப்பாசிரியர்கள் பற்றி மு.வை. அரவிந்தன் குறிப்பிடுகின்றார். இப்பெருமக்கள் பற்றிய குறிப்புகளை மூன்று நிலைகளில் வெளிப்படுத்துகின்றார்.

1. பத்தொன்பதாம் நூற்றாண்டுப் பதிப்பாசிரியர்கள் என்ற நிலையில் இராமானுசக் கவிராயர், சரவணப் பெருமாள் ஐயர், கந்தசாமி ஐயர், மயிலை சண்முகம்பிள்ளை, கோவிந்த பிள்ளை, தி.பி. ஸ்ரீநிவாச ராகவாச்சாரியார், சுப்பராயச் செட்டியார், வாசுதேவ முதலியார், சிதம்பர கவி ஆகிய 9 பேருடைய பெயர்ப்பட்டியலைக் குறிப்பிடுகின்றார்.
2. இருபதாம் நூற்றாண்டுப் பதிப்பாசிரியர்கள் என்ற நிலையில் ரா. இராகவையங்கார், எஸ். வையாபுரிப்பிள்ளை,

---

2. மு.வை. அரவிந்தன், உரையாசிரியர்கள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1968, ப. 703.
3. மேலது, ப. 706.

வ.உ. சிதம்பரம்பிள்ளை, கா. நமச்சிவாய முதலியார், பின்னத்தூர் நாராயணசாமி ஐயர், இ.வை. அனந்தராமையர், கரந்தைக் கவியரசு ரா. வேங்கடாசலம் பிள்ளை, ச. பவானந்தம் பிள்ளை, தெ.பொ. பழனியப்பா பிள்ளை, ச. தண்டபாணி தேசிகர், மே.வி. வேணுகோபாலப் பிள்ளை ஆகிய பதினொரு பேருடைய பதிப்புப் பணிகளைத் தொலைவரிச் செய்திகள் போல் ஓரிரு வரிகளில் குறிப்பிடுகின்றார்.

3. காலம் காட்டாத நிலையில் ஆறுமுகநாவலர், சி.வை. தாமோதரம்பிள்ளை, உ.வே. சாமிநாத ஐயர் ஆகிய மூவருடைய பதிப்புப் பணிகளைச் சற்று விரிவாக ஒரு பக்க அளவில் குறிப்பிடுகின்றார்.

உரையாசிரியர்கள் பற்றிய அரியதொரு கலைக்களஞ்சியம் போன்ற நூலைத் தமிழ்கூறு நல்லுலகிற்குத் தந்த மு.வை. அரவிந்தன் பதிப்பாசிரியர்கள் குறித்தும் ஆழமாகச் சிந்தித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

> *பதிப்புக் கலையில் எண்ணிறந்த அறிஞர்கள் ஈடுபட்டுப் பணியாற்றியுள்ளனர். அவர்கள் அனைவரையும் குறிப்பிட்டு அவர்கள் செய்த தமிழ்ப் பணிபற்றித் தனியாக ஒரு நூலை இயற்றலாம்.*[4]

என்னும் இவர்தம் கூற்று பதிப்பாசிரியர்கள் குறித்து ஆழமாகச் சிந்தித்துள்ளார் எனச் சான்று பகரும்.

## அச்சும் பதிப்பும்

1980இல் மா.சு. சம்மந்தன் எழுதிய 'அச்சும் பதிப்பும்' என்ற நூல், குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இந்நூல் தமிழக அரசின் பரிசு பெற்றது. நூலாசிரியர் தமிழ்ப் பெரியார் திரு.வி.க. விருது பெற்றவர். இத்தனைக்கும் மேலாக இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய மகாவித்துவான் மே.வீ. வேணுகோபால பிள்ளை அவர்களின் கருத்துரை ஒரு மணிமகுடமாகும்.

---

4. மு.வை. அரவிந்தன், உரையாசிரியர்கள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1968, ப. 719.

*டாக்டர் பட்டம் பெற விழையும் பல்கலைக்கழக ஆய்வு மாணவர்களுக்கு இந்நூல் ஒரு சிறந்த கருவூலமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை. இது மட்டுமில்லாமல் பதிப்பாசிரியர்கள் பற்றிச் சிந்தித்துள்ளமையைச் சுட்டிக்காட்டிப் பயனுடையது.*

என்று பாராட்டுவதும் குறிப்பிடத்தக்கதாகும்.[5]

*நம் நாட்டிலுள்ள பழம் பதிப்பாளர்களைப் பற்றிய முழுவிவரங்களையும் ஆசிரியர் அரிதின் முயன்று தொகுத்துள்ளார் என்பதை அறிய முடிகிறது. காலவரிசைப்படி தொகுத்துள்ளது மிகவும் பயனுடையது.*[6]

பதிப்புகளுக்கு ஆதாரமாக விளங்குவதும் அச்சுக்கலைக்கு ஆதாரமாக விளங்குவதும் சுவடிகள். சுவடியியலில் மிக முக்கியமானவை சுவடி எழுத்துக்கள் என்னும் அடிப்படையில் தமிழ் எழுத்தின் வரலாற்றையும் வளர்ச்சியையும் நூலாசிரியர் எடுத்துக்காட்டி அச்சுக் கலையின் வரலாற்றையும் முற்கால அச்சகங்களின் நிலையையும் எடுத்துரைக்கின்றார். முற்கால அச்சகங்கள் என்பன முற்காலப் பதிப்பு நிறுவனங்களாகக் கொள்ளத்தக்கதாகும். பழங்காலப் பதிப்பு நிறுவனங்கள், பழந்தமிழ் நூற்பதிப்புகள், பழம் பதிப்பாளர்கள் எனப் பதிப்புலகையே வலம் வந்த பெருமை நூலாசிரியர் மா.சு. சம்பந்தனையே சாரும். பழங்காலக் கல்வி முறையையும் ஓலைச்சுவடி குறித்த செய்திகளையும் எடுத்துரைப்பது சுவடியியல் கல்வியில் நூல்களை மதிப்பிட்டுரைக்கும் நோக்கில் இந்நூலாசிரியர் பற்றி வே.இரா. மாதவன்,

*பதிப்புத் துறையில் உழைத்தவர்கள் என்ற நிலையில் பலரையும் அவர்களுடைய பணிகளைக் கொண்டு அளவிட்டுரைக்கின்றார். பதிப்புகளைப் பற்றியும் தனித்த நிலையில்*

---

5. மா.சு. சம்பந்தன், அச்சும் பதிப்பும், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1980, ப. 10.

6. மேலது, ப. 8.

*நின்று திறனாய்வு செய்வது இவருக்குரிய தனிப் பண்புகளாக விளங்கக் காண்கிறோம்.*[7]

எனப் பாராட்டுவதும் குறிப்பிடத்தக்கதாகும். மொத்தத்தில் அச்சும் பதிப்பும் என்னும் நூல் சுவடியியல் ஆர்வலர் ஒவ்வொருவரும் மெச்சத்தக்க நூல் என்பதில் இரண்டாம் கருத்துக்கு இடமில்லை.

இந்நூல் 12 இயல்களைக் கொண்டதாகும். இந்நூலின் பழம் பதிப்பாளர்கள் என்றும் 9ஆவது இயல் பண்டைய பதிப்பாசிரியர்களின் வரலாற்று நூல் என்று கருதத்தக்க அளவில் உள்ளது. இதில் பதிப்பாசிரியர்கள் பற்றி விரிவாகவும் விளக்கமாகவும் பல தகவல்களைத் தந்துள்ளார். இத்தகவல்களைக் கலைக் கண்ணோட்டத்தில் தந்திருப்பது பாராட்டத் தக்கதாகும். பதிப்பாசிரியர்கள் பற்றிய தகவல்களை அரிதின் முயன்று தொகுத்துள்ளார் என்பதை நூலை நோக்குவோர் நன்குணாலாம்.

மா.சு. சம்பந்தன் பழந்தமிழ்ப் பதிப்பாசிரியர்கள் என்றோ பண்டைய பதிப்பாசிரியர்கள் என்றோ தலைப்புத் தராமல் பழம் பதிப்பாளர்கள் என்று தலைப்புத் தந்துள்ளமை கூர்ந்து நோக்கத் தக்கதாகும். மேலும் பதிப்பாசிரியர்கள் பற்றி என்னென்ன செய்திகள் கூறமுடியுமோ அத்தனையும், நிறைவாகத் தந்துள்ளார். பதிப்பாசிரியர்களின் வரலாற்றுக்கும் அவர் பதிப்பித்த நூல்களுக்கும் முதன்மை கொடுத்துத் தகவல்களைத் தந்துள்ளார். பதிப்பாசிரியர் களின் பதிப்பு நெறிமுறைகளுக்கு முன்னுரிமை கொடுத்துள்ளார் என்று கூற இயலாது. சுவடியியல் கல்வி வளர்ச்சி பெறாத நிலையில் பதிப்பு நெறிமுறைகள் பற்றி அதிகம் பேசப்படாத காலக் கட்டத்தில் பதிப்பு நெறிமுறைகள் பற்றிச் சுட்டாது விடுத்திருக் கலாம். இருப்பினும், முற்கால அச்சடிப்புகள், சிறந்த அச்சகத்தினரும் பதிப்பினரும் என்னும் இயல்களில் அக்குறையை ஓரளவு போக்கி யுள்ளார் என்றும் கூறலாம்.

சுவடிகளை வகைப்படுத்துவதுபோல், பதிப்புகளை வகைப் படுத்துவது போல், பதிப்பாசிரியர்களை வகைப்படுத்த இயலுமா என்னும் ஆய்வு நோக்கில் பதிப்பாசிரியர் பற்றிய ஆய்வு நூல்

7. சுவடிப் பதிப்பு வரலாறு, தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச்சுவடித் துறை, கருத்தரங்கக் கட்டுரைகள், தஞ்சாவூர் 1994. சுவடியியல் நூல்கள், வே.இரா. மாதவன், ப. 110.

வரவேண்டும். அந்நூல் புதிய நோக்கில் பதிப்பாசிரியர்கள் பற்றிய நூலாக அமையும்.

## பதிப்புப் பார்வை

1983இல் அ. விநாயகமூர்த்தி அவர்கள் எழுதிய 'பதிப்புப் பார்வை' என்னும் நூல் சுவடியியல் நூல்களுள் குறிப்பிடத்தக்கதாகும். இவர் மூலபாடத் திறனாய்வு, ஐவரம்மானை, புத்தகக்கலை போன்ற சுவடியியல் நூல்களைத் தந்த அறிஞராவார். பதிப்புப் பார்வை என்னும் நூலில் 9 கட்டுரைகள் அமைந்துள்ளன. இந்நூலில் உள்ள தமிழ்ப் பதிப்பு முன்னோடிகள் என்னும் கட்டுரை பதிப்பாசிரியர்கள் பற்றிப் பேசுகிறது.

இக்கட்டுரைத் தலைப்புக்கேற்ப ஆறுமுகநாவலர், உ.வே. சாமிநாதையர், சி.வை. தாமோதரம்பிள்ளை, வ.உ. சிதம்பரம் பிள்ளை, பேரா. எஸ். வையாபுரிப்பிள்ளை ஆகியோர் பற்றிய சில தகவல்களையே நூலாசிரியர் தந்துள்ளார்.

அவர்கள் மட்டுமல்லாமல் பதிப்புப் பணி புரிந்தவர்கள் என்ற நிலையிலும் மேலும் குறிப்பிடத்தக்கவர்கள் என்ற நிலையிலும் 10 பதிப்பாசிரியர்களின் பெயர்களை மட்டும் குறிப்பிடுகின்றார்.

எஸ். பவானந்தம் பிள்ளை, காவேரிப்பாக்கம், நமச்சிவாய முதலியார், முன்னீர்ப்பள்ளம், எஸ். அனவரத விநாயகம் பிள்ளை, தி.க. கனகசுந்தரம் பிள்ளை, ப. சுப்பிரமணிய முதலியார், மு. இராகவையங்கார், வை.மு. சடகோபராமானுஜாச்சார்யர், வை.மு. கோபால கிருஷ்ணமாச்சார்யர், திரு.வி. கலியாண சுந்தரனார் போன்றோர் தமிழ் நூல்கள் பதிப்புப்பணி புரிந்தவர்களில் குறிப்பிடத்தக்கவராவர்.

## சுவடிப்பதிப்பு நெறிமுறைகள்

1989இல் வெளிவந்த சுவடிப்பதிப்பு நெறிகள் என்னும் தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு சுவடியியல் நூல்களில் குறிப்பிடத் தக்கதாகும். இந்நூலின் பதிப்பாசிரியர் த.கோ. பரமசிவம் ஆவார். இருபத்தொரு கட்டுரைகள் அமைந்த இந்நூலில் மூன்று கட்டுரைகள் மட்டும் பதிப்பாசிரியர் பற்றி நேரிடையாகப் பேசுகின்றன. பதிப்பாசிரியர்களின் கடமைகள் குறித்து ஒரு கட்டுரை அமைந்துள்ளது. ஏனைய இரண்டு கட்டுரைகளில் ஒன்று

பதிப்பாசிரியர் ஆறுமுக நாவலர் குறித்தும் மற்றொன்று பேரா. வையாபுரிப்பிள்ளை குறித்தும் அமைந்துள்ளன.

ஏறத்தாழ நூற்றுக்கு மேற்பட்ட பதிப்பாசிரியர்கள் உள்ள நிலையில் இருவர், மூவர் பற்றிப் பேசுவது பதிப்பாசிரியர்கள் பற்றிய ஆய்வாகாது என்பது எளிதில் புலனாகும்.

மேலும் இத்தகைய நூலில் பழந்தமிழ்ப் பதிப்புகள், சங்க இலக்கியப் பதிப்புகள், சோதிடச் சுவடிகளின் பதிப்புகள், மருத்துவச் சுவடிகள் பதிப்பு முறைகள் போன்ற கட்டுரைகளில் பதிப்பாசிரியர்கள் மறைமுகமாகப் பேசப்படுகின்றனர் என்பதும் மறுக்க முடியாத உண்மையாகும். இலக்கிய இலக்கணப் பதிப்பாசிரியர்கள் போல் சோதிட நூல் பதிப்பாசிரியர், மருத்துவ நூல் பதிப்பாசிரியர் போன்றோர் பதிப்புப் பணிகளும் அவர்தம் பதிப்பு நெறிமுறைகளும் கருத்தில் கொள்ளத்தக்கதாகும்.

**சுவடிக்கலை**

1991இல் புலவர் இரா. இளங்குமரனால் எழுதப்பட்டு, சேலம் அரிமாப் பதிப்பகத்தால் வெளியிடப்பட்ட சுவடிக்கலை குறிப்பிடத்தக்க நூலாகும். இந்நூல் அச்சும் பதிப்பும் சுவடி ஆர்வலர்கள் மெச்சத்தக்கதாகும்.

இந்நூலின் 9ஆவது கட்டுரை பழந்தமிழ்ப் பதிப்பாளர்கள் என்னும் தலைப்பில் அமைந்துள்ளது. எனினும் ஆறுமுக நாவலர், சி.வை. தாமோதரம் பிள்ளை, உ.வே. சாமிநாதையர், எஸ். வையாபுரிப் பிள்ளை ஆகிய நால்வரைப் பற்றியே இத்தலைப்பில் பேசப்படுகின்றது. கட்டுரையின் தொடக்கத்திலே நூலாசிரியர் நோக்கத்தைக் குறிப்பிட்டு விடுகின்றார்.

> *இவ்வரிசையில் (பழந்தமிழ்ப் பதிப்பாளர்கள்) இடம்பெறத் தக்கார் பலராவர். எனினும் ஒரு நால்வர் இவண் குறிக்கப் பெறுகின்றனர்.*[8]

பதிப்புப் பணி என்னும் பிறிதோர் தலைப்பில் பழந்தமிழ் நூற்பதிப்புகளை விரிவாகவும் விளக்கமாகவும் கூறுகின்றார். அக்கட்டுரையில் பல பதிப்பாசிரியர்கள் குறிப்பிடப்படுகின்றனர்.

---

8. புலவர் இரா. இளங்குமரன், சுவடிக்கலை, அரிமாப் பதிப்பகம், சேலம், ப. 134. 1991.

எனினும் பதிப்பாசிரியர்களுக்கு ஈண்டு முன்னுரிமை கொடுத்துள்ளார் என்று கூறுவதற்கில்லை. 367 பக்கங்களைக் கொண்ட இந்நூலில் ஏறத்தாழ 140 பக்கங்கள் பழந்தமிழ் நூற்பதிப்புகள் பற்றிக் கூறுவது இந்நூலின் சிறப்பம்சமாகும். பழந்தமிழ் நூல்களை நேரிடையாகக் கண்டு தகவல்களை அரிதின் முயன்று தொகுத்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

சுவடிகளை எழுதியவர்கள், சேகரித்தவர்கள், அவற்றைப் பாதுகாத்தவர்கள், சுவடிகளைப் பதிப்பித்தவர்கள் என்னும் பல்திறத்தாரையும் ஏடு போற்றிய பீடுடையாளர், ஏடு தொகுத்த ஏந்தல்க்ள், பழந்தமிழ்ப் பதிப்பாளர்கள் என்னும் தலைப்புகள் இவர்தம் சுவடிக் காதலை வெளிப்படுத்துவதாக உள்ளன.

**சுவடியியல்**

1991இல் பூ. சுப்பிரமணியம் எழுதி உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தால் வெளியிடப்பட்ட நூல் சுவடியியல் என்பதாகும். இந் நூலில் பதிப்பு முன்னோடிகள் என்னும் நிலையில் சி.வை. தாமோதரம் பிள்ளை, உ.வே. சாமிநாதையர், எஸ். வையாபுரிப்பிள்ளை ஆகிய மூவர் பற்றி அதிகம் பேசப்படுகிறது. இம்மூவரை மட்டும் எடுத்துக் கொண்டதற்கான காரணத்தையும் குறிப்பிடுகின்றார். பதிப்புப்பணி மேற்கொள்வோருக்கு இம்மூவரின் பதிப்பு நெறிமுறைகள் போதுமான வழிகாட்டியாக அமையும் என்பது நூலாசிரியர் கருத்தாகும்.

> *இம்மூவரின் அனுபவங்கள் பதிப்புப்பணி மேற் கொள்வோருக்குப் போதுமான வழிகாட்டி களாக அமையுமாதலின் அவை மட்டும் எடுத்துக்கொள்ளப் பெறுகின்றன.*[9]

என்னும் நூலாசிரியரின் கருத்து ஏற்புடையதாகும். பதிப்புப் பணி மேற்கொள்வோருக்கு இம்மூவரின் அனுபவங்களும் போதுமானவை. பதிப்பாசிரியர்கள் பற்றிய ஆய்விற்கு இம்மூவரைப் பற்றிய செய்திகள் மட்டும் போதுமானதாகா.

ஏறத்தாழ 50 சுவடிப் பதிப்பாசிரியர்களின் பெயர்களைக் கால அடிப்படையில் பின்னிணைப்பாகத் தந்துள்ளமை பாராட்டத் தக்கதாகும். பதிப்பாசிரியர் என்ற சொல்லுக்குப் பெருமை சேர்த்தவர்கள் சுவடிப் பதிப்பாசிரியர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

---

9. பூ. சுப்பிரமணியம், சுவடியியல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1991, ப. 214.

## புத்தகக் கலை

1999இல் பேரா. அ. விநாயகமூர்த்தி எழுதிய புத்தகக்கலை பாலமுருகன் பதிப்பக வெளியீடாக வந்துள்ளது. இந்நூலின் 9 கட்டுரைகளுள் ஒன்று 'பதிப்பாசிரியர்' பற்றியதாகும்.

நூல் பதிப்பாசிரியர் பற்றியதாகவோ சுவடிப் பதிப்பாசிரியர் பற்றியதாகவோ அமையவில்லை. பத்திரிக்கைத் துறையில் பணியாற்ற விழைவோர்க்கு வழிகாட்டும் வகையில் பல தகவல்களைத் தந்துள்ளார் என்று கூறலாம்.

பதிப்பாசிரியர்கள் பற்றிய வகைதொகை பற்றிய ஆய்வுக்கு இங்கு இடமில்லை. பண்டைய பதிப்பாசிரியர்களின் பன்மாண் சிறப்புகளோ, நுண்மாண் நுழைபுலமோ சிந்திக்கப் பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## சுவடிப் பதிப்பகம்

2000இல் வே.இரா. மாதவன் எழுதி வெளியிட்டுள்ள சுவடிப் பதிப்பியல், சுவடியியல் நூல்கள் குறிப்பிடத்தக்கதாகும். இந்நூலின் பதினாறு கட்டுரைகளுள் ஒன்று, 'பழந்தமிழ் நூல் பதிப்பாசிரியர்கள்' பற்றிய கட்டுரையாகும். இருபது பக்கங்களில் அமைந்த இக்கட்டுரையில் ஏறத்தாழ எழுபது பதிப்பாசிரியர்கள் பற்றிப் பேசப்படுகிறது. ஒவ்வொரு பதிப்பாசிரியரும் பதிப்பித்த நூல்களைச் சுட்டிக்காட்டி, தொலைவரிச் செய்திபோல் பதிப்பாசிரியர்கள் பற்றி இக்கட்டுரை அமைந்துள்ளது எனலாம்.

சுவடியியல் நூல்களுள் பதிப்பாசிரியர்கள் பற்றி எண்ணிக்கையளவில் அதிகமாகப் பேசும் நூல்கள் இரண்டாகும். அவற்றுள் ஒன்று மா.சு. சம்பந்தன் எழுதிய 'அச்சும் பதிப்பும்' என்னும் நூலாகும். மா.சு. சம்பந்தன் ஏறத்தாழ 150 பக்கங்களில் 104 பதிப்பாசிரியர்கள் பற்றிப் பேசுகின்றார். வே.இரா. மாதவன் பழந்தமிழ் நூல் பதிப்பாசிரியர்கள் என்னும் தலைப்பில் 20 பக்கங்களில் 70 பதிப்பாசிரியர்கள் பற்றிப் பேசுகின்றார். முன்னது விரிவாகவும், விளக்கமாகவும் உள்ளது. பின்னது சுருக்கமாக அமைந்துள்ளது என்பதே இவ்விரண்டிற்குமுள்ள வேறுபாடாகும்.

2001இல் புலவர் இரா. இளங்குமரன் எழுதிய சுவடிப் பதிப்பியல் வரலாறு, மெய்யப்பன் தமிழாய்வக வெளியீடாக வந்துள்ளது. சுவடியியல் கருவி நூல்களுள் குறிப்பிடத்தக்கது

என்பதில் கருத்து வேறுபாடில்லை. மிகச் சிறந்த சுவடியியல் நூல் என்பதிலும் இரண்டாம் கருத்துக்கு இடமில்லை. இருப்பினும் சேலம் அரிமாப் பதிப்பகம் சுவடிக்கலை என்ற பெயரில் வெளியிட்டுள்ள நூலுக்கும் மெய்யப்பன் தமிழாய்வக நூலாக வந்துள்ள சுவடிப் பதிப்பியல் வரலாறு என்னும் நூலுக்கும் அதிகம் வேறுபாடில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மெய்யப்பன் தமிழாய்வக நிறுவனம் பேராசிரியர் பதிப்புச் செம்மல் ச. மெய்யப்பன் வழங்கிய 'ஒரு நூற்றாண்டுப் பதிப்பு வரலாறு' என்னும் உரை இந்நூலுக்குப் பதிப்புரை போலவும் அணிந்துரை போலவும் மணிமகுடமாக அணி செய்கிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

> *பதிப்பு முயற்சிகளில் ஈடுபட்டோர் பதிப்புப் பணியைத் தம் வாழ்நாள் பணியாகச் செய்தனர்*[10]

என்னும் கருத்து முற்றிலும் ஏற்றுக்கொள்ளத்தக்கதாகும். இது மட்டுமல்ல.

> *ஓலைச்சுவடிப் பதிப்பு வரலாறு மிக விரிவானது. பல நிலைகளில் பன்முகங்களாகக் கொண்டது. ஏட்டிலிருந்த இலக்கியங்களை அச்சில் கொணர்ந்தவர்கள் நம் வழிபாட்டிற்கும் வணக்கத்திற்கும் வாழ்த்துக்கும் உரியவர்கள்*[11]

என்னும் மெய்யப்பன் கூற்று நெஞ்சில் நிறுத்தவேண்டிய வைர வரிகளாகும்.

## பேரா. மு. சண்முகம் பிள்ளையின் பதிப்புப்பணி

2004–இல் முனைவர் சி. இலட்சுமணன் எழுதி ஐந்திணைப் பதிப்பக வெளியீடாக வந்துள்ள பேரா. மு. சண்முகம் பிள்ளையின் பதிப்புப்பணி என்னும் நூல் சுவடியியல் நூல்களுள் குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நூல் பேரா. மு. சண்முகம்பிள்ளை அவர்களின் 24 சுவடிப் பதிப்புகளைப் பற்றி ஆராய்கிறது. பேரா. மு. சண்முகம் பிள்ளையின் பதிப்பு நெறிமுறைகள் விளக்கப்பட்டுப் பதிப்பு வகைகளின் அடிப்படைக் கோட்பாடுகள் வரையறுத்துக் காட்டப்பட்டுள்ளன.

---

10. இரா. இளங்குமரன், 'சுவடிப் பதிப்பியல் வரலாறு', மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம், 2001, ப. 4.
11. மேலது, ப. 3.

இத்தனைக்கும் மேலாகப் பதிப்பு வரலாற்றில் குறிப்பிடத் தக்க சுவடிப் பதிப்பாளர்கள் பற்றியும் பேசப்படுகின்றது. எண்ணிக்கை அளவில் குறைந்த பதிப்பாசிரியர்கள் பற்றிப் பேசப்பட்டாலும் பதிப்பாசிரியர்களின் பதிப்பு நெறிமுறைகள் அடிப்படையில் சுவடிப் பதிப்பு வரலாறு சுட்டப்படுவது இந்நூலின் சிறப்பம்சமாகும்.

சுவடிப் பதிப்பு வரலாற்றில் பேரா. மு. சண்முகம் பிள்ளை என்னும் நிலையில் ஈண்டுச் சுவடிப்பதிப்பு வரலாறு மிகச் சுருக்கமாக அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும். ஏறத்தாழ 20 ஆண்டுகளுக்கு முந்தைய ஆய்வுகளின் வெளிப்பாடு இந்நூல் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

நூற்றுக்கு மேற்பட்ட பதிப்பாசிரியர்கள் பற்றிய தகவல்கள் கிடைத்த நிலையில் அகர வரிசையில் அமைந்த பதிப்பாசிரியர்களின் பெயர்ப்பட்டியல் நூலின் பின் இணைப்பில் தரப்பட்டுள்ளது. இயன்றவரை பதிப்பாசிரியர்களின் கால வரையறையும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இருப்பினும் கால அடிப்படையிலும் மற்றுமொரு பெயர்ப்பட்டியல் தந்திருக்கலாம் என்பது இன்றைய எண்ணத்தின் வெளிப்பாடாகும். இந்நூல் சுவடிப் பதிப்புப் பணிகளில் ஈடுபட விழைவோர்க்குப் பயனுள்ள நூல் என்பது சுவடியியல் வல்லுநர்களின் கருத்தாகும்.

### பதிப்பியல் நெறிமுறைகள்

2003இல் ம.சா. அறிவுடைநம்பி, சி. இலட்சுமணன் ஆகியோரைப் பதிப்பாசிரியர்களாகக் கொண்டு இரண்டு சுவடியியல் நூல்கள் வெளிவந்துள்ளன. ஒன்று 'பதிப்பியல் நெறிமுறைகள்', மற்றொன்று 'சுவடிப் பதிப்பாசிரியர்கள்' என்பதாகும்.

இந்நூலில் அமைந்துள்ள சிற்றிலக்கியப் பதிப்பாசிரியர்கள் என்னும் கட்டுரை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும். பதிப்பாசிரியர்கள் பன்மையில் குறிக்கப்பட்டிருந்தாலும் இருவர் பற்றியே பேசப்படுகிறது. ஒருவர் டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர்; மற்றொருவர் சரஸ்வதி மகால் நூலகத்தில் சிற்றிலக்கியங்கள் பலவற்றைப் பதிப்பித்தப் புலவர் சொக்கலிங்கம் என்பவராவார்.

இவை மட்டுமல்லாமல் பு.ரா. புருஷோத்தம நாயுடு, வே.ரா. தெய்வ சிகாமணிக் கவுண்டர், திரு.வி.க. ஆகியோரைப் பற்றிய கட்டுரைகளும் தனித்தனியாக அமைந்துள்ளன. இத்தனைக்கும்

மேலாகச் சுவடியியல் நூல்கள் பலவற்றைத் தமிழ்கூறு நல்லுகிற்குத் தந்த அ. விநாயகமூர்த்தி அவர்கள் எழுதிய, 'பதிப்பாசிரியர் பணிகள்' என்னும் கட்டுரை இந்நூலிற்கு அணிசேர்ப்பதாக அமைந்துள்ளது.

இசைப் பதிப்புகள் என்னும் கட்டுரையில் இசை நூல் பதிப்பாசிரியர்கள் பற்றிய தகவல்கள் தரப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

## சுவடிப் பதிப்பாசிரியர்கள்

2003இல் சி. இலட்சுமணன், ம.சா. அறிவுடைநம்பி ஆகியோரைப் பதிப்பாசிரியர்களாகக் கொண்டு வெளிவந்த சுவடிப் பதிப்பாசிரியர்கள் என்னும் கட்டுரைத் தொகுப்பு நூலும் குறிப்பிடத்தக்கதாகும்.

நூலின் தலைப்பைக் கேட்ட மாத்திரத்தில் நூற்றுக்கு மேற்பட்ட பதிப்பாசிரியர்கள் பற்றிய நூலென்று நினைக்கத் தோன்றும். இந்நூல் ஒரு பொருள்பட ஒருவர் எழுதிய நூலன்று. பல கட்டுரைகளின் தொகுப்பு. நிரல்பட அக்கட்டுரைகள் அமைந்திருக்க வாய்ப்பில்லை.

இந்நூலில் எட்டுப் பதிப்பாசிரியர்கள் பற்றிய கட்டுரைகள் உள்ளன. ஆறுமுக நாவலர், வ.உ. சிதம்பரனார், மு. சண்முகம் பிள்ளை, சி.வை. தாமோதரம் பிள்ளை, பாகனேரி காசி விசுவநாதன் செட்டியார், தி.அ. முத்துசாமிக் கோனார், க.ம. வேங்கடராமையா, பின்னத்தூர் நாராயண சாமி ஐயர் எனும் இவர்களுள் ஐவர் பதிப்புலகு நன்கறிந்தவராவர்.

இவை மட்டுமல்லாமல் தொல்காப்பிய எழுத்ததிகாரப் பதிப்பாசிரியர்கள், தேவாரப் பதிப்பாசிரியர்கள், சிலப்பதிகாரப் பதிப்பாசிரியர்கள், சித்த மருத்துவப் பதிப்பாசிரியர்கள் பற்றிய கட்டுரைகள் குறிப்பிடத்தக்கனவாகும். பதிப்பு நிறுவனங்களை அடியொற்றி உலகத் தமிழாராய்ச்சி நிறுவனப் பதிப்பாசிரியர்கள், அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகப் பதிப்பாசிரியர்கள், தருமபுரி ஆதீனச் சுவடிப் பதிப்பாசிரியர்கள் போன்ற கட்டுரைகளும் குறிப்பிடத்தக்கதாகும். இருப்பினும் பதிப்பாசிரியர்களைப் பற்றிய முழுமையான நூலாகக் கருத இயலாது என்பதில் ஐயமில்லை.

# யாழ்ப்பாணத்துப் பதிப்பாசியர்கள்

தமிழ் நூற்பதிப்பு வரலாற்றில் யாழ்ப்பாணத்துப் பதிப்பாசிரிய பெருமக்களும் அங்குள்ள பதிப்பு நிறுவனங்களும் குறிப்பிடத் தக்கனவாகும். ஏறத்தாழ இருபத்தைந்திற்கும் மேற்பட்டோர் யாழ்ப்பாணத்துப் பதிப்பாசிரியர்களாகக் காணப்படுகின்றனர்.

அம்பலவாண பண்டிதர், அம்பலவாண நாவலர், அருணாசல சதாசிவம் பிள்ளை, ஆறுமுக நாவலர், கு. கதிரைவேற்பிள்ளை, சபாபதி, குமாரசுவாமிப் புலவர், சி. கணேச ஐயர், த. கனகசுந்தரம், முத்துத்தம்பிப் பிள்ளை, சி.வை. தாமோதரம்பிள்ளை, சுவாமி ஞானப்பிரகாசர், வி. கனகசபைப்பிள்ளை, விபுலானந்த அடிகள், ச. பவானந்தம் பிள்ளை, வி. கந்தப்பிள்ளை, மு. திருவிளங்க தேசிகர், ஈசானசிவன், அ. செல்லதுரை, சுசீந்திரராசா, ஆ. சபாரத்தினம், கா. சிவத்தம்பி, சி. பத்மநாதன், பொ. பூலோக லிங்கம், ப. புஷ்பரட்ணம் போன்றோர் யாழ்ப்பாணத்துப் பதிப்பாசிரியர்களாவர்.

வித்தியாநுபாலன யந்திர சாலை, சோதிடப் பிரகாச அக்கயந்திரசாலை, யாழ்ப்பாணம் கூட்டுறவுத் தமிழ் நூற்பதிப்பு விற்பனைக் கழகம், யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை, கொழும்பு விவேகானந்த சபை, கமலாசனி அச்சு நிலையம், கலாநிதி யந்திர சாலை, சிவதொண்டன் நிலையம், இந்துசமயக் கலாச்சார அலுவலர்கள், திணைக்களம் போன்றவை யாழ்ப்பாணத்துப் பதிப்பு நிறுவனங்களாகும். இவை மட்டுமல்லாமல் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகமும் பல்வேறு பதிப்புகளை வெளியிட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## யாழ்ப்பாணம் கோப்பாய் அம்பலவாண பண்டிதர்

இவர் இரண்டு வெண்பா நூல்களைப் பதிப்பித்துள்ளார். ஒன்று நல்லை வெண்பா. மற்றொன்று நீராவிக் கலிவெண்பா ஆகும். அம்பலவாணர் பெயரில் இருவர் உள்ளனர். பண்டிதர் நாவலர் என்னும் முன்னொட்டுகளே இவ்விருவரையும் வேறுபடுத்துகின்றன.

**யாழ்ப்பாணம் பட்டுக்கோட்டை அம்பலவாண நாவலர்**

இவர் சொற்பொழிவாற்றுவதில் வல்லவர். நல்ல மொழிபெயர்ப்பாளர். இவர் திருச்சுழியல் புராணம், நடன வாத்திய ரஞ்சனம், சண்முக சடாச்சரப் பதிகம் போன்ற நூல்களைப் பதிப்பித்துள்ளார்.

**யாழ்ப்பாணம் மன்னிப்பாய் அருணாசல சதாசிவம்பிள்ளை**

இவர் உதயதாரகை என்னும் இதழ்ப் பதிப்பாசிரியர். உரிச்சொல் நிகண்டு என்னும் நூலையும் பதிப்பித்துள்ளார். சாதரண இதிகாசம், இந்துதேச சரித்திர நூல், வான சரித்திரம், பாவலர் சரித்திர தீபகம், இல்லற நொண்டி போன்ற நூல்களையும் பதிப்பித்துள்ளார்.

**யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர்**

இவர் பரிசோதித்தும், புத்துரையாற்றியும், புதிதாய் எழுதியும் பதிப்பித்த நூல்கள் ஏறத்தாழ எழுபது எனலாம். அவற்றை இலக்கணப் பதிப்புகள், இலக்கியப் பதிப்புகள், சமய நூற் பதிப்புகள் என மூன்று வகைப்படுத்தலாம்.

சூடாமணி நிகண்டு, சௌந்தரிய லகரி, நன்னூல், திருச்செந்தூர் நீரோட்டக யகமவந்தாதி, திருமுருகாற்றுப்படை, கோயிற்புராணம் போன்றவை இவர் உரையெழுதிப் பதிப்பித்த நூல்களாகும். திருவாசகம், திருக்கோவையார் முதலிய நூல்களின் மூலத்தை மட்டும் பதிப்பித்துள்ளார்.

நன்னூல், இலக்கணக் கொத்து, இலக்கண விளக்கச் சூறாவளி, தொல்காப்பியச் சூத்திரவிருத்தி போன்றவை இவர்தம் பதிப்புகளாகும். திருமுருகாற்றுப்படை, கந்தபுராண வசனம், திருவிளையாடற் புராண வசனம், கோயிற் புராணம் போன்றவை இவர்தம் சமய நூற் பதிப்புகளாகும்.

*ஆறுமுக நாவலர் நூலாசிரியராகவும், உரையாசிரியராகவும், பதிப்பாசிரியராகவும் சமயச்சொற்பொழிவாளராகவும் விளங்கியுள்ளார்.*[1]

---

1. அச்சும் பதிப்பும், மா.சு. சம்பந்தன், மணிவாசகர் பதிப்பகம், 1997 ப. 186.

ஆறுமுக நாவலரின் தமிழ்த் தொண்டும், சமயத் தொண்டும் காலத்தை வென்று நிற்கும்.

*தமிழ் நூல்களைப் பிழையில்லாமலும் திருத்தமாகவும் அழகாகவும் முதன்முதல் அச்சிட்ட பெருமை ஆறுமுக நாவலரையே சாரும்.*[2]

*நாவலர் பதிப்பு நெறிமுறைகள் அவரது பதிப்புகளுக்குச் சிறப்புத் தருவனவும் படிப்பார்க்கு அவரது பரந்துபட்ட அறிவைக் காட்டுவனவாயும் உள்ளன.*[3]

நாவலரின் சமயத் தொண்டும் தமிழ்த் தொண்டும் இரு கண்கள் என்று கூறலாம். அவர்தம் பதிப்புத் தொண்டு ஒரு ஊட்டமாகத் திகழ்ந்தது என்பதற்குப் பின்வரும் கூற்றே சான்றாகும்.

*ஆறுமுக நாவலரின் தமிழ்த் தொண்டும் சமயத் தொண்டும் தமிழ்ப் பதிப்புத் தொண்டும் என்றென்றும் மறக்க முடியாதவை என்பது மட்டுமல்ல நினைத்துப் போற்றக் கூடியவை.*[4]

நாவலர் ஆற்றிய தமிழ்ப் பணிகள் ஏராளம் என்பதில் இரண்டாம் கருத்துக்கு இடமில்லை. தமிழகத்திலும் யாழ்ப்பாணத்திலும் அவர் ஆற்றிய முப்பெரும் (சமயம், தமிழ், பதிப்பு) தொண்டுகளும் காலம் உள்ளவரை அவர்தம் புகழ் பரப்பும்.

*தமிழ் இலக்கிய வரலாறு எழுதுவோரால் தவிர்க்க இயலாத யாழ்ப்பாணத் தமிழர் ஒருவரின் பெயர் தான் ஆறுமுக நாவலர்.*[5]

என்னும் ஆராய்ச்சி அறிஞரின் கூற்று மிகவும் பொருத்தமாகும்.

---

2. அச்சும் பதிப்பும், மா.சு. சம்பந்தன், மணிவாசகர் பதிப்பகம், 1997, ப. 189.
3. சுவடிப் பதிப்பு நெறிமுறைகள், த.கோ. பரமசிவம் (ப.ஆர்.), ஆறுமுக நாவலரின் பதிப்பு முறைகள், சி. இலட்சுமணன் (க.ஆ.), தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1989, ப. 167.
4. அச்சும் பதிப்பும், மா.சு. சம்பந்தன், மணிவாசகர் பதிப்பகம், 1997, ப. 192.
5. சுவடிப் பதிப்பாசிரியர்கள், ம.சா. அறிவுடைநம்பி, சி. இலட்சுமணன் (ப. ஆர்.), தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 2003, ப. 8.

**யாழ்ப்பாணம் கு. கதிரைவேற்பிள்ளை**

யாழ்ப்பாணத்துப் பதிப்பாசிரியர்களில் இருவர் கதிரைவேற் பிள்ளை என்ற பெயரில் உள்ளனர். இருவருமே இருபெரும் தமிழ் அகராதிகளை உருவாக்கியவராவர். இவ்விருவரையும் வேறுபடுத்திப் பார்க்க உதவுவது 'கு', 'நா' என்னும் முதல் எழுத்துக்களாகும்.

அகராதி வரலாற்றில் கு. கதிரைவேற் பிள்ளை அகராதிக்குத் தனி இடம் உண்டு. மதுரைத் தமிழ்ச் சங்கம் வெளியிட்ட தமிழ்ச் சொல் அகராதி பிள்ளை அவர்கள் தொகுத்துக் கொடுத்ததாகும். இவர் பதிப்பித்த தர்க்க சூடாமணி பதிப்பு வரலாற்றில் குறிப்பிடத் தக்கதாகும்.

**யாழ்ப்பாணம் புலோலியூர் நா. கதிரைவேற்பிள்ளை**

சைவ சந்திரிகை, சைவ சித்தாந்தச் சுருக்கம், சிவாலய மகோற்சவ விளக்கம், கருப்பூர் மான்பியம், கதிர்காமக் கலம்பகம் போன்றவை இவர் எழுதிப் பதிப்பித்த நூல்களாகும். கூர்ம புராண விரிவுரை, பழநித் தலபுராண விரிவுரை, சிவபுராண விரிவுரை போன்றவை இவர் பதிப்பித்த புராண உரை நூல்களாகும். இவர் உருவாக்கிய தமிழ்ப் பேரகராதி, யாழ்ப்பாண அகராதி என்னும் பெயரில் வெளிவந்துள்ளது. இவர் வடமொழி, தமிழ்மொழி ஆகிய இருமொழிப் புலமைமிக்கவர். இவர் மிகச் சிறந்த சொற்பொழிவாளர் மட்டுமல்ல அட்டாவதானம் செய்வதிலும் வல்லவராக விளங்கினார்.

**யாழ்ப்பாணம் வடகோவை சபாபதி நாவலர்**

இவர் மகாவித்துவான், நாவலர் என்னும் இருபெரும் பட்டங்களைப் பெற்றவர். இவர் ஆங்கிலம் அறிந்தவர். மிகச் சிறந்த தமிழாசிரியர். ஞானாமிர்தம் என்னும் இதழின் பதிப்பாசிரியர். சதுர்வேத தாத்பரிய சங்கிரகம், பாரத தாத்பரிய சங்கிரகம், இராமாயண தாத்பரிய சங்கிரகம், சிவகர்ணாமிர்தம் போன்றவை இவர் வடமொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்த்த நூல்களாகும்.

இயேசு மத சங்கற்ப நிராகரணம், இலக்கண விளக்கப் பதிப்புரை மறுப்பு, சித்தாந்த மரபு கண்டனம், வைதீக காவிய நூலுரை மறுப்பு போன்றவை இவர்தம் கண்டன நூல்களாகும்.

இவற்றுக்கும் மேலாக, சிதம்பர புராணம், திருச்சிற்றம்பல யமக அந்தாதி, திருவிடைமருதூர் பதிற்றுப்பத்தந்தாதி, மாவை அந்தாதி, நல்லைச் சுப்பிரமணிய கடவுள் பதிகம் போன்ற நூல்களை எழுதிப் பதிப்பித்துள்ளார்.

சபாபதி நாவலர் ஞானாமிர்தம் இதழின் பதிப்பாசிரியர்; திராவிடப் பிரகாசிகை என்னும் நூலின் தொகுப்பாசிரியர். மிகச் சிறந்த தமிழாசிரியர்; மும்மொழிப் புலன் மிக்கவர். பண்டைய பதிப்பாசிரியர்கள் எத்தகைய ஆற்றல் பெற்றவர்கள் என்பதற்கு நாவலரின் பன்மாண் சிறப்பும் நுண்மாண் நுழைபுலமும் சான்றாகும்.

**யாழ்ப்பாணம் சுன்னாகம் குமார சுவாமிப் புலவர்**

> *இருபதாம் நூற்றாண்டு உலக அறிஞர்கள் படைப்புகளில் விரிவாக ஆராயப்பட வேண்டியவை குமாரசாமியின் நூல்கள். ஆயிரம் ஆண்டுகட்குப் பிறகும் இவர்தம் நூல்கள் பழமையைப் பளிச்சிடச் செய்யும் ஒளியாக உதவும்.*[6]

என்னும் கூற்று இவர்தம் பெருமைகளுக்குச் சான்றாகும். அறிஞர்க்கு அறிஞர் குமாரசாமி என்னும் கூற்றிற்கு அரணாகும்.

இம்மாபெரும் அறிஞர் மிகச் சிறந்த பதிப்பாசிரியராகவும் விளங்கியுள்ளார். இவர் பதிப்பித்த நூல்களுள் குறிப்பிடத்தக்கவை பழமொழி விளக்கம், ஆசாரக்கோவை, மறைசை அந்தாதி, நான்மணிக்கடிகை, திருவாதவூரர் புராணம், முத்தகப் பஞ்ச விஞ்சதி, நகுலமலைக் குறவஞ்சி நாடகம், உரிச்சொல் நிகண்டு, சூடாமணி நிகண்டு, சதாசாரக் கவித்திரட்டு, ஞானக்கும்மி போன்றவையாகும்.

இவை மட்டுமல்லாமல் சாணக்கிய நீதிவெண்பா, மேகதூதக் காரிகை, இராமோதந்தம், சிசுபாலவதம் ஆகிய நூல்களை வட மொழியிலிருந்து மொழிபெயர்த்துள்ளார்.

திருக்கலசைப் புராணம், யாப்பருங்கலக் காரிகை, திருவாதவூரர் புராணம், அகப்பொருள் விளக்கம், கம்பராமாயணம் (பாலகாண்டம்), நீதிநெறி விளக்கம், தண்டியலங்காரம் போன்றவற்றிற்கு உரை வரைந்த பெருமகனார் குமாரசுவாமிப் புலவர்.

தமிழ்ப் புலவர் சரித்திரம், மிலேச்ச மத விகற்பம், இலக்கணச் சந்திரிகை, இரகுவமிசக் கருப்பொருள், கண்ணகி

---

6. ஆய்வுலகு போற்றும் ஆசிரிய மணிகள், வி.மி. ஞானப்பிரகாசம், ந.சி. கமலையா (ப.ஆ.).

கதை வசனம், வினைப்பகுபத விளக்கம், வதுளைக் கதிரேசர் ஊஞ்சல் போன்றவை இவர்தம் படைப்பிலக்கியங்கள் ஆகும்.

படைப்பு, பதிப்பு, ஆய்வு, மொழிபெயர்ப்பு, உரை வரைதல், சொல்லகராதி தொகுத்தல் எனப் பல்வேறு நிலைகளில் இவர்தம் தமிழ்ப்பணி அமைந்துள்ளது. இலக்கியம், இலக்கணம், அகராதி பல்துறை புலமைமிக்கவராகவும் விளங்கியுள்ளார். பதிப்பாசிரியர்கள் எத்தகு புலமை மிக்கவராக இருத்தல் வேண்டும் என்பதற்கு இவரோர் எடுத்துக்காட்டு.

**யாழ்ப்பாணம் சுன்னாகம் கி. கணேசையர்**

இவர் தொல்காப்பியம், இரகுவம்சம் ஆகியவற்றிற்கு உரை வரைந்து பதிப்பித்துள்ளார். ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர்களின் வரலாற்றைத் தொகுத்துப் பதிப்பித்துள்ளார். குசேலர் சரித்திரம் என்னும் நூலை எழுதிப் பதிப்பித்துள்ளார். இவர் அறிஞர்க்கு அறிஞர் குமாரசுவாமிப் புலவரின் மாணவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**ஈழத்துத் திரிகோணமலை த. கனகசுந்தரம்பிள்ளை**

இவர் ஈழ மண்டலத் திருப்புகழ், தேவாரம், சிவஞான மாபாடியம், திருமந்திரம், தமிழ் நாவலர் சரிதை ஆகிய நூல்களைப் பதிப்பித்துள்ளார். சுன்னாகம் குமாரசாமிப் புலவர் பதிப்பித்த அகப்பொருள் விளக்கம், கம்பராமாயணம் (பாலகாண்டம்) ஆகியவற்றின் இணைப்பதிப்பாசிரியராகவும் விளங்குகின்றார். இவரும் சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதித் தொகுப்பில் தலைவராகப் பணியாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**யாழ்ப்பாணம் மாணிப்பாய் முத்துத்தம்பிப்பிள்ளை**

இவர் பாரதச் சுருக்கம், நன்னூல், இரகுபோதம், யாழ்ப்பாணச் சரித்திரம், தென்மொழி வரலாறு ஆகிய நூல்களை எழுதிப் பதிப்பித்துள்ளார். இவர் ஆறுமுக நாவலர் மேல் பெரிதும் ஈடுபாடு கொண்டவர். ஆறுமுக நாவலர் வாழ்ந்த வீட்டை விலைக்கு வாங்கி 'நாவலர் கோட்டம்' என்று பெயரிட்டமையும், 'நாவலர் அச்சகம்' நிறுவியமையும் நாவலர் மேல் இவர் கொண்ட ஈடுபாட்டைக் காட்டுகின்றன. இவர் சத்தியாபிமானி என்னும் இதழ்ப் பதிப்பாசிரியர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். யாழ்ப்பாணத்துப் பதிப்பாசிரியர் பலரும் அகராதிப் புலமை மிக்கவர்களாக விளங்கி

யுள்ளனர். முத்துத் தம்பிப்பிள்ளையும் ஆங்கில–ஆங்கிலத்–தமிழ் அகராதி ஒன்றினை உருவாக்கியுள்ளார். இதுமட்டுமல்லாமல் கலைக்களஞ்சியத்திற்கு முன்னோடியாக விளங்கும் அபிதான கோசத்தையும் உருவாக்கியுள்ளார்.

**யாழ்ப்பாணம் சிறுப்பிட்டி சி.வை. தாமோதரம் பிள்ளை**

தமிழ் இதழியல் துறையில் நல்லதோர் முன்னோடியாகவும், தமிழ் நூற்பதிப்புத் துறையில் முக்கியமானவராகவும் திகழ்ந்தவர் இராவ் பகதூர் சி.வை. தாமோதரம் பிள்ளை அவர்கள். இவர் ஏட்டுச் சுவடிகளை ஆதாரமாகக் கொண்டு நன்கு பரிசோதித்துப் பண்டைத் தமிழ் நூல்கள் பலவற்றை முதல் முறையாக அச்சில் பதிப்பித்து வெளியிட்ட பெருமைக்குரியவராவார்.

> *சி.வை. தாமோதரம் பிள்ளையன் தொடக்க நிலை ஆசிரியராகவும், தமிழாசிரியராகவும், இதழாசிரியராகவும், உரையாசிரியராகவும் உயர்ந்த அதிகாரியாகவும், நீதிபதியாகவும் பாடநூற் குழுவின் தலைவராகவும், பதிப்பாசிரியராகவும் என இவர்தம் பணிகள் வேறுபட்டதாக அமைந்திருந்தன*[7]

என்பது குறிப்பிடத்தக்கது. சி.வை. தாமோதரம் பிள்ளை பதிப்பித்த பண்டைய நூல்கள் பட்டியலிட்டுக் காட்டத்தக்கதாகும்.

தொல்காப்பிய எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் (சேனாவரையர் உரை மற்றும் நச்சினார்க்கினியர் உரை, பொருளதிகாரம், இறையனார் அகப்பொருள் உரை, இலக்கண விளக்கம், கலித்தொகை, வீரசோழியம், தணிகைப்புராணம், சூடாமணி, நீதிநெறி விளக்கம் போன்றவை பிள்ளை அவர்கள் பதிப்பித்த நூல்களாகும். இவர்தம் பெருமுயற்சியால் தொல்காப்பியத்தின் மூன்று அதிகாரங்களும் நச்சினார்க்கினியர் உரையுடன் பதிப்பிக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

யாழ்ப்பாணத்தில் சி.வை. தாமோதரம் பிள்ளைக்கு முன்பும் பலர் தமிழ் நூற் பதிப்புத் துறையில் ஈடுபட்டிருந்தார்கள். இருப்பினும் ஆறுமுக நாவலருக்குப் பின் தமிழ் நூற்பதிப்புத் துறையில்

---

7. அச்சும் பதிப்பும், மா.சு. சம்பந்தன், மணிவாசகர் பதிப்பகம், 1997, ப. 228.

தாமோதரம் பிள்ளையின் புகழ் கொடிகட்டிப் பறந்தது என்பதே பெருமையுடன் சுட்டத்தக்கதாகும்.

> *சி.வை. தாமோதரம் பிள்ளை அவர்கள் பதிப்பித்த நூல்களும் அவர் பட்ட துன்பங்களும் எழுதிய பதிப்புரைகளும் தமிழர்கள் எங்கிருந் தாலும் அவர்களுக்குக் கலங்கரைவிளக்கமாகவே இருந்து கொண்டிருக்கும்.*[8]

என்னும் கூற்று முற்றிலும் பொருத்தமாகும்.

**யாழ்ப்பாணம் மாணிப்பாய் ஞானப்பிரகாசம்**

இவர் எழுபதுக்கும் மேற்பட்ட மொழிகளை அறிந்தவர் என்று கூறப்படுகிறது. இவர் வரலாறு, சமயம், மொழி தொடர்பாக ஏறத்தாழ 88 நூல்களை எழுதிப் பதிப்பித்துள்ளார். தமிழ்ச் சொற் பிறப்பகராதியை ஆறு தொகுதிகளாக அச்சிட்டு வெளியிட்ட பெருமைக் குரியவராவார். இவர் தமிழ் நூற் பதிப்பாசிரியர் மட்டுமல்ல; குடும்ப வாசகம் என்னும் இதழ்ப் பதிப்பாசிரியர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழரின் பூர்வ சரித்திரமும் சமயமும், தமிழரின் ஆதி இருப்பிடமும் பழஞ்சீர்திருத்தமும், யாழ்ப்பாணத் தொல்குடிகள், யாழ்ப்பாண வைபவ விமரிசனம், தமிழ் அமைப்புற்ற வரலாறு, தருக்கம், துறவிகானம், கிறிஸ்துநாதர் சரித்திர ஆராய்ச்சி, கத்தோலிக்கத் திருச்சபையும் அதன் போதகங்கள், தேவ ஆராதனைமுறை, ஆண்டவர், சரித்திரம் போன்றவை இவர் எழுதிப் பதிப்பித்த நூல்களாகும்.

**யாழ்ப்பாணம் மல்லாகம் வி. கனகசபைப் பிள்ளை**

> *தமிழ் இலக்கிய வரலாறு, தமிழ்நாட்டு வரலாறுகளை ஆராய்ந்து அவ்ஆராய்ச்சிகளின் முடிபுகளை ஆங்கிலத்தில் எழுதிப் பதிப்பித்த தமிழறிஞர் வி. கனகசபைப் பிள்ளை ஆவார்.*[9]

இவர் எழுதிய The Tamils 1800 years ago என்னும் ஆங்கில நூலைப் பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரை தமிழில் மொழிபெயர்த்து, சைவ சித்தாந்தக் கழகம் தன் கழக வெளியீடாக

---

8. அச்சும் பதிப்பும், மா.சு. சம்பந்தன், மணிவாசகர் பதிப்பகம், 1997, ப. 231.
9. மேலது, ப. 261.

வெளியிட்டுள்ளது. இவர் களவழி நாற்பது, கலிங்கத்துப் பரணி, விக்கிரம சோழன் உலா போன்ற தமிழ் நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார்.

### யாழ்ப்பாணம் மட்டக்களப்பு விபுலானந்த அடிகள்

இவர் யாழ்ப்பாணம் மாணிப்பாய் இந்துக் கல்லூரியின் முதல்வராக இருந்தவர். இவர் பெயரறியாத இசை ஆர்வலர்கள் இருக்க மாட்டார்கள். இவர் இராமகிருஷ்ண மடத்தின் 'பிரபுத்த பாரதர்' என்னும் வேதாந்த இதழின் பதிப்பாசிரியரானவர்.

> *நவநீதகிருஷ்ண பாரதியாரின் உலகியல் விளக்கம் என்னும் நூலைச் ச.பு. பாலப்பிள்ளையின் உரையுடன் யாழ்ப்பாணக் கிளப் அச்சகத்தில் அச்சிட்டுப் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.*[10]

இவை மட்டுமல்லாமல் யாழ்நூல், மதங்கசூளாமணி போன்ற பல நூல்களை எழுதிப் பதிப்பித்துள்ளார்.

### யாழ்ப்பாணம் ச. பவானந்தம் பிள்ளை

இவர்,

> *ஆங்கில அறிவோடு தமிழ்மொழியில் மிகுந்த தேர்ச்சியும் பெற்றிருந்தார். பவானந்தர் கழகம் என்ற ஓர் அமைப்பை இவர் ஏற்படுத்தினார்.*[11]

இக்கழகத்தினால் பேரகத்திய விருத்தி, தொல்காப்பியம், யாப்பருங்கலவிருத்தி, நன்னூல், இறையனார் களவியல் உரை போன்ற நூல்களை மிகச் சிறப்பாகப் பதிப்பித்துள்ளார்.

பண்டைய தமிழ் நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டதோடு மட்டுமல்லாமல் நாடகவியல் விளக்கம், பரத சாஸ்திர விளக்கம், வேதாந்த சித்தாந்தத் தத்துவக் காலம், நீதிக் கவித்திரட்டு, அரிச்சந்திரன், காணாமற்போன கணையாழி, அல்லி அரசாணி மாலை, புலந்திரன் களவு, பவளக்கொடி மாலை, ஏணி ஏற்றம் போன்ற பல நூல்களைப் பதிப்பித்துள்ளார். இவர் படைப்புகள் பல நாடக நூல்களாக உள்ளமை நோக்கத்தக்கதாகும். இவை

---

10. அச்சும் பதிப்பும், மா.சு. சம்பந்தன், மணிவாசகர் பதிப்பகம், 1997, ப. 293.
11. மேலது, ப. 308.

மட்டுமல்லாமல் தமிழ், ஆங்கில அகராதி ஒன்றையும் தொகுத்துள்ளார். இவர் சட்டம் குறித்து எழுதிய 30 நூல்களும் இவர்தம் ஆங்கிலப் புலமைக்குச் சான்றாகும்.

> ***பவானந்தர் கழகச் சார்பில் மொழியில் பழம் பொருளாய்வு, கல்வெட்டு எழுத்தாய்வு போன்ற வற்றையும் ஓர் இதழையும் நடத்தத் திட்டமிட்டார்.***[12]

என்னும் செய்தி பாராட்டத்தக்கதாகும். இவர் காவல் துறையில் பணியாற்றி வந்தாலும் கன்னித் தமிழுக்கு ஆற்றிய பணிகள் காலத்தை வென்று நிற்கும். ஞாலம் உள்ளவரை நிலைத்து நிற்கும்.

> ***நாற்பது ஆண்டுகளாகத் திரட்டி வந்த அரிய ஓலைச் சுவடிகளையும் தமிழ், தெலுங்கு, ஆங்கில நூல்களையும் சேர்த்து வைத்திருந்தார்***[13]

என்பது அவர்தம் தொல்பொருள் ஆர்வத்திற்குச் சான்றாகும்.

பழந்தமிழ் இலக்கிய வெளியீட்டுக்குக் கால்கொண்டவர் ஆறுமுகநாவலர். சுவர் எழுப்பியவர் சி.வை. தாமோதரம்பிள்ளை. கூரை வேய்ந்து நிலையம் கோரியவர் உ.வே. சாமிநாதையர் என்பார் தமிழ்த் தென்றல் திரு.வி.க.

ஆறுமுகநாவலர், குமாரசுவாமிப் புலவர், கனகசுந்தரம் பிள்ளை, சி.வை. தாமோதரம் பிள்ளை, ச. பவானந்தம் பிள்ளை, பழந்தமிழ் நூல்களைப் பதிப்பித்த யாழ்ப்பாணத்துப் பதிப்பாசிரியர் களாகத் திகழ்கின்றனர்.

யாழ்ப்பாணத்துப் பதிப்பாசிரியர்களில் பலர் அகராதிப் புலமை மிக்கவராக விளங்குகின்றனர். கு. கதிரைவேற் பிள்ளை, நா. கதிரைவேற்பிள்ளை, குமாரசாமிப்புலவர், த. கனகசுந்தரம் பிள்ளை போன்றோர் அகராதிகளைப் பதிப்பித்த பதிப்பாசிரியர் களாகவும் விளங்குகின்றனர்.

யாழ்ப்பாணத்துப் பதிப்பாசிரியர்களில் பெரும்பாலோர் இதழியல் பதிப்பாசிரியர்களாக விளங்கியுள்ளனர் என்று சிறப்பாகக் குறிப்பிடலாம். பதிப்புலகில் பணியாற்றிய யாழ்ப்பாணத்துப்

---

12. அச்சும் பதிப்பும், மா.சு. சம்பந்தன், மணிவாசகர் பதிப்பகம், 1997, ப. 308.
13. மேலது.

பதிப்பாசிரியர்கள் தமிழாசிரியராக, இதழாசிரியராக, உரையாசிரியராகப் பணியாற்றிய பட்டறிவு மிக்கவர்கள். இவை மட்டுமல்லாமல் இலக்கியம், இலக்கணம், அகராதி, மொழிபெயர்ப்பு எனப் பல்துறைப் புலமையும் மிக்கவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

படைப்பு, பதிப்பு, ஆய்வு என்னும் முப்பெரும் நிலையிலும் பட்டறிவும் பயிற்சியும் உடையவர்கள் யாழ்ப்பாணத்துப் பதிப்பாசிரியர்கள் என்பது சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் இத்தகு பதிப்பாசிரியர்களின் பெயர்கள் தவிர்க்க இயலா என்பதைவிட இவர்கள் இல்லையேல் இலக்கிய வரலாறு பெரும் பகுதியை இழந்திருக்கும் என்பதே உண்மையாகும்.

யாழ்ப்பாணத்துப் பதிப்பாசிரியர்கள் முப்பெரும் தொண்டாற்றி யுள்ளனர். சமயத்தொண்டு, பதிப்புத்தொண்டு இவ்விரண்டும் இணைந்த தமிழ்த்தொண்டு ஆகியவை தமிழ் நல்லுலகிற்கு அப் பெருமக்கள் வழங்கிய அறிவுக் கொடையாகும். இத்தனைக்கும் மேலாக யாழ்ப்பாணத்துப் பதிப்பாசிரியர்களின் தமிழ் உணர்வும் அவ் உணர்வின் வெளிப்பாடும் போற்றத்தக்கதாகும்.

சுவடிக்குள் முடங்கிக் கிடந்த முத்தமிழைப் பிறர் மெச்சத் தக்க அளவில் அச்சேற்றித் தமிழ் வளர்ச்சியின் உச்சிக்கே கொண்டு வந்ததில் யாழ்ப்பாணத்துப் பதிப்பாசிரியர்களுக்குப் பெரும் பங்கு உண்டு.

உலகின் எந்த மூலை முடுக்குகளில் இருந்தாலும் காலந்தோறும் ஞாலம் உள்ளவரை தமிழராக உள்ள ஒவ்வொருவரும் அப்பெருமக்களுக்கு நெஞ்சார நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளோம் என்பதற்கு மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

# நெல்லை மாவட்டப் பதிப்பாசிரியர்கள்

சுவடிப் பதிப்பு வரலாற்றில் நெல்லை மாவட்டப் பதிப்பாசிரியப் பெருமக்கள் சுட்டிக்காட்டத்தக்கவராவர். எச்.ஏ. கிருஷ்ணப்பிள்ளை, மு.சி. பூரணலிங்கம் பிள்ளை, வெ.ப. சுப்பிரமணிய முதலியார், கே.என். சிவராஜபிள்ளை, அநுவரத விநாயகம் பிள்ளை, ச. சோமசுந்தர பாரதியார், ஜெகவீர பாண்டியனார், கா. சுப்பிரமணிய பிள்ளை, டி.கே. சிதம்பரநாத முதலியார், பேராசிரியர் ரா.பி. சேதுப்பிள்ளை, ச. வையாபுரிப்பிள்ளை போன்றோர் மிகச் சிறந்த பதிப்பாசிரியர்கள் மட்டுமல்லர்; தமிழ்ப் பேரறிஞர்களாகவும் திகழ்ந்துள்ளனர். இவர்களுள் பலர் படைப்பாற்றல், இலக்கிய வரலாற்று வரைவியல், ஆராய்ச்சித் திறன், சொல்லாற்றல் போன்ற பல திறனும் வாய்க்கப் பெற்றவர்கள் என்பதும் இவண் குறிப்பிடத்தக்கதாகும்.

### எச்.ஏ. கிருஷ்ணபிள்ளை

இவர் நெல்லை மாவட்டத்திலுள்ள பாளையங்கோட்டையில் பிறந்தவர். இவர் வேத மாணிக்க நாடார் இயற்றிய வேதப்பொருள் அம்மானை என்னும் செய்யுள் நூலைப் பதிப்பித்துள்ளார். கால்டுவெல் பாதிரியார் இயற்றிய பரதகண்ட புராதனம் என்னும் நூலையும் பதிப்பித்துள்ளார். காவிய தரும சங்கிரகம் எனும் நூல் இவர் தொகுத்துப் பதிப்பித்த நூலாகும். இலக்கணச் சூடாமணி இவர் பதிப்பித்த உரைநடை நூலாகும். இரட்சணிய யாத்திரிகம், இரட்சணிய சமய நிர்ணயம், இரட்சணிய மனோகரம் போன்றவையும் இவர் பதிப்பித்த நூல்களாகும்.

### மு.சி. பூரணலிங்கம் பிள்ளை

இவர் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள முந்நீர்ப்பள்ளம் என்னும் ஊரில் பிறந்தவர். சிவஞானபோதினி என்னும் மாத இதழின் பதிப்பாசிரியாக விளங்கியவர். இவர் தமிழிலும் ஆங்கிலத்திலும் பல நூல்களை எழுதியுள்ளார். இருப்பினும் இவர் பதிப்பித்த நூல்கள் என அறிய வருபவை மூன்றாகும். ஔவைக் குறள், செய்யுட்கோவை, விவேக விளக்கம் ஆகிய மூன்றுமாகும்.

### வ.உ. சிதம்பரம் பிள்ளை

இவர் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஒட்டப்பிடாரம் என்னும் ஊரில் பிறந்தவர். இவர் விவேகபாநு, இந்துநேசன் போன்ற

இதழ்களின் பதிப்பாசிரியராக விளங்கியுள்ளார். இவர் திருக்குறள் மணக்குடவர் உரை, தொல்காப்பியப் பொருளதிகாரம் இளம்பூரணர் உரை, இன்னிலை ஆகிய நூல்களைப் பதிப்பித்துள்ளார். மனம் போல் வாழ்வு, அகமே புறம், சாந்திக்கு மார்க்கம், மெய்யறிவு போன்ற நூல்களின் நூலாசிரியராகவும் சிறந்து விளங்கினார்.

**வெ.ப சுப்பிரமணிய பாரதியார்**

இவர் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள வெள்ளக்கால் என்னும் ஊரில் பிறந்தவர். இவர் மில்டனின் Paradise Lost என்னும் ஆங்கில நூலைச் சுவர்க்க நீக்கம் என்னும் பெயரில் மொழி பெயர்த்துப் பதிப்பித்துள்ளார். அகலிகை வெண்பா, கோம்பி விருத்தம், நெல்லைச் சிலேடை வெண்பா போன்றவை இவர் இயற்றி அச்சிற் பதிப்பித்த நூல்களாகும். இராமாயண உள் உறைப் பொருளும் தென்னிந்தியச் சாதி வரலாறு என்னும் ஆராய்ச்சி நூலையும் எழுதி அச்சிற் பதிப்பித்துள்ளார்.

**எஸ். அநவரத விநாயகம் பிள்ளை**

இவர் எழுதிப் பதிப்பித்த நூல்கள் பல. அவற்றுள் தமிழ்ப் பெருமக்கள் வரலாறு, சைவ சித்தாந்த வரலாறு, ஔவையார், ஏகநாதர் போன்றவை குறிப்பிடத்தக்கனவாகும். இவர் தமிழ் அகராதி ஒன்றையும் பதிப்பித்துள்ளார்.

**நாவலர் ச. சோமசுந்தர பாரதியார்**

இவர் எட்டயபுரத்தில் பிறந்தவர். இவர் தம்முடைய பேச்சாலும் எழுத்தாலும் ஆராய்ச்சியாலும் தமிழ்ச் சமுதாயத்தைத் தலைநிமிர வைத்த பெருந்தகைமையாளர். இவர் தொல்காப்பியப் பொருளதிகாரத்திற்குப் புத்துரை வரைந்து அச்சில் பதிப்பித்தவர். தசரதன் குறையும் கைகேயி நிறையும், சேரர் தாயமுறை, திருவள்ளுவர், பழந்தமிழ்நாடு போன்ற ஆய்வு நூல்களை அச்சில் பதிப்பித்தவராவார்.

**ஜெகவீர பாண்டியனார்**

இவர் நெல்லை மாவட்டத்திலுள்ள ஒட்டநத்தம் என்னும் ஊரில் பிறந்தவர். இவர் புலவர் உலகம் என்னும் இதழின் பதிப்பாசிரியராகவும் விளங்கியுள்ளார். குமரேச வெண்பா, புலவர் உலகம், இந்தியத் தாய் நிலை, பாஞ்சாலங்குறிச்சி வீர சரித்திரம்,

அரும்பொருளமுதம், அணியறுபது போன்ற நூல்களை எழுதிப் பதிப்பித்துள்ளார்.

**கா. சுப்பிரமணியப்பிள்ளை**

இவர் செந்தமிழ்ச் செல்வி எனும் மாத இதழின் பொறுப்பாசிரியர். மணிமாலை எனும் மாத இதழின் பதிப்பாசிரியராக விளங்கியவர். இவர் தொல்காப்பிய எழுத்ததிகாரத்தை நச்சினார்க்கினியர் உரையுடன் பதிப்பித்துள்ளார். இந்நூற் பதிப்பிற்குத் தமிழிலும் ஆங்கிலத்திலும் முகவுரை எழுதியுள்ளார். அப்பர் வரலாறு, திருஞானசம்பந்தர் வரலாறு, சுந்தரமூர்த்தி நாயனார் வரலாறு, மாணிக்க வாசகர் வரலாறு என்பவை இவர் எழுதிப் பதிப்பித்த நூல்களாகும். சேக்கிழார் சரித்திரமும் பெரியபுராண ஆராய்ச்சியும், பட்டினத்தடிகள் வரலாறும் நூலாராய்ச்சியும், தாயுமானவர் வரலாறும் நூலாராய்ச்சியும், சிவஞானமுனிவர் வரலாறும் நூலாராய்ச்சியும் மெய்கண்டாரும் சிவஞான போதமும் போன்ற ஆராய்ச்சி நூல்களையும் எழுதிப் பதிப்பித்துள்ளார்.

**பேரா. ரா.பி. சேதுப்பிள்ளை**

இவர் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள இராசவல்லிபுரம் என்னும் ஊரில் பிறந்தவர். இவர் எழுதிப் பதிப்பித்த நூல்கள் பலவாகும். அவற்றுள் திருவள்ளுவர் நூல் நயம், சிலப்பதிகார விளக்கம், வீரமாநகர், தமிழ்நாட்டு நவமணிகள், வழிவழி வந்தவர், தமிழ் விருந்து, கடற்கரையில், தமிழகம் ஊரும் பேரும் போன்ற நூல்களாகும். வேலும் வில்லும் என்னும் ஒப்பீட்டு நூலையும் இவர் பதிப்பித்துள்ளார்.

**பேரா. ச. வையாபுரிப்பிள்ளை**

இவர் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள வண்ணாரப் பேட்டைக்கு அருகிலுள்ள நரசையன் என்னும் ஊரில் பிறந்தவர். இவர் தொடங்கிய முதல் பதிப்புப் பணி பெ. சுந்தரம்பிள்ளை எழுதிய மனோன்மணிய நாடகமாகும்.

இவர் பதிப்பித்து வெளியிட்ட நூல்கள் பல. துகில் விடு தூது, நவநீதப்பாட்டியல், களவியற் காரிகை, அரும்பொருள் விளக்க நிகண்டு, திருக்கூர்ப்பள்ளு, திருக்குறுங்குடி அழகிய நம்பி உலா, தினகர வெண்பா, பூகோளவிலாசம், நெல்விடுதூது, திருமுருகாற்றுப்

படை, இராஜராஜ தேவருலா, தொல்காப்பியம் பொருளதிகாரம் (நச். உரை) விறலிவிடுதூது, கயாதரநிகண்டு போன்றவை குறிப்பிடத்தக்கனவாகும்.

இவை மட்டுமல்லாமல் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் சிலவற்றையும் பதிப்பித்துள்ளார். அவற்றுள் சிறுபஞ்சமூலம், நான்மணிக்கடிகை, திரிகடுகம், இன்னா நாற்பது, இனியவை நாற்பது, பழமொழி போன்றவை குறிப்பிடத்தக்கனவாகும்.

புறத்திரட்டு என்னும் தொகை நூலை முதன்முதல் ஆராய்ந்து பதிப்பித்த பெருமை இவரையே சாரும். இவர்தம் சங்க இலக்கியப் பதிப்பு குறிப்பிடத்தக்கதாகும்.

இவர்தம் பதிப்புகளில் அழகிய முன்னுரை, விளக்க உரைகள், ஆராய்ச்சிக் குறிப்புரைகள், பாடபேதங்கள், செய்யுள் முதற்குறிப்பு அகராதி, அருஞ்சொற் பொருள் போன்ற பல்வேறு கூறுகளைக் கண்டு மகிழலாம்.

**திருநெல்வேலி அம்பலவாணக் கவிராயர்**

> *முதன்முதல் அச்சில் வந்த திருக்குறள் மூலபாடம், நாலடியார் மூலபாடம் என்னும் நூலை ஆராய்ந்து பதிப்பித்தவராவார்.*[14]

இவரைப் பற்றிய வேறு செய்திகள் கிடைக்கவில்லை. எனினும் பதிப்பு வரலாற்றில் இவர் தம் பதிப்புப் பணி சுட்டத்தக்கதும் போற்றத் தக்கதுமாகும். முதன்முதல் அச்சு நூலைப் பதிப்பித்த பெருமைக்குரியவராகின்றார்.

14. சுவடிப் பதிப்பியல், ப. 70.

# தஞ்சை மாவட்டப் பதிப்பாசிரியர்கள்

தமிழ் நூற்பதிப்பு வரலாற்றில் தஞ்சை மாவட்டப் பதிப்பாசிரியர்களுக்குத் தனி இடம் உண்டு. தற்பொழுது திருவாரூர் மாவட்டம், நாகை மாவட்டம் என இரு மாவட்டங்கள் சேர்ந்திருந்த தஞ்சை மாவட்டத்தில் பண்டைய பதிப்பாசிரியர்களின் பதிப்புப் பணியைச் சுட்டும் அளவில் இப்பகுதி அமைகிறது.

தஞ்சை மாவட்டத்துப் பதிப்பாசிரியர்கள் விண்மீன்கள் என்று சொன்னால் விண்மதி போல் காட்சி தருபவர் தமிழ்த் தாத்தா என எல்லோராலும் போற்றப் பெறும் டாக்டர் உ.வே. சாமிநாதையர் என்பதில் ஐயமில்லை.

பழந்தமிழ் நூற் பதிப்பாளர்களில் முன்னோடியாகக் கருதத் தக்கவர் மூவரென்று தமிழ்த் தென்றல் திரு.வி.க. தரும் பட்டியலில் முத்தாய்ப்பாக நிற்பவரும் உ.வே. சாமிநாதையர் என்பதும் உற்று நோக்கத்தக்கதாகும்.

> *பழந்தமிழ் இலக்கிய வெளியீட்டுக்குக் கால்கொண்டவர் ஆறுமுக நாவலர். சுவர் எழுப்பியது சி.வை. தாமோதரம்பிள்ளை. கூரை வேய்ந்து நிலையம் கோலியவர் உ.வே. சாமி நாதையர்*[15]

என்னும் கூற்றில், ஆயிரம் பேர் பதிப்புலகை வலம் வந்தாலும் முழுமையும் நிறைவும் பெற்ற பதிப்பாசிரியராக நம்முன் நிற்பது இவர்தம் பதிப்புப் பணி ஆகும். பண்டைத்தமிழ் இலக்கியம் என்பதெல்லாம் சாமிநாதையர் இல்லையேல் நாம் கண்டிருப்போமா? பயன் கொண்டிருப்போமா என்று கூறுவதில் ஒவ்வொரு தமிழுணர்வு மிக்கவரும் இறும்பூது எய்த வேண்டும்.

ஒரு பெரிய தமிழ்ப் பேரவையில் பல புலவர்களைக் கூட்டிப் பல ஆண்டுகள் பொறுமையாக ஆராய்ந்து பதிப்பித்திருக்க

---

15. சுவடிப் பதிப்பு வரலாறு, ப. 122.

வேண்டிய நூல்களை இவர் ஒருவரே பதிப்பித்துப் பெருந் தொண்டாற்றியுள்ளார் என்பது மறுக்கவோ, மறைக்கவோ முடியாத உண்மையாகும்.

பழந்தமிழ் நூல்களைப் பதிப்பித்து வெளியிடும் பணியில் தம் வாழ்நாள் முழுவதையும் செலவழித்த தமிழ்ச் செம்மல் டாக்டர் உ.வே.சா. சுவடிப் பதிப்புத் துறையில் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இத்தரணியில் இல்லை என்னுமளவிற்குச் சுட்டிக்காட்டத்தக்க பதிப்புலக மேதை என்பதும் கோடிட்டுக் காட்டத்தக்கதாகும்.

இத்தகு பெருமைமிகு டாக்டர் உ.வே.சா. தஞ்சை மாவட்டப் பதிப்பாசிரியர்களுள் ஒருவர் என்பதே இவண் குறிப்பிடத்தக்கதாகும்.

டாக்டர் உ.வே.சா. பதிப்பித்த நூல்களை, அவர்தம் பதிப்பு நெறிமுறைகளை வகுத்துரைத்துப் பதிப்பு வரலாற்றில் முன்னிறுத்திய பெருமை பேரா. கி. நாச்சிமுத்து, பேரா. குளோரியா சுந்தரமதி, பேரா. காசிராசன் ஆகியோரைச் சாரும். டாக்டர் உ.வே.சா.வின் சங்க இலக்கியப் பதிப்புகள் குறித்து ஆராய்ந்தவர் தகைசால் சான்றோர் டாக்டர் குளோரியா சுந்தரமதி அவர்கள். உ.வே.சா.வின் இலக்கணப் பதிப்புகள் குறித்து எளிமையாகவும், இனிமையாகவும் எடுத்துரைத்தவர் டாக்டர் கி. நாச்சிமுத்து ஆவார். உ.வே.சா.வின் காப்பியப் பதிப்புகள் குறித்து ஆழமாகவும், ஆர்வத்தோடும் எடுத்துரைத்த பெருமை டாக்டர் காசிராசன் அவர்களையே சாரும். இம்முப்பெரும் நூற்பதிப்புகளைக் கொண்டு வந்த பெருமை சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தையே சாரும்.

தஞ்சை மாவட்டத்துப் பதிப்பாசிரியர்கள் எனக் குறிப்பிடத் தக்கவர்கள் பலராவர். அவர்களுள் த. சிவக்கொழுந்து தேசிகர், பின்னத்தூர் நாராயணசாமி ஐயர், உ.வே. சாமிநாதையர், மறைமலை அடிகள், இ.வை. அனந்தராமையர், திரு.வி. கலியாண சுந்தரனார், ந.மு. வேங்கடசாமி நாட்டார், தி.வை. சதாசிவ பண்டாரத்தார் போன்றோர் குறிப்பிடத்தக்கவராவர்.

### த. சிவக்கொழுந்து தேசிகர்

இவர் தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்திற்கு அருகிலுள்ள கொட்டையூரில் பிறந்தவர். கொட்டையூர் என்பதற்கு மற்றொரு பெயர் கோடீச்சுரம் என்பதாகும். இவர் மன்னர் சரபோஜியின் அவைக்களப் புலவராக இருந்தவர். அம்மன்னரின்

பெயரால் சரபேந்திர வைத்திய முறைகள், சரபேந்திரர் சன்னிரோக சிகிச்சைகள் போன்ற வைத்திய நூல்களை எழுதிப் பதிப்பித்தவர். அடுத்து, கோடீச்சுரக் கோவை, பெருவுடையார் உலா, சரபேந்திர பூபால குறவஞ்சி நாடகம் போன்ற இலக்கிய நூல்களை எழுதிப் பதிப்பித்தவர்.

இத்தனைக்கும் மேலாகப் பக்தி மணம் கமழும் திருவாசகத்தை ஏட்டுச் சுவடியிலிருந்து பெயர்த்தெழுதிப் பதிப்பித்த பெருமை சிவக்கொழுந்து தேசிகரையே சாரும். இதுவே முதன்முதல் அச்சு வடிவம் கண்ட திருவாசகமாகும். இந்நூலை 1857இல் வெளியிட்டுள்ளார். இந்நூற் பதிப்புப் பணியை விசாகப் பெருமாளையரும், சிவக்கொழுந்து தேசிகரும் இணைந்து செய்துள்ளனர். இருவருமே மிகச் சிறந்த பதிப்பாசிரியப் பெருமக்களாவர்.

### பின்னத்தூர் நாராயணசாமி ஐயர்

இவர் தஞ்சாவூர் மாவட்டம் பூண்டித் தாலுகாவைச் சார்ந்த பின்னத்தூரில் பிறந்தவர். இவர் எட்டுத் தொகை நூலின் ஒன்றாகிய நற்றிணையை நன்றாகப் பதிப்பித்துள்ளார் என்பது மட்டுமல்ல. இந்நூல் முழுமைக்கும் உரையெழுதிப் பதிப்பித்துள்ளார். இவர் வேறு பல நூல்களையும் பதிப்பிக்க முயற்சி செய்துள்ளார் என்பதற்குப் பின்வரும் கூற்றே சான்றாகும்.

> *'இவர் எட்டுத்தொகையுள் குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு என்பவைகளை உரையுடன் வெளிப்படுத்த வேண்டுமெனப் பெருமுயற்சி எடுத்தார். ஆனால் நற்றிணை ஒன்றைத்தான் அச்சாக்க முடிந்தது.*[16]

இவர் உருவாக்கிய தொல்காப்பிய (பொருளதிகாரம்) மேற்கோளகராதி சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும். இவர் மிகச் சிறந்த பதிப்பாசிரியர் மட்டுமல்லர்; படைப்பாளர் என்பதற்கு இவர் எழுதிய நூல்களே சான்று பகரும். இவர் எழுதிப் பதிப்பித்த நூல்களாக விளங்குபவை மாணாக்கராற்றுப்படை, இயன்மொழி வாழ்த்து, தென்தில்லை உலா, தென் தில்லைக் கலம்பகம், கனாப் புராணம், இராமாயண அகவல் போன்றவையாகும். இவர் தமிழ்ப்

---

16. அச்சும் பதிப்பும், ப. 212.

புலவர் மட்டுமல்லர்; மிகச் சிறந்த கல்வெட்டறிஞர்; மொழி பெயர்ப்பாளர்; உயர்நிலைப் பள்ளியிலிருந்த தமிழாசிரியர்; கல்வெட்டறிஞர் சதாசிவ பண்டாரத்தார் மாணவர் என்பன வெல்லாம் இவர்தம் பெருமைகளாகக் குறிப்பிடத்தக்கனவாகும். இத்தனைக்கும் மேலாகப் பழந்தமிழ் நூல்களில் ஆழ்ந்த பயிற்சியும், பட்டறிவும் பெற்றவர் என்பது இவண் சுட்டத்தக்கதாகும்.

**உ.வே. சாமிநாதையர்**

இவர் தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணத்திற்கு அருகிலுள்ள உத்தமதானபுரம் என்னும் ஊரில் பிறந்தவர். இவருடைய தந்தையார் வேங்கடசுப்பையர். இவருடைய பெயர் சாமிநாதன். இம்மூன்று பெயர்களின் முதல் எழுத்துக்களைத் தொகுத்து உ.வே.சா. என்று சொன்னால் போதும். இவர்தம் பெருமைகளும் அறியார் இப்பூவுலகில் இல்லை. தமிழுக்கு மூன்றெழுத்து. தமிழ்த் தாயின் உடைமைகளை எல்லாம் காத்த பெருமைக்கும் மூன்றெழுத்து (உ.வே.சா.) என்றுதான் சொல்லத் தோன்றுகிறது.

> *ஒரு பெரிய தமிழ்ப் பேரவையில் பல புலவர்களைக் கூட்டிப் பல ஆண்டுகள் பொறுமையாக ஆராய்ந்து பதிப்பித்திருக்க வேண்டிய பல நூல்களை இவர் ஒருவரே பதிப்பித்துப் பெருந்தொண்டாற்றியுள்ளார்.*[17]

என்னும் கூற்று இவண் குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழ்மொழிக்குச் செய்த அரிய பெரிய தொண்டுகளை நினைந்து நினைந்து நெஞ்சம் உருகும் டாக்டர் வ.சுப. மாணிக்கம் அவர்களின் நன்றி உணர்ச்சியும் சுட்டத்தக்கதாகும்.

*பார்காத்தார் ஆயிரம்பேர் பசித்தார்க் காகப்*
*பயிர்காத்தார் ஆயிரம்பேர் பாலர்க் காக*
*மார்காத்தார் ஆயிரம்பேர் வாழ்ந்த நாட்டின்*
*மானங்காத்த தமிழ்த்தாய் என்உடைமை எல்லாம்*
*யார்காத்தார்? எனக் கேட்க ஒருவன் அம்மா*
*யான் காப்பேன் எனஎழுந்தான் சாமி நாதன்*
*நீர்காத்த தமிழகத்தார் நெஞ்சின் உள்ளான்*
*நிலைகாத்த மலைஇமய நெற்றி மேலான்*

---

17. உரையாசிரியர்கள், ப. 718.

என்னும் மாணிக்கனாரின் மணிவரிகள் உ.வே.சா.வின் பதிப்புப் பணிகளுக்கும் அணிசேர்க்கும் என்பதில் ஐயமில்லை.

உ.வே.சா. அவர்கள் பதிப்பித்த நூல்கள் 61,91,74 என்றெல்லாம் அறிஞர்கள் கூறுகின்றார்கள். இவ்வடிப்படையில் இவர் எழுபதுக்கும் மேற்பட்ட நூல்களைப் பதிப்பித்துள்ளார் என உறுதியாகக் கூறலாம்.

தலபுராணங்கள், இலக்கண நூல்கள், சங்க இலக்கியங்கள், காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள் எனப் பல்துறை நூல்களையும் இவர் பதிப்பித்துள்ளார். கோவை, உலா, தூது, குறவஞ்சி, கலம்பகம், பரணி, வெண்பா, மாலை, அந்தாதி போன்ற சிற்றிலக்கிய வகை சார்ந்த நூல்களைப் பதிப்பித்துள்ளார் என்பதே இவண் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும்.

ஐயரவர்கள் பதிப்பித்த நூல்களில் விரிவான முகவுரை அமைப்பைக் காணலாம். நூலின் அமைப்பு, பெயர்க்காரணம், இலக்கணம், வரலாறு ஆகியவற்றைக் கூறி அந்நூலைத் தாம் பெற்ற வரலாறு, சுவடிகள் கிடைத்த விவரம், தாம் ஆராய்ந்த முறைகளின் விளக்கம், நூற்பதிப்புக்குப் பொருளுதவி புரிந்தவர், உடனிருந்து உதவியவர், அனைவருக்கும் நன்றியும் வாழ்த்தும் கூறி ஐயர் தமது முகவுரையை அமைத்திருப்பார். சுவடிப் பதிப்பின் முகவுரை எவ்வாறு அமைய வேண்டும் என்பதை வரைந்து காட்டியுள்ளார் என்றும் கூறலாம். உ.வே.சா. பதிப்பித்த நூலின் முகவுரைகளைப் படித்தாலே போதும்; புலமை பெறலாம். தேர்வில் வெற்றி பெறலாம். பதிப்புப்பணி மேற்கொள்ளத் தகுதி பெறலாம்.

டாக்டர் உ.வே.சா. அவர்கள் பதிப்பியல் கலைஞர். இவர் பதிப்பித்த நூல்களில் பக்கங்கள்தோறும் பதிப்புக் கலையின் கைவண்ணத்தைக் காணலாம்.

நூலின் முகவுரையை அடுத்து நூலைச் சுருக்கமாகத் தொகுத்து, எளிய உரைநடையில் நூலை அமைத்து, நூலாசிரியர், உரையாசிரியர் வரலாறுகளைக் கொடுப்பது இவர்தம் வழக்கமாகும். சங்க இலக்கிய நூல்களில் பாடினோர் வரலாறு, பாடப்பட்டோர் வரலாறு, உரையாசிரியர் வரலாறு, நூல் நுதல் பொருளைப் பல்வேறு தலைப்புகளில் வகுத்தும் தொகுத்தும் எழுதியிருப்பார். இத்தனைக்கும் மேலாகப் பின் இணைப்பில் பெயர் அகராதி, சொல் அகராதி, மேற்கோள் அகராதி, விளங்காத மேற்கோள் அகராதி, செய்யுள் முதற்குறிப்பகராதி, அருஞ்சொற்பொருள் அகராதி எனப்

பல்வேறு அகராதிகளையும் கற்போர் பயன்கொள்ளத் தருவதும் உ.வே.சா.வின் பழக்கமாகும்.

சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, குறுந்தொகை போன்ற நூல்கள் இவருக்கு முன்னரே பதிப்பித்து வெளியிட்டிருப்பினும், செவ்வையாகவும், திருத்தமாகவும் பதிப்பித்து நூல் ஆராய்ச்சிப் பகுதிகளைப் சேர்த்த பெருமை இவருக்கே உரித்தாகும். இவர்தம் பதிப்புப் பணிகளைச் சுருக்கமாகச் சொல்வதாயின், எட்டுத்தொகை நூல்களுள் நற்றிணை, கலித்தொகை, அகநானூறு தவிர ஏனைய ஐந்து நூல்களையும் பழைய உரைகளுடன் மிகத் திருத்தமாக வெளியிட்டார். பத்துப்பாட்டு நூல்களை நச்சினார்க்கினியர் உரையுடன் பதிப்பித்தார். இலக்கண நூலாம் நன்னூலை மயிலைநாதர், சங்கர நமச்சிவாயர் ஆகிய இருவர் உரைகளுடன் பதிப்பித்தார். பல்வேறு வகை சார்ந்த முப்பதுக்கும் மேற்பட்ட சிற்றிலக்கியங்களைச் சிறப்பாகப் பதிப்பித்துள்ளார்.

> *பழந்தமிழ் நூல்களைப் பதிப்பித்து வெளியிடும்*
> *பணியில் தம் வாழ்நாட்களைக் கழித்துவிட்ட*
> *பெரியவர் இவர்.*[18]

என்னும் மு.வை. அரவிந்தரின் கூற்று இவண் முத்தாய்ப்பாக அமையும்.

**மறைமலையடிகள்**

இவர் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள நாகபட்டினத்தின் அருகிலுள்ள காடம்பாடி என்னும் ஊரில் பிறந்தவர். நல்லாசிரியராகவும் சிறந்த ஆராய்ச்சியாளராகவும் இனிய சொற்பொழிவாளராகவும் திகழ்ந்தவர். சித்தாந்தத் தீபிகை என்னும் மாத இதழின் பதிப்பாசிரியாகவும் சிலகாலம் பணியாற்றி வந்தவர். பின்னர் ஞானசாகரம் என்னும் மாத இதழைத் தொடங்கிப் பதிப்பாசிரியராகப் புகழ்பெற்று விளங்கியவர். இவர் பல்வேறு நூல்களை எழுதியும் பதிப்பித்தும் உள்ளார். அவ்வகையில் இவர் நூற்றுக்கு மேற்பட்ட நூல்களை வெளியிட்ட பெருமைக்குரியவர். மும்மொழிப் புலமை பெற்றவர். உணவிலும், உடையிலும், பேச்சிலும், எழுத்திலும் ஒரே சீரான கொள்கையைக் கடைப்பிடித்து வந்தவர்.

இவர் ஞானசேகர வெண்பா, சிற்றம்பலநாடி, பஞ்சாக்கர மாலை வேதாந்த மத விசாரம், வேதசிவாகம புராணம் போன்ற பல நூல்களைப் பதிப்பித்துள்ளார். சதமணிக் கோவை,

18.. உரையாசிரியர்கள், ப. 716.

துகளறுபோதம் போன்ற நூல்களுக்கு உரையும் வரைந்து பதிப்பித்துள்ளார். பதிப்பாசிரியர்கள் பலர் உரையாசிரியர்களாகவும், மொழிபெயர்ப்பாளர்களாகவும் திகழ்ந்துள்ளனர். அவ்வகையில் இவரும் அடங்குவார். இவர்தம் நூல்கள்,

> *அறிவு வளர்ச்சிக்காகவும் ஆராய்ச்சி நடைக் காகவும், கதைக்காகவும் விரும்பிப் படிக்கப் பட்டன. அந்நூல்களில் பல பதிப்புகளும் வெளிவந்துள்ளன.*[19]

சங்க இலக்கிய நூல்களை எல்லோரும் விரும்பிப் படிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் ஆங்கில ஆராய்ச்சி நெறிமுறை களின் அடிப்படையில் புலமைத்திறம் விளங்க ஆராய்ந்து முல்லைப் பாட்டாராய்ச்சி, பட்டினப்பாலை ஆராய்ச்சி போன்ற பல ஆராய்ச்சி நூல்களை எழுதிப் பதிப்பித்துள்ளார். தஞ்சாவூர் மாவட்டப் பதிப்பாசிரியராக மட்டுமல்ல; தனித்தமிழ் இயக்கக் காவலராகவும் கவிதை நூல்கள் பல தந்த பாவலராகவும் இனிய எளிய சொற் பொழிவாற்றும் நாவலராகவும் விளங்கியவர் மறைமலை அடிகளார். இதனால்தான் இவர்தம் மறைவு கேட்டு மாமலை மறைந்தது எனக் கலைநயத்தோடு கல்கியில் தலையங்கச் செய்தியில் குறிப்பிட்டனர்.

### இ.வை. அனந்தராமையர்

இவர் தஞ்சை மாவட்டத்திலுள்ள இடையாற்று மங்கலத்தைச் சார்ந்தவர். அடிப்படையில் கல்லூரித் தமிழாசிரியர். சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி பதிப்புக் குழுவில் பணி யாற்றியவர். இவர் கற்றறிந்தோர் ஏத்தும் கலியென எல்லோராலும் போற்றப் பெறும் எட்டுத்தொகை நூலின் ஒன்றாகிய கலித் தொகையை ஆராய்ச்சிக் குறிப்புகளோடு பதிப்பித்தவர். இந்நூலை 1925இல் பதிப்பித்த பெருமையும் இவருக்குண்டு. இந்நூல் மட்டுமல்லாமல் ஐந்திணை எழுபது, கைந்நிலை, களவழி நாற்பது, முத்தையாசாமிப் பிள்ளைத்தமிழ் போன்ற நூல்களையும் மிகச் சிறப்பாகப் பதிப்பித்த பெருந்தகை ஆவார்.

### திரு.வி. கலியாண சுந்தரனார்

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள திருவாரூரில் நவசக்தி என்னும் வார இதழின் பதிப்பாசிரியர் இவர். பல்வேறு நூல்களுக் காகவும், நூலாசிரியர்களுக்காகவும் வரைந்துள்ள முன்னுரைகளும்,

19. அச்சும் பதிப்பும், ப. 269.

அணிந்துரைகளும், பாராட்டுக்களும் தனித்தன்மை வாய்ந்ததாகவும் உயிர்த்துடிப்பு உள்ளவையாகவும் தமிழுணர்வுமிக்கதாகவும் விளங்குகின்றன.

இவர் பெரியபுராணத்தை உரைநடையில் எழுதிக் குறிப்புரைகளுடன் பதிப்பித்துள்ளார். திருமந்திரத்திற்கும் மிகச் சிறந்த பதிப்பைக் கொண்டுவந்துள்ளார். இவர் முப்பதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியும், யாத்தும் பதிப்பித்துள்ளார். இவர் மிகச் சிறந்த பதிப்பாசிரியர் மட்டுமல்லர்; பதிப்புலகை வலம்வந்த பதிப்பாசிரியர்களைத் தமது புலமைத் திறம் விளங்க மதிப்பீடு செய்து வைத்த பெருந்தகை யாவார்.

இப்பெருந்தகையால் அரசியல் உலகும், எழுத்துலகும், பேச்சுலகும், உழைக்கும் வர்க்கமாம் தொழிலாளர் உலகும், இதழியல் உலகும், சமூக உலகும், பெண்ணுலகும் பெற்ற நன்மைகள் அளவிறந்தன என்று சொன்னால் மிகையன்று. திரு.வி.க.வின் நடை கற்பனையும் கருத்தாழமும் கொண்டு கற்போர் உள்ளத்தைக் கலகலக்க வைத்துவிடும்.

### ந.மு. வேங்கடசாமி நாட்டார்

இவர் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள நடுக்காவேரியில் பிறந்தவர். இவர் இன்னா நாற்பது, களவழி நாற்பது, கார் நாற்பது போன்ற பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுக்கு உரை வரைந்து பதிப்பித்துள்ளார். ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை, மூதுரை, நல்வழி, நன்னெறி போன்ற நீதிநூல்களுக்கும் உரை வரைந்து பதிப்பித்துள்ளார். இவை மட்டுமல்லாமல் சிலப்பதிகாரம், மணிமேகலை, அகநானூறு போன்ற நூல்களுக்கும் உரை வரைந்து பதிப்பித்துள்ளார். நா.மு. வேங்கடசாமி நாட்டார் மிகச் சிறந்த உரையாசிரியராகவும் திகழ்ந்துள்ளார் என்னும் உண்மை புலனாகின்றது. பண்டைய பதிப்பாசிரியர்களில் புலமை நலத்திற்கும் கடுமையான உழைப்பிற்கும் அளவிலாத் தமிழ் உணர்விற்கும் எடுத்துக் காட்டாக நாட்டாரும் விளங்கியுள்ளார் என்பது தெளிவாகின்றது. இவர்தம் தமிழ்ப் புலமையையும் கற்பிக்கும் ஆற்றலையும், தமிழ்ப்பரப்பும் செயல்திறனையும் கண்டு அன்றைய சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் நாவலர், சர் பட்டம் வழங்கிச் சிறப்பித்துள்ளமை மிகவும் பொருத்தமாகும். இவரோர் நடமாடும் தமிழ்ச் சங்கமாய்க் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் அங்கமாய்த் திகழ்ந்துள்ளார்.

இத்தனைக்கும் மேலாகத் தமிழுக்கோர் பல்கலைக் கழகம் வேண்டுமென ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னே கோரிக்கை வைத்த தமிழ்ச் செம்மல் ந.மு. வேங்கடசாமி நாட்டார் என்பது இவண் குறிப்பிடத்தக்கதாகும்.

**தி.வை. சதாசிவ பண்டாரத்தார்**

இவர் தஞ்சை மாவட்டத்திலுள்ள திருப்புறம்பயம் எனும் ஊரில் பிறந்தவர். இவர் தொல்காப்பியப் பாயிரத்தை மட்டும் தனியாகப் பதிப்பித்த பெருந்தகை ஆவார். இவர் கல்வெட்டு எழுத்தாராய்ச்சியில் பழுத்த புலமை உடையவர். இவர்தம் ஆராய்ச்சியின் பயனாய்ப் பல நூல்களை எழுதிப் பதிப்பித்துள்ளார். அவற்றுள் முதற்குலோத்துங்கன், பாண்டியர் வரலாறு, கருணாகரத் தொண்டைமான், பிற்காலச் சோழர் வரலாறு, தமிழ் இலக்கிய வரலாறு, கல்வெட்டுக்களால் அறியப்பெறும் உண்மைகள் இலக்கிய ஆராய்ச்சியும் கல்வெட்டுகளும் போன்றவை குறிப்பிடத்தக்கவை யாகும்.

**ச. சோமசுந்தர தேசிகர்**

இவர் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள திருவாரூரைச் சார்ந்தவர். இவர் தமிழ்மொழியில் ஆழ்ந்த புலமை பெற்று விளங்கியதோடு மட்டுமல்லாமல் கல்வெட்டு, வானவியல் ஆகிய துறைகளிலும் புலமை பெற்றுத் திகழ்ந்தார். இவர் சோழ மண்டல சதகம், இலக்கண விளக்கம் (பொருளதிகாரம்), மயிலை யமக அந்தாதி போன்ற பல நூல்களைப் பதிப்பித்துள்ளார். தமிழ்ப் புலவர்கள் வரலாறு, சைவ சிகாமணிகள் இருவர், நரவாணத் தத்த சரித்திரம் போன்ற நூல்களை எழுதியும் பதிப்பித்துமுள்ளார்.

**சாமி. வேலாயுதம்பிள்ளை**

தமிழ்மொழியின் சிறப்புகளைக்கூறும் செய்யுட்களை எல்லாம் தொகுத்து, மொழி அரசி என்னும் பெயரில் பதிப்பித்துள்ளார். திருக்குறள் சொல்படை என்னும் நூலையும் எழுதிப் பதிப்பித்துள்ளார். ஒல்காப் புகழ்த் தொல்காப்பியத்தைத் தமிழில் மொழிபெயர்த்தவரும் பெருந்தமிழறிஞரும், தமிழ் உணர்வாளரும் ஆகிய "இலக்குவனார்" சாமிவேலாயுதம் பிள்ளையின் மாணவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழ் நூற்பதிப்பு வரலாற்றில் தஞ்சை மாவட்டப் பதிப்பாசிரியர்களும் பெரும்பங்கு வகிக்கின்றனர். பழந்தமிழ் நூற்

பதிப்பாளர்களில் முன்னோடியாகச் சுட்டத்தக்கவர் மூவர் என்பதில் உ.வே. சாமிநாதையரும் ஒருவர் என்பது முதற்கண் குறிப்பிடத் தக்கத்தாகும். எண்ணிக்கை அளவில் அதிகமாக நூல்களைப் பதிப்பித்துள்ளார். பதிப்பு நெறிமுறைகளைப் பொறுத்தவரை சுவடிப் பதிப்புகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பதற்கு இலக்கணமாக இவர்தம் பதிப்புகள் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

தஞ்சை மாவட்டப் பதிப்பாசிரியர்கள் பலரும் மிகச் சிறந்த உரையாசிரியர்களாகவும் காணப்படுகின்றனர். அவ்வடிப்படையில் பின்னத்தூர் நாராயண சாமி ஐயர், ந.மு. வேங்கடசாமி நாட்டார், மறைமலை அடிகள் போன்றோர் குறிப்பிடத்தக்கவராவர்.

ஏட்டுச்சுவடியில் இருந்த திருவாசகத்திற்கு அச்சு வடிவம் கண்ட த. சிவக்கொழுந்து தேசிகர் தஞ்சை மாவட்டப் பதிப்பாசிரியருள் ஒருவராவார்.

சங்க இலக்கியங்களைப் பதிப்பித்த பெருமக்களுள் பலர் தஞ்சை மாவட்டப் பதிப்பாசிரியர்களாகத் திகழ்கின்றனர். அவ்வகையில் டாக்டர் உ.வே. சாமிநாதையர், நாராயணசாமி ஐயர், இ.வை. அனந்தராமையர் போன்றோரைக் குறிப்பிடலாம்.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள், காப்பியங்கள், நீதி நூல்கள் போன்ற பல்துறை நூல்களையும் பதிப்பித்த பெருமை ந.மு. வேங்கட சாமி நாட்டாரைச் சாரும். தஞ்சாவூர் மாவட்டப் பதிப்பாசிரியர் பலர் ஆராய்ச்சி அறிஞராகவும், கல்வெட்டியல் அறிஞராகவும் திகழ்கின்றனர். அவ்வகையில் மறைமலை அடிகள், ந.மு. வேங்கட சாமி நாட்டார். சதாசிவ பண்டாரத்தார், ச. சோமசுந்தர தேசிகர் போன்றோர் குறிப்பிடத்தக்கவராவர்.

தமிழ்மொழியின் வாழ்விலும் வளர்ச்சியிலும் அக்கறை கொண்டவர்களாக, தனித்தமிழ் இயக்கம் கண்ட தமிழுணர்வுப் பேராளர்களாக, தமிழுக்கோர் பல்கலைக் கழகம் வேண்டுமென்று கோரிக்கை வைத்த முதுபெரும் புலவர்களாக விளங்கியவர்கள் தஞ்சாவூர் மாவட்டப் பதிப்பாசிரியர் என்னும் வரையறைக்குள் முத்திரை பதிக்கின்றார்கள்.

பதிப்பு ஆய்வு தருவதில் மட்டுமல்லர்; படைப்பிலக்கியங்கள் தருவதிலும் நாங்கள் சளைத்தவர்கள் அல்லர் எனக் கட்டியம் கூறுவதிலும் வல்லவர்களாகப் பலர் திகழ்கின்றனர். அவ்வகையில் சிவக்கொழுந்து தேசிகர் பின்னத்தூர் நாராயண சாமி ஐயர், உ.வே. சாமிநாதையர், திரு.வி. கலியாணசுந்தரனார் போன்றோரைக் குறிப்பிடலாம்.

# புதுவைப் பதிப்பாசிரியர்கள்

பாண்டிச்சேரி என்றும் புதுச்சேரி என்றும் சுட்டப்படும் புதுவை தமிழகத்தின் அண்டை மாநிலமாகத் தற்பொழுது திகழ் கின்றது. இம்மாநிலத்தில் வாழ்ந்த பண்டைய பதிப்பாசிரியர்களாகப் பலர் தமிழ் நூற்பதிப்பு வரலாற்றில் சுட்டத் தகுந்தவர்களாக விளங்குகின்றனர். அப்பெருமக்களுள் அ. முத்துச்சாமிப் பிள்ளை, நயனப்ப முதலியார், தாண்டவராய முதலியார், சவராயலு நாயகர், இராமானுஜ நாவலர் போன்றோர் குறிப்பிடத்தக்கவராவர்.

## புதுவை நயனப்ப முதலியார்

இவர் புதுச்சேரியில் பிறந்தவர். இவர் தஞ்சைவாணன் கோவை, நேமிநாதம், நாலடியார், திவாகர நிகண்டு, சூடாமணி ஆகிய நூல்களைப் பதிப்பித்துள்ளார். இவர் கல்லூரிக் கல்விச் சங்கத்தில் தலைமைத் தமிழ்ப் புலவராக இருந்துகொண்டு ஓய்வு நேரங்களில் ஓலைச்சுவடிகளைப் பதிப்பிக்கும் பணியில் ஈடுபட்டு வந்துள்ளார். எனவே சுவடிப் பதிப்பாசிரியர் நிலையில் சுட்டத்தக்கவராக விளங்குகின்றார். இவர்தம் நூற்பதிப்புகள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சார்ந்தனவாகவும் திகழ்கின்றன.

## தாண்டவராய முதலியார்

இவர் புதுவையை அடுத்த வில்லியநல்லூரில் பிறந்தவர். இவர் நன்னூல், நாலடியார், புறப்பொருள் வெண்பா மாலை, அகப்பொருள் போன்ற நூல்களை உரையின்றி மூல நூல்களாகப் பதிப்பித்துள்ளார். சூடாமணி நிகண்டு, திவாகர நிகண்டு போன்ற நிகண்டு நூல்களையும் பதிப்பித்துள்ளார்.

இவை மட்டுமல்லாமல் வீரமாமுனிவர் தொகுத்தளித்த சதுரகராதியையும் பதிப்பித்துள்ளார். இலக்கிய வரலாற்றிலும், இலக்கண வரலாற்றிலும், அகராதி வரலாற்றிலும், தாண்டவராய முதலியார் பெயர் தவிர்க்க இயலாதது. தமிழ் நூற்பதிப்பு வரலாற்றில் முத்தாய்ப்பாய்க் குறிப்பிடத்தக்கதுமாகும்.

## புதுவைச் சவராயலு நாயகர்

இவர்தம் புகழ் புதுவையிலும், தமிழகத்திலும், வெளிநாடு களிலும் பரவியுள்ளது. திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி

சுந்தரம் பிள்ளையே இவரைப் பாராட்டிச் சவராயலு நாயகர் மாலை பாடியுள்ளார் என்பதும் தியாகராச செட்டியார் இவர் பெயரில் இரட்டை மணிமாலை பாடியுள்ளார் என்பதும் இவர்தம் புகழுக்குச் சான்றுகளாகும்.

இவர் பேரின்ப சதகம், பேரின்ப அந்தாதி, திருநவச்சதகம் போன்ற நூல்களைத் தேவ மாதாவின் பேரில் பாடி அச்சில் பதிப்பித்துள்ளார். இவர் காலத்தில் வந்த இசைப்பாடல்களைத் தொகுத்து அச்சில் பதிப்பித்துள்ளார்.

## இராமானுஜ நாவலர்

இவர் புதுச்சேரியைச் சார்ந்தவர். வைணவ சமயத்தை வளர்க்கப் பாடுபட்டவருள் இவரும் ஒருவராவார். போற்றித் திருப்பதிகம், எதிசைச் சதகம், கூரத்தாழ்வார் பிரபாகம் போன்ற இருபத்தைந்திற்கும் மேற்பட்ட நூல்களை எழுதிப் பதிப்பித்தவராவர். எனவே இவர் நூலாசிரியராகவும், பதிப்பாசிரியராகவும் கருதத்தக்கவ ராவார் எனலாம்.

## அ. முத்துசாமிப் பிள்ளை

இவர் பாண்டிச்சேரியில் பிறந்தவராவார். இவர் ஓலைச் சுவடிகளை முதன்முதலாகத் திரட்டும் பணியில் ஈடுபட்டவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவர் இலக்கண நூல்கள் சிலவற்றைப் பதிப்பித்தார். அவற்றுள் நன்னூல், வெண்பா மாலை ஆகியவை குறிப்பிடத்தக்கன. வெண்பாமாலை என்பது புறப்பொருள் வெண்பா மாலையாக இருக்கலாம். இந்நூல் மூலம் மட்டும் பதிப்பித்துள்ளார்.

நம்முடைய முன்னோர்கள் கையெழுத்துப் படியாக எழுதிப் படித்தவற்றைத் தொகுத்து ஆத்துமத்தியானம் எனும் பெயரில் பதிப்பித்துள்ளார். இவை மட்டுமல்லாமல் நசரைக் கலம்பகம், ஞான திக்கண் கலம்பகம், வேதவிகற்பதிகாரம் போன்ற நூல்களை எழுதியும் பதிப்பித்துள்ளார். இவர்தம் நூற்பதிப்புகள் அனைத்தும் 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வெளிவந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

புதுவைப் பதிப்பாசிரியர்கள் பழந்தமிழ் இலக்கண நூல்கள் பலவற்றைப் பதிப்பித்துள்ளனர். அ. முத்துசாமிப்பிள்ளை முதன் முதலாக ஓலைச் சுவடிகளைத் திரட்டிய பெருமைக்குள்ளாகின்றார். இவர்தம் பதிப்புகள் சுவடிப் பதிப்புகளாக விளங்குகின்றன.

அ. முத்துசாமிப் பிள்ளையும், புதுவை நயனப்ப முதலியாரும் சுவடிப் பதிப்பாசிரியர்களாகச் சுட்டத்தக்க நிலையில் விளங்குகின்றனர். வைணவ சமயத்தைச் சேர்ந்த இராமானுஜ நாவலர் நூலரசிரிய ராகவும், பதிப்பாசிரியராகவும் திகழ்கின்றார். தாண்டவராய முதலியார் நிகண்டு நூல்களையும் அகராதிகளையும் பதிப்பித்த பெருமைக்குரியவராகின்றார். புதுவைப் பதிப்பாசிரியர்கள் எண்ணிக்கையில் குறைவாகக் காணப்பட்டாலும் தமிழ்நூற் பதிப்பு வரலாற்றில் குறிப்பிடத்தக்கவராவர்.

# இராமநாதபுரத்துப் பதிப்பாசிரியர்கள்

தமிழ் நூற்பதிப்பு வரலாற்றில் இராமநாதபுரம் மாவட்டமும் முக்கிய இடம்பெறுகின்றது. இராமநாதபுரம் புண்ணியத்தலங்களுள் ஒன்று என்னும் பெருமை பெற்றிருந்தது. அண்மையில் இந்தியக் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் அவர்கள் பிறந்த ஊர் என்னும் பெருமையும் பெற்றது. இத்தனைக்கும் மேலாகச் செந்தமிழ்ப் புலமைமிக்க கவிராயர்களையும், உரையாசிரியர்களையும், ஆராய்ச்சி யாளர்களையும், பதிப்பாசிரியர்களையும் தந்த பெருமையும் இம்மாவட்டத்தைச் சாரும். இராமநாதபுரத்துப் பதிப்பாசிரியர்களில் முகவை இராமானுஜ கவிராயர், பொன்னம்பல சுவாமிகள், இரா. இராகவையங்கார், மு. இராகவையங்கார் போன்றோர் குறிப்பிடத் தக்கவராவர்.

### முகவை இராமானுஜ கவிராயர்

இவர் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள முகவை என்னும் ஊரில் பிறந்தவர். இவர் திருக்குறள், ஆத்திசூடி, கொன்றை வேந்தன், வெற்றி வேற்கை, இனியவை நாற்பது ஆகிய நீதிநூல்களுக்கு உரையெழுதிப் பதிப்பித்துள்ளார். நன்னூலுக்கு உரைசெய்து பதிப்பித்துள்ளார். இலக்கணச் சுருக்கம் என்று நூலை எழுதிப் பதிப்பித்துள்ளார். திருக்குறள், ஆத்மபோதம் ஆகிய நூல்களை மொழிபெயர்த்துப் பதிப்பித்துள்ளார். பஞ்சரத்தின மாலிகை, பார்த்தசாரதி மாலை, வரதராசப் பெருமாள் பதிற்றுப் பத்தந்தாதி ஆகியவற்றைப் பதிப்பித்துள்ளார்.

முகவை இராமானுஜ கவிராயர் பதிப்பாசிரியராக மட்டுமல்லர்; படைப்பாளர், மொழிபெயர்ப்பாளர், உரையாசிரியர், நூலாசிரியர், போதக ஆசிரியர், கவிஞர் என்றெல்லாம் சுட்டத்தக்க நிலையில் விளங்குகின்றார்.

### பொன்னம்பல சுவாமிகள்

இவர் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர். இவர் பிரபோத சந்திரோதயம் (மெய்ஞ்ஞான விளக்கம்), பஞ்சதகி, பாடுதுறை ஆகிய நூல்களை அச்சேற்றிப் பதிப்பித்துள்ளார்.

கைவல்லிய நவநீதம், வேதாந்த சூடாமணி, பகவத் கீதை ஆகிய நூல்களுக்கு உரையெழுதிப் பதிப்பித்துள்ளார். இவர் தத்துவ நூல்களைப் பதிப்பித்துள்ளதாகவும் அவற்றிற்கு உரையெழுதி யுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

## மகாவித்துவான் இரா. இராகவையங்கார்

தமிழ் இலக்கிய வரலாற்றில் இரண்டு இராகவையங்கார்கள் உள்ளனர். இருவருமே இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களை வேறுபடுத்தி அறிய உதவுவது இரா., மு. என்னும் முதலெழுத்துக்களேயாகும். இவர் செந்தமிழ் மாத இதழின் முதல் பதிப்பாசிரியராகத் திகழ்ந்தவர். பல நூல்களைச் சுவடிகளிலிருந்து பதிப்பித்துள்ளமை இவர்தம் தனித்தன்மையாகும்.

> *பண்டைய புலவர்கள் வாழ்ந்த ஊர்களுக்கெல்லாம் சென்று ஏட்டுச் சுவடிகளைத் தேடிச் சேர்த்துள்ளார். அவற்றை ஆராய்ந்து மதுரைத் தமிழ்ச் சங்கத்து வாயிலாகச் சில நூல்களை மட்டும் இவர் பதிப்பித்துள்ளார்.*
>
> *தமிழ் நூற்பதிப்பு வரலாற்றில் மகாவித்துவான் இராகவையங்கார் குறிப்பிடத்தக்கவர் என்பதற்கு அவர்தம் பதிப்புப் பணியே சான்றாகும். இவர் தொல்காப்பியம் (செய்யுளியல்) நேமிநாதம் பன்னிரு பாட்டியல் போன்ற இலக்கண நூல்களைப் பதிப்பித்துள்ளார். இவற்றுள் தொல்காப்பியச் செய்யுளியலுக்கு நச்சினார்க்கினியர் உரையைக் கண்டுபிடித்து அச்சிட்டுப் பதிப்பித்து அளித்த பெருமை இவரையே சாரும்.*[1]

## மு. இராகவையங்கார்

இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த இராகவையங்கார்கள் இருவருமே மகாவித்துவான் பட்டம் பெற்றவர்கள். செந்தமிழ் மாத இதழின் பதிப்பாசிரியராகவும் திகழ்ந்தவர்கள். இவர் நரிவிருத்தம், சந்திரலோகம், திருக்கலம்பகம், சிதம்பரப்பாட்டியல், விக்கிரம சோழனுலா போன்ற நூல்களைப் பதிப்பித்துள்ளார்.

---

1. அச்சும் பதிப்பும், ப. 216.

இவர் தொல்காப்பியம் பொருளதிகார ஆராய்ச்சி, கலிங்கத்துப்பரணி ஆராய்ச்சி போன்ற பத்துக்கு மேற்பட்ட மிகச் சிறந்த ஆராய்ச்சி நூல்களை எழுதிப் பதிப்பித்துள்ளார்.

இராமநாதபுர மாவட்டத்தைச் சேர்ந்த பண்டைய பதிப்பாசிரியர்கள் பல்துறைப் புலமையும் பன்மாண் சிறப்பும் பெற்றவர்களாகத் திகழ்கின்றார்கள். படைப்பாளர், மொழிபெயர்ப்பாளர், நூலாசிரியர், உரையாசிரியர், போதக ஆசிரியர், கவிஞர், ஆராய்ச்சியாளர், பதிப்பாசிரியர், நூற்பதிப்பாசிரியர் என்றெல்லாம் சுட்டத்தக்க நிலையில் உள்ளனர். இவர்தம் பன்மாண் சிறப்புகள்தாம் பதிப்பாசிரியர் என்ற சொல்லுக்குச் செழுமை பெற்றுத் தருகின்றன.

இராமநாதபுரத்துப் பதிப்பாசிரியர்களில் இரா. இராகவையங்கார், இராகவையங்கார் இருவருமே இரண்டு கண்கள் போல் விளங்குகின்றனர். இரா. இராகவையங்கார் சுவடிகள் திரட்டியும், சுவடிப் பதிப்பாசிரியராக விளங்கியதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இலக்கணம், இலக்கியம். தொல்காப்பியம், சிதம்பரப் பாட்டியல், பன்னிருபாட்டியல், சங்க இலக்கியம், சிற்றிலக்கியம், நீதி நூல்கள் மற்றும் சமய நூல்களையும் பல்துறை நூல்களையும் தமிழ்கூறு நல்லுலகத்திற்கு வழங்கிய பதிப்பாசிரியர்கள் என்று நன்றி உணர்வோடு குறிப்பிடத்தக்கவராவர். இப்பெருமக்களின் பதிப்புப் பணி பாராட்டத்தக்கதாகும்.

பொன்னம்பல சுவாமிகள் போன்றோர் சமயங்கடந்த நிலையில் தத்துவ நூல்களைப் பதிப்பதில் தனியார்வம் காட்டியுள்ளார். எண்ணிக்கையில் அதிகம் இல்லையென்றாலும் இராமநாதபுரம் மாவட்டத்துப் பதிப்பாசிரியர் எண்ணத்தாலும் அவர்தம் கைவண்ணத்தாலும் உயர்ந்து நிற்கின்றனர்.

# சென்னைப் பதிப்பாசிரியர்கள்

சென்னை மற்றும் சென்னையைச் சார்ந்த இடங்களில் உள்ளவர்கள் சென்னைப் பதிப்பாசிரியர்கள் எனக் கருதத்தக்கவர் ஆவர். திருத்தணிகைப் பெருமாளையர், சரவணப் பெருமாளையர், வேங்கடாசல முதலியார், தொழுவூர் செ. வேலாயுத முதலியார், திருமயிலைச் சண்முகம் பிள்ளை, வேதாந்தி கோ. வடிவேலு செட்டியார், அடிகளாசிரியர் போன்றோர் சென்னைப் பதிப்பாசிரியர்களில் குறிப்பிடத்தக்கவராவர்.

## திருத்தணிகை விசாகப் பெருமாளையர்

இவர் சென்னை மாகாணக் கல்லூரியில் தலைமைத் தமிழாசிரியராகப் பணியாற்றியவர். இவர் திருக்கோவையார், நன்னூல் ஆகியவற்றுக்கு உரையெழுதிப் பதிப்பித்துள்ளார். இலக்கணச் சுருக்கம், பாலபோத இலக்கணம், அணியிலக்கணம், யாப்பிலக்கணம் ஆகியவற்றை வினாவிடை முறையில் எழுதிப் பதிப்பித்துள்ளார்.

## சரவணப் பெருமாளையர்

இவர் பயன்படத்தக்க பல நூல்களைப் பதிப்பித்து உள்ளார். அந்தாதி நூல்கள் பலவற்றை அச்சிட்டுப் பதிப்பித்துள்ளார். அவற்றுள் அருணகிரியந்தாதி, பழமலையந்தாதி, திருக்கருவைப் பதிற்றந்தாதி போன்றவை குறிப்பிடத்தக்கவையாகும். கொன்றை வேந்தன், திருவள்ளுவமாலை, நைடதம், நல்வழி, நறுந்தொகை, நன்னெறி, நான்மணிமாலை, வாக்குண்டாம் ஆகியவற்றை மூலமும் உரையுமாகப் பதிப்பித்துள்ளார். திருவிளையாடற்புராணம், கந்தரலங்காரம் போன்ற பக்தி இலக்கியங்களையும் பதிப்பித்துள்ளார். திருக்குறள், நாலடியார் போன்ற நீதிநூல்களையும் பதிப்பித்துள்ளார். இலக்கணம், இலக்கியம் எனப் பல்துறை நூல்களையும் பதிப்பித்த பெருமைக்குரியவர் சரவணப் பெருமாளையர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## வேங்கடாசல முதலியார்

இவர் சென்னையில் சரஸ்வதி அச்சுக்கூடம் என்ற ஒன்றை நிறுவிப் பல நூல்களைப் பதிப்பித்து வந்தவர். சென்னைக் கல்விச்-

சங்கத்தமிழ்ப் புலவராகவும் விளங்கியவராவார். இவர்தம் பதிப்புப் பணியின் விளைவால் வெளிவந்த நூல்கள் பல. முதன்முதலாகக் கம்பராமாயணத்தைக் காண்டம் காண்டமாகப் பதிப்பித்த பெருமைக் குரியவராகவும் இவர் திகழ்கின்றார். இவர் ஸ்ரீகிருஷ்ணபகவான் தூது, இராம நாடகம், பிரகலாதன் விலாசம், அரிச்சந்திர புராணம், திருவேங்கடத் தந்தாதி, திருவரங்கக் கலம்பகம், திருமாலிருஞ் சோலைமலை அழகரந்தாதி போன்ற பல நூல்களையும் பதிப்பித்துள்ளார். இலக்கிய வரலாற்றிலும் தமிழ் நூற்பதிப்பு வரலாற்றிலும் சிற்றிலக்கிய வரலாற்றிலும் இவர்தம் பணி குறிப்பிடத்தக்கதாகும்.

## தொழுவூர் செ. வேலாயுத முதலியார்

இவர் தொழுவூரில் பிறந்து சென்னையில் வாழ்ந்தவர். இராமலிங்கர்பால் பெரிதும் ஈடுபாடு கொண்டவர். அவர்தம் பாடல்களைத் தொகுத்து அருட்பா என்ற பெயரில் ஐந்து திருமுறைகளாக அச்சிட்டுப் பதிப்பித்தவர். இவர் பல உரைநடை நூல்களையும், கலம்பகங்களையும், கோவைகளையும் பல மாலைகளையும் இயற்றியதோடு மட்டுமல்லாமல் பதிப்பாளராகவும் விளங்குகின்றார்.

## திருமயிலைச் சண்முகம்பிள்ளை

இவர் சென்னையில் வாழ்ந்தவர். இவர் அடிப்படையில் ஒரு தமிழாசிரியர். தொண்டை மண்டலம் பள்ளி மற்றும் திருமயிலையில் உள்ள சாந்தோம் கல்லூரியில் பணியாற்றியவர். இதனால் இவர் பள்ளி மற்றும் கல்லூரித் தமிழாசிரியர் எனும் இவ்விரண்டு பணிகள் செய்தவர் ஆவார். அல்லாது நூலாசிரியர், உரையாசிரியர், நூற்பதிப்பாசிரியர், இதழாசிரியர் எனப் பல்வேறு நிலைகளில் இவர்தம் பணிகளைச் சுட்டிப் பாராட்டலாம். இவர்தம் பணிகளின் பண்பையும் பைந்தமிழ் விருப்பையும் பாராட்டுகின்ற வகையில் மதுரைத் தமிழ்ச் சங்கம் இவருக்கு, 'மகாவித்துவான்' என்னும் பட்டத்தை அளித்துள்ளது.

திருமயிலை உலா, திருமுல்லைவாயிற் புராணம், கந்த புராண வசனம், கபாலீசுவரர் பஞ்சரத்தினம் போன்ற சிற்றிலக்கிய நூல்களை இயற்றிய நிலையில் நூலாசிரியராகத் திகழ்கின்றார்.

கம்பனின் கைவண்ணத்தில் உருவான கம்பராமாயணத்தின் அயோத்தியா காண்டத்திற்கு உரைவரைந்த சிறப்பிற்குரியவர்.

மட்டுமல்லாமல் சிற்றிலக்கிய நூல்கள் பலவற்றிற்கு உரை வரைந்துள்ளார். குறிப்பாகப் பொன் வண்ணத்தந்தாதி, திருக்கயிலாய ஞான உலா, திருவாரூர் மும்மணிக்கோவை, பிச்சாடன நவமணி மாலை போன்றவற்றைச் சுட்டலாம். இவ்வகையில் இவரோர் உரையாசிரியராக மிளிர்கின்றார்.

இத்தனைக்கும் மேலாகப் பண்டைத் தமிழ் நூல்கள் பலவற்றைப் பதிப்பித்த மிகச் சிறந்த பதிப்பாசிரியராவார். ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றாக விளங்கும் மணிமேகலையை முதன்முதலில் அச்சிட்டு வெளியிட்ட பெருமை இவரையே சாரும். நன்னூல், தஞ்சைவாணன் கோவை போன்றவற்றை உரையுடன் பதிப்பித்துள்ளார். சித்தர் இலக்கியமாம் சிவவாக்கியர் பாடல்கள், புராண நூல்களுள் ஒன்றாக விளங்கும் மச்சபுராணம் போன்ற பழந்தமிழ் நூல்களையும் பதிப்பித்த பெருமைக்குரியவர். அன்னைத் தமிழுக்கு அணிசேர்க்கும் பல்வேறு பணிநிலைகளில் செயலாற்றித் தம் வாழ்நாளைச் செலவழித்துள்ளார். நூற் பதிப்பாசிரியராக விளங்கியதோடு மட்டுமல்லாமல் இதழாசிரியராகவும் பணியாற்றி யுள்ளார். வித்தியாவிநோதனி என்னும் மாத இதழைச் சில காலம் நடத்திவந்துள்ளார். இவர்தம் பல்துறைப் புலமையும் பன்மாண் சிறப்பும் பைந்தமிழ் விருப்பும் இவருக்கு மகாவித்துவான் என்னும் பட்டத்தைப் பெற்றுத் தந்துள்ளதெனில் மிகையாகாது.

### வேதாந்தி கோ.வடிவேலு செட்டியார்

இவர் முப்பத்தேழு ஆண்டுகள் தமிழாசிரியராகப் பணியாற்றிய தகைமையாளர். ஆறுமுக நாவலர் வித்தியானுபாலன அச்சியந்திரசாலை உரிமையாளராகத் திகழ்ந்தது போல, கோ. வடிவேலு செட்டியார் சச்சிதானந்த அச்சக உரிமையாளராகத் திகழ்ந்தவர். தமிழாசிரியராகப் பணியாற்றியதோடு மட்டுமல்லாமல் நூலாசிரியர், உரையாசிரியர், பதிப்பாசிரியர், இதழாசிரியர், மொழிபெயர்ப்பாளர் எனப் பல்வேறு நிலைகளில் பணியாற்றி அன்னைத் தமிழின் வளர்ச்சிக்கு அணிசேர்த்தவர்களுள் கோ. வடிவேலு செட்டியாரும் ஒருவராவார்.

வேதாந்த சூடாமணி, குசேலா பாக்கியானம், பகவத் கீதை போன்றவற்றை உரைநடையாக எழுதி வெளியிட்ட நிலையில் இவரோர் நூலாசிரியர். சிவப்பிரகாசப் பெருந்திரட்டு, நாநாசீவ வாதக் கட்டுரை, திருக்குறள் போன்ற நூல்களுக்கு உரை எழுதிய

நிலையில் இவரோர் உரையாசிரியர். மூலமும் உரையுமாகத் திருக்குறள், கைவல்ய நவநீதம், பகவத் கீதை, கந்தர் அநுபூதி, கந்தர் கலிவெண்பா, விவேக சூடாமணி, சிவஞானம் போன்றவற்றைச் சிறப்பாகப் பதிப்பித்த நிலையில் இவரோர் பதிப்பாசிரியர். வேதாந்த பரிபாஷை, தர்க்க பரிபாஷை போன்றவை இவர்தம் வடமொழிப் புலமைக்குச் சான்றாகும்.

இவை மட்டுமல்லாமல் லோகோபகாரி, சக்கரவர்த்தினி என்னும் இதழ்களில் பணியாற்றிய நிலையில் இவரோர் இதழாசிரியர். வேதாந்தத்தில் புலமையோடு விளங்கிய வேதாந்தச் சொற்பொழிவாளர். பதிப்பாசிரியர் என்போர் பல்துறைப் புலமை மிக்கவராக இருத்தல் வேண்டும் என்பதற்கு இவர்தம் பணி நிலைகள் தக்க சான்றாகும்.

## மூதறிஞர் அடிகளாசிரியர்

இவர் சென்னைக்கு அருகில் உள்ள விழுப்புரம் மாவட்டத்தைச் சார்ந்த குகையூர் என்னும் ஊரில் பிறந்தவர். தஞ்சாவூர்க் கரந்தைப் புலவர் கல்லூரியில் ஏறத்தாழ 20 ஆண்டுகள் பணியாற்றியவர். சென்னைப் பல்கலைக் கழகத்திலும் தமிழ்ப் பல்கலைக்கழகத்திலும் பணியாற்றிய தகைமையாளர். தமிழ்ப் பணிக்காகவே தம் பொருளாதாரத்தைச் செலவிட்டு வேண்டுமென்றே வளங்குன்றிய வாழ்வைத் தேடிக் கொண்டவர். இவர் உரை எழுதிய நூல்கள், பதிப்பித்த நூல்கள், ஆராய்ச்சி நூல்கள், படைப்பிலக்கிய நூல்கள் எனப் பலதிறப்பட்ட நூல்களை எழுதியும் பதிப்பித்தும் பைந்தமிழுக்குத் தொண்டாற்றியவராவார்.

இவர் பதிப்பித்த உரை நூல்களை இரண்டு வகைப் படுத்தலாம். பண்டைய உரையாசிரியர்கள் உரை கண்ட நூல்களை மூலமும் உரையுமாகப் பதிப்பித்தல் என்பது ஒன்று. இவர் தாமே உரையெழுதிப் பதிப்பித்தல் என்பது மற்றொன்று. மூலம் மட்டும் என்னும் நிலையில் பதிப்பித்த நூல்களும் உண்டு.

சுவடிப்பதிப்பு என்னும் நிலையில் ஆறு நூல்களை ஓலைச் சுவடிகளிலிருந்து பெயர்த்தெழுதிப் பதிப்பித்துள்ளார். அவ்வகையில் வீரசைவப்பிரமாணம், சுதமணிமாலை (மூலம்), சிவப்பிரகாச விலாசம் (மூலம்), காமநாதர் கோவை, மேன்மைப் பதிகம், சதுர்லிங்க தசுகோத்திர சதகம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவர் மிகச்

சிறந்த பதிப்பாசிரியர் என்பதற்குச் சான்று பகர்வன இவர்தம் தொல்காப்பியப் பதிப்புகளாகும்.

தொல்காப்பிய எழுத்ததிகாரத்தைச் சொந்தப் பொருட் செலவில் வெளியிட்டுள்ளார். தொல்காப்பியச் சொல்லதிகாரத்தையும், பொருளதிகாரத்தையும் இளம்பூரணர் உரையுடன் தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடாகக் கொண்டு வந்துள்ளார். இவர்தம் பதிப்புகளில் பாட வேறுபாட்டு ஆராய்ச்சிக்கு முதன்மை கொடுத்துள்ளமை சுவடி ஆர்வலர்களுக்கு மகிழ்ச்சி தருவதாகும். என்னை நன்றாக இறைவன் படைத்தனன். தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே என்னும் திருமூலரின் வாக்கிற்கிணங்க அகவை முதிர்ந்த நிலையிலும் தமிழுக்கு அருந்தொண்டாற்றி வருகின்றார். 1910இல் பிறந்த இவர் நம்மிடையே வாழும் புலவராக நாளும் நற்றமிழுக்குத் தொண்டாற்றும் நற்றமிழ் அறிஞராகக் குகையூர் திருமூல சித்த நாதேச்சுவர ஆதீனத்தின் குருவாக அமர்ந்து அருளாட்சியும் செய்து வருகின்றார்.

சென்னைப் பதிப்பாசிரியர்கள் எண்ணிக்கையில் குறைந்த அளவில் இருந்தாலும் இவர்தம் எண்ணத்தாலும் எண்ணத்தின் வெளிப்பாடுகளாலும் வெளிவந்த தமிழ் நூல்கள் பலவாகும். பன்மொழிப் புலவர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனாரும், டாக்டர் துரை அரங்கனாரும், வேதாந்தி கோ. வடிவேலு செட்டியாரின் நன்மாணாக்கர் என்பதும் பேராசிரியர் கா. நமச்சிவாய முதலியாரும் மயிலை சீனி. வேங்கடசாமி அவர்களும் திருமயிலைச் சண்முகம்பிள்ளை அவர்களிடம் தமிழ் பயின்றவர்கள் என்பதும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும்.

# மதுரை மாவட்டப் பதிப்பாசிரியர்கள்

வரலாற்றுச் சிறப்பு மிக்கது மதுரை மாநகர். இம்மாநகருக்குச் சங்கம் வைத்து மொழி வளர்த்த பெருமை உண்டு. இருப்பினும் தமிழ்நூற் பதிப்பாசிரியர்கள் இங்கு அதிகம் இருந்ததாகத் தெரிய வரவில்லை.

மழவை மகாலிங்கையர், அரசஞ் சண்முகனார், வி.கோ. சூரிய நாராயண சாஸ்திரியார் போன்ற சிலரே சுவடிப் பதிப்பாசிரியர் களாகச் சுட்டத்தக்கவராக விளங்குகின்றனர்.

## மழவை மகாலிங்கையர்

இவர் மதுரை மாவட்டத்திலுள்ள மழவராயனேந்தல் எனும் ஊரில் பிறந்தவர். இவர் மதுரைச் சிங்காரச் சதகம், போதக வாசகம், இலக்கணச் சுருக்கம் ஆகிய நூல்களை இயற்றிய நூலாசிரியர் ஆவார். இவர் பெரியபுராணம், அருணாசல புராணம் ஆகிய நூல்களைப் பதிப்பித்த பதிப்பாசிரியர் ஆவார். இத்தனைக்கும் மேலாகத் தொல்காப்பியத்தை முதன்முதலாக அச்சில் கொண்டு வந்தவராவார்.

> *தொல்காப்பியம் – எழுத்ததிகாரம் நச்சினார்க் கினியர் உரையை 1847இல் திருவண்ணமலை கல்விக்கடல் அச்சுக் கூடத்தில் பதிப்பித்துள்ளார்.*[1]
>
> *தொல்காப்பியம் எழுத்திகாரம், நச்சினார்க் கினியர் உரையுடன் பல பிரதிகளைக் கொண்டு பரிசோதித்து 1845இல் சென்னைக் கல்விக் கூட அச்சகத்தில் அச்சிட்டுப் பதிப்பித்தவ ராவார்*[2]

என்பார் அறிஞர் மா.சு. சம்பந்தன். முன்னது திருவண்ணாமலை கல்விக் கடல் அச்சகம், பின்னது சென்னைக் கல்விக்கூட அச்சகம்

---

1. தொல்காப்பியப் பதிப்புகள், முனைவர் ச.வே. சுப்பிரமணியன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1992, ப. 62.
2. அச்சும் பதிப்பும், மா.சு. சம்பந்தன், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1997, ப. 166.

என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவர்தம் பதிப்பு நெறிமுறைகள் சுட்டத்தக்கதாகும்.

> *சுவடியில் இருப்பதை அவ்வாறே வெளியிட்டுள்ளார். நூற்பாவும் உரையும் உரைநடை அமைப்பிலேயே உள்ளன. நூற்பா வடிவத்தில் நூற்பாக்கள் தரப்பெறவில்லை. முகவுரை, பதிப்புப் போன்றவை இல்லை.*[3]

தொல்காப்பியப் பதிப்பு வரலாற்றில் இவர்தம் பெயர் தவிர்க்க இயலாததாகும். இவர் சென்னை மாகாணக் கல்லூரியில் தமிழாசிரியராகப் பணியாற்றிய பெருந்தகை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

### அரசஞ் சண்முகனார்

இவர் மதுரை மாவட்டத்திலுள்ள சோழவந்தான் என்னும் ஊரில் பிறந்தவர். இவர்,

> *மதுரை சேதுபதி உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியராகவும் மதுரைத் தமிழ்ச் சங்கத்துச் சேதுபதி செந்தமிழ்க் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகவும் பணியாற்றியுள்ளார்.*[4]

மாலை மாற்று, இன்னிசை விருந்து, ஏகபாத விருந்து நூற்றந்தாதி ஆகிய நூல்களை இயற்றிப் பதிப்பித்துள்ளார். தொல்காப்பியப் பாயிரம், திருக்குறள் ஆகியவற்றிற்கு விருத்தியுரை செய்து அச்சில் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.

பதிப்பாசிரியர்கள் அடிப்படையில் பள்ளி, கல்லூரித் தமிழாசிரியர்களாகவும் பண்டைய தமிழ் நூற்பதிப்பாசிரியராகவும் நூலாசிரியராகவும் உரையாசிரியராகவும் திகழ்ந்தவர்கள், பல்துறைப் புலமையும் பன்மாண் சிறப்பும் மிக்கவர்கள் என்னும் பொதுக் கோட்பாட்டிற்கு அரசஞ் சண்முகனார் பணிகளும் அரணாகின்றன.

### வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார்

இவர் மதுரை மாவட்டத்திலுள்ள விளாச்சேரியில் பிறந்தவர். தமிழ்மொழியின் மேல் அளவற்ற பற்றுக் கொண்டவர்.

---

3. தொல்காப்பியப் பதிப்புகள், ப. 62.
4. அச்சும் பதிப்பும், ப. 214.

தமிழ்மொழியின் வரலாற்றை 1903இல் வரைந்து காட்டியவர். ஞானபோதினி எனும் மாத இதழையும் நடத்திக் காட்டிய இதழாசிரியர் இவர்.

திருக்குளந்தை வடிவேலன் பிள்ளைத்தமிழ், மதுரை மாலை, கலிங்கத்துப்பரணி, நளவெண்பா, இலக்கணச் சுருக்கம், பஞ்சதந்திரம், உத்தரகோவை, மங்களேசுவரி பிள்ளைத்தமிழ் போன்ற பல நூல்களை இவர் பதிப்பித்துள்ளார். இவர்தம் தாய்மொழிப் பற்று தலைவணங்கத்தக்கதாகும்.

மதுரை மாவட்டப் பதிப்பாசிரியர்களாக மழவை மகாலிங்கையர், ஒல்காப் புகழ் தொல்காப்பியத்தை முதன்முதலாக அச்சில் கொணர்ந்தவர். அரசஞ் சண்முகனார் இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற இலக்கணப் புலவராகத் திகழ்ந்தவர். வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார் தாய்மொழியாம் தமிழ் மொழியின் மேல் அளவற்ற பற்றுக் கொண்டவர். தமிழ்மொழியின் வரலாற்றிலும் வளர்ச்சியிலும் பதிப்பாசிரியர்களுக்கு மிகுந்த பங்குண்டு என்பது இங்கு நினைவுகூரத்தக்கதாகும்.

# திருச்சி மாவட்டப் பதிப்பாசிரியர்கள்

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை, வி.கோவிந்த பிள்ளை, சோடசாவதானம் சுப்புராயச் செட்டியார், ஜே.எம்.நல்லசாமிப் பிள்ளை, ச. வேதநாயகம் பிள்ளை போன்றோர் திருச்சி மாவட்டப் பதிப்பாசிரியர்களாவர்.

## வி. கோவிந்தபிள்ளை

இவர் திரிசிரபுரத்தில் பிறந்த வைணவர். இவர் கம்பராமாயணம் முழுமையையும் அச்சில் பதிப்பித்த பெருந்தகை ஆவார். இராசமன்னார் தலபுராணம், கோயில் இராசமன்னார், கோயிற் அலங்காரக்கோவை ஆகிய நூல்களை இயற்றிய நூலாசிரியர். கம்பராமாயணம் (சுந்தரகாண்டம்), சடகோபரந்தாதி ஆகிய நூல்களுக்கு உரையெழுதிய உரையாசிரியர். கம்பராமாயணம், நாலகப்புராணம் போன்ற நூல்களைப் பதிப்பித்த பதிப்பாசிரியர்.

## திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை

இவர் மிகச் சிறந்த பதிப்பாளர் என்பதைவிடப் படைப்பாளர் என்பதை முதற்கண் குறிப்பிடவேண்டும். ஐம்பதுக்கும் மேற்பட்ட பிரபந்தங்களை எழுதிக் குவித்தவர். இருபதுக்கு மேற்பட்ட தலபுராணங்களைத் தமிழ் நல்லுலகிற்குத் தந்தவர். இவை மட்டுமல்லாமல் பல்வேறு காப்பிய நூல்களையும் படைத்தருளியவர்.

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை மிகச் சிறந்த நூலாசிரியர்; உரையாசிரியர்; போதகாசிரியர் என்று கூறலாம். இவர் தமிழ்நூற் பதிப்புத்துறையில் அதிகம் நாட்டம் செலுத்தவில்லை. மிகச் சிறந்த பதிப்பாசிரியர்கள் படைப்பிலக்கியங்களில் வல்லவராக இருப்பதில்லை. அதுபோல மிகச் சிறந்த படைப்பாளர்கள் பதிப்புத் துறையில் நாட்டம் செலுத்துவதில்லை. இருப்பினும் செவ்வந்திப் புராணம், காஞ்சிப்புராணம், திருவானைக்கா புராணம், கல்லாடம் போன்றவற்றை அச்சில் பதிப்பித்துள்ளார் என்பது அனைவரும் மெச்சத்தக்கதாகும். சிற்றிலக்கிய வரலாற்றில் இவர்தம் சேவை மிகுதி. பதிப்பு முன்னோடி என நம் அனைவராலும் பாராட்டப்படும் உ.வே. சாமிநாதையரும் இவர்தம் நன்மாணாக்கர் என்பது இவண் குறிப்பிடத்தக்கதாகும். அவ்வடிப்படையில் பதிப்பாசிரியர்கள் பலரை

உருவாக்கிய பெருமகனார் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம்பிள்ளை என்பது சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

## சோடசாவதானம் சுப்புராயச் செட்டியார்

இவர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை இயற்றிய மாயூரப்புராணம், நாகைக்காரோணப் புராணம் போன்ற நூல்களையும் உரிச்சொல் நிகண்டு, திருப்போரூர் சந்நிதி முறை என்னும் நூல்களையும் அச்சில் பதிப்பித்துள்ளார்.

பதினோராம் திருமுறை முழுவதையும் முதன்முதலாக அச்சிட்ட பெருமையும் சிலப்பதிகாரம் புகார்க் காண்டத்தை முதன் முதலாக அச்சிட்ட பெருமையும் சோடசாவதானம் சுப்புராயச் செட்டியாரையே சாரும்.

தமிழ் நூல்கள் பலவற்றை முதன்முதலாக அச்சிட்ட பெருமை பதிப்பாசிரியர்கள் பலருக்கு உண்டு. அப்பெருமக்கள் சுவடிப் பதிப்பாசிரியர்கள் வரிசையில் சுட்டத்தக்கவராவர். அவ்வகையில் சோடசாவதானம் சுப்புராயச் செட்டியாரும் சுவடிப் பதிப்பாசிரியர்களுள் ஒருவராகத் திகழ்கின்றார்.

## ஜே.எம். நல்லசாமிப் பிள்ளை

பதிப்பாசிரியர்களுள் பலர் சட்டத்துறையில் பட்டம் பெற்றவராவர். ஜே.எம். நல்லசாமிப் பிள்ளையும் சட்டத்துறையில் பட்டம் பெற்றவர். இவர் சைவ சித்தாந்த நூல்கள் பலவற்றை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து அச்சில் பதிப்பித்த பெருந்தகை. இவர் சித்தாந்த தீபிகை என்னும் மாத இதழை நடத்திய இதழாசிரியர் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

## மாயூரம் ச. வேதநாயகம் பிள்ளை

இவர் திருச்சி மாவட்டத்திலுள்ள குளத்தூரில் பிறந்தவர். இவர் சித்தாந்த சங்கிரகம், பெண்மதி மாலை, திருவந்தாதி, திருவருள் மாலை, தேவமாதா அந்தாதி, சர்வசமயச் சிந்தனை, பொம்மைக் கல்யாணம் பெரியநாயகி அம்மானை போன்ற பல சிற்றிலக்கியங் களை இயற்றி அச்சில் பதிப்பித்துள்ளார். தமிழ்மொழியில் முதன் முறையாக உரைநடையில் பிரதாப முதலியார் சரித்திரம் என்னும் முதல் நாவலை எழுதி அச்சில் பதிப்பித்து வெளியிட்டவர் இவர். கத்தோலிக்க சமயத்தவராக

இருந்தபோதும், பிற சமயத்தினருடன் சமரச மனப்பான்மையுடன் நடந்து வந்தார். சமய, இனவேறுபாடுகளைக் கடந்து பதிப்பாசிரியர்கள் விளங்குகின்றனர் என்னும் நிலையில் மாயூரம் ச. வேதநாயகம் பிள்ளை சுட்டத்தக்கவராவார்.

திருச்சி மாவட்டப் பதிப்பாசிரியர்களில் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் பதிப்பாசிரியர்கள் பலரை உருவாக்கிய பெருமைக்குரியவராவர். சுவடிப் பதிப்பாசிரியர்களில் முன்னோடியாக விளங்கும் டாக்டர் உ.வே.சாமிநாதையரும் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம்பிள்ளையின் மாணாக்கர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். வி. கோவிந்தபிள்ளையும், சோடாசவதானம் சுப்புராயச்செட்டியாரும் சுவடிப் பதிப்பாசிரியர்களில் சுட்டத்தக்கவராக விளங்குகின்றனர். உரைநடை வரலாற்றில் குறிப்பிடத்தக்க மாயூரம் ச. வேதநாயகம் பிள்ளை திருச்சியைச் சார்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# வட ஆர்க்காடு பதிப்பாசிரியர்கள்

## கா. நமச்சிவாய முதலியார்

வட ஆர்க்காடு மாவட்டத்தைச் சார்ந்த பதிப்பாசிரியர்களுள் பேராசிரியர் கா. நமச்சிவாய முதலியார் குறிப்பிடத்தக்கவராவார். இவர் வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள காவேரிப்பாக்கம் என்னும் ஊரில் பிறந்தார். அடிப்படையில் இவரோர் தமிழாசிரியர். தொடக்க நிலை, உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியராகப் பணியாற்றிக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணிநிலையில் உயர்ந்தவர்.

இவர் பிருதிவிராஜன், சேகன் நாடகம் மற்றும் தேசிங்கு ராஜன் கதைகள் போன்ற நூல்களை எழுதிய நூலாசிரியர். வாக்குண்டாம், நல்வழி, நன்னெறி, நீதிசாரம் போன்ற நீதி நூல்களுக்கு உரை எழுதிய உரையாசிரியர்.

இவர் இறையனார் களவியல், தஞ்சைவாணன் கோவை, தணிகைப் புராணம், அறப்பளீசுவர சதகம், வெற்றி வேற்கை, உலக நீதி, நீதிவெண்பா, திருவாசகம், திருக்கோவையார், பத்துப்பாட்டு போன்ற பல நூல்களைப் பதிப்பித்த நிலையில் மிகச் சிறந்த பதிப்பாசிரியர்.

இத்தனைக்கும் மேலாகத் தொல்காப்பியத்தின் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் ஆகியவற்றை மூலம் மட்டும் கொண்ட நிலையில் பதிப்பித்துள்ளார். தொல்காப்பியம் சொல்லதிகாரத்தை இளம்பூரணர் உரையுடன் பதிப்பித்துள்ளார். தொல்காப்பியம் பொருளதிகாரம், அகம், புறம் எனும் இரண்டு இயல்களையும் இளம்பூரணர் உரையுடன் பதிப்பித்துள்ளார்.

இவர் தமிழ்க்கடல் அச்சகம் ஒன்றைச் சொந்தமாகத் தொடங்கிப் பல நூல்களை அச்சிட்டு வெளியிட்டுள்ளார்.

## பேரா. த.கோ. பரமசிவம்

இவர் வடஆர்க்காடு மாவட்டம் களம்பூரில் பிறந்தவர். தொல்லியல், கல்வெட்டியல், சுவடியியல் ஆகியவற்றில் சிறப்பு ஈடுபாடு கொண்டவர். புதுதில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்திலும், தில்லிப் பல்கலைக்கழகத்திலும், தமிழ்ப் பல்கலைக் கழகத்திலும் பேராசிரியராகவும். துறைத்தலைவராகவும் பணியாற்றியவர்.

த.கோ. பரமசிவம் அவர்கள் துறைத் தலைவராகப் பணியாற்றிய காலத்தில் பல்வேறு கருத்தரங்குகளை நடத்தியுள்ளார். சுவடிப்பதிப்பு வரலாறு என்னும் தலைப்பில் மூன்று கருத்தரங்குகள் நடத்தி, சுவடிப் பதிப்புப் பற்றிய விழிப்புணர்வை நினைவூட்டியவர். இவை மட்டுமல்லாமல் சுவடிப்பதிப்பு நெறிமுறைகள், மொழி வளர்ச்சியில் சுவடிப்பதிப்பு, பேரா. வையாபுரிப் பிள்ளையின் நூற்றாண்டு விழா எனப் பல்வேறு தலைப்புகளில் கருத்தரங்குகள் நடத்திய பெருமைக்குரியவர்.

பதிப்பாசிரியர் என்னும் நிலையில் பல சுவடி விளக்க அட்டவணைகளை வெளிக்கொண்டுவந்தவர். பொதுப் பதிப்பாசிரியராக இருந்து இலக்கணச் சூடாமணி என்னும் இலக்கண நூலைப் பதிப்பித்துள்ளார்.

**பேரா. சா. கிருஷ்ணமூர்த்தி**

இவர் தென்னார்க்காடு மாவட்டம் வளையமாதேவியில் பிறந்தவர். அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டமும் முனைவர் பட்டமும் பெற்றவர். தொல்காப்பியம் இளம்பூரணர் உரையில் முனைவர்பட்ட ஆய்வினை மேற்கொண்டவர். இலக்கண உரைகள், சங்க இலக்கியம், சுவடியியல் போன்றவற்றில் சிறப்பு ஈடுபாடு கொண்டவர்.

தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள இலக்கணச் சூடாமணி என்னும் இலக்கண நூலுக்குக் குறிப்புரை வரைந்துள்ளார். இவர் சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் இயக்குநராகப் பணியாற்றிய காலத்தில் பல நூல்களைப் பதிப்பித்துள்ளார்.

இவர் தற்பொழுது தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் அறிவியல் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றி ஓய்வுபெற்றுள்ளார். அறிவியல் தமிழ் நூல்கள் பலவற்றைப் பதிப்பித்துள்ளார்.

**வேலூர் இரா. மாதவன்**

இவர் வேலூரில் பிறந்தவர். தமிழ் மருத்துவச் சுவடிகளை முதன்முதலாக ஆய்வு செய்து சென்னைப் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றவர். இவர் ஏறத்தாழ ஐம்பதுக்கும் மேற்பட்ட நூல்களைப் பதிப்பித்துள்ளார். இவர் தமிழ் இலக்கியச் சுவடிகள்,

மருத்துவச் சுவடிகள் ஆகியவற்றை ஆராய்ந்து பதிப்பிப்பதில் ஆழ்ந்த புலமை பெற்றவர். கண், மருத்துவம், சித்திரக்கவிகள், மீனாட்சியம்மன் திருப்புகழ், திவ்விய தம்பதியர் புகழ்மாலை, அகத்தியர் வைத்திய காவியம் 1500, நான்மணிக்கடிகை, வீரகேரளம் புதூர் நவநீதகிருட்டினன் கலம்பகம், தல புராணங்கள் (இரண்டு தொகுதிகள்) போன்றவை இவர் பதிப்பித்த நூல்களில் குறிப்பிடத்தக்கனவாகும்.

இவர்தம் பதிப்புப்பணியைப் பாராட்டிப் பல அறிஞர்கள் பாராட்டியுள்ளனர். ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதுபோலப் தமிழறிஞர் பேரா. டாக்டர் ச.வே. சுப்பிரமணியன் அவர்கள் பாராட்டு சுட்டத்தக்கதாகும்.

> ***டாக்டர் உ.வே. சாமிநாதையருக்குப் பிறகு தமிழகத்தில் பதிப்பாசிரியர் குறைந்துவிட்டனர். அக்குறையைப் போக்க நிறைவு செய்ய மாதவன் தோன்றியுள்ளார் என்பது என் கருத்து.***[1]

இவர் மிகச் சிறந்த பதிப்பாசிரியர் மட்டுமல்லர்; சிறந்த கவிஞர். ஆற்றல் மிக்க ஓவியர், நல்ல ஆய்வாளர், நூலாசிரியர், உரையாசிரியர் எனப் பல்துறைப் புலமையும் பன்மாண் சிறப்பும் பெற்றவர்.

இவர் ஓலைச்சுவடித் துறைத் தலைவராகவும் சுவடிப்புலத் தலைவராகவும், தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பதிப்புத் துறையின் இயக்குநர் (பொ) ஆகவும் பணியாற்றி வருகின்றார். இவர் தம் பணியின் பரப்பு தனியொரு நூலாக எழுதத்தக்கதாகும்.

---

1. சுவடிப் பதிப்பியல், ப. 11.

# குமரி மாவட்டப் பதிப்பாசிரியர்கள்

குமரிமாவட்டப் பதிப்பாசிரியர்களுள் சதாவதானி செய்குத் தம்பிப் பாவலர், பேரா. வ.அய். சுப்பிரமணியம், பேரா. ச. அகத்தியலிங்கம், பேரா. மு. சண்முகம்பிள்ளை, பேரா. தி. நடராசன், பேரா. ஏ.என். பெருமாள், சி. இலட்சுமணன் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

## சதாவதானி செய்குத்தம்பிப் பாவலர்

இவர் கன்னியாகுமரி மாவட்டத்தில் கோட்டாறு என்னும் ஊரில் பிறந்தவர். நினைவாற்றல் மிக்கவர். நூறு அவதாரங்களைச் செய்துகாட்டிச் சதாவதானி என்னும் விருது பெற்றவர். மிகச் சிறந்த தமிழ்ப் பாவலர். சென்னை இட்டா பார்த்தசாரதி நாயுடு நடத்தி வந்த அச்சகத்தில் 20 ஆண்டுகள் பட்டறிவு பெற்றவர். கோட்டாறு ஒலியுல்லா ஞானியார் பாடல்கள் அச்சில் வர ஆவன செய்தவர்.

> *இவர் நபிகள் நாயகம் நாடக மான்மிய மஞ்சரியும் கல்லத் நாயகத்தின் மீது புகழ் மாலையும் பாடியவர். ஹமீது நாயகம், கோட்டாறு ஞானியார் ஆகியோர் மீது அந்தாதிப் பாடல்கள் பாடி அச்சிட்டு வெளியிட்டார்.*[1]

## பேரா. முதுமுனைவர் வ.அய். சுப்பிரமணியம்

இவர் கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோயில் அருகில் உள்ள வடசேரியில் பிறந்தார். அமெரிக்காவிலுள்ள இந்தியானா பல்கலைக்கழகத்தில் மொழியியலில் முனைவர் பட்டம் பெற்றவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும், தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகமும் இவருக்கு முதுமுனைவர் பட்டம் வழங்கிச் சிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் முதல் துணைவேந்தராகப் பணியாற்றிய பெருமைக்குரியவர்.

பேரா. வ.அய். சுப்பிரமணியம் அவர்கள் எழுதிய நூல்கள் குறைவு. ஆனால் அவர் உருவாக்கிய மாணவர்கள் அதிகம். அம்மாணவர்கள் உருவாக்கிய நூல்கள் அதை விட அதிகம்.

---

1. அச்சும் பதிப்பும், ப. 221.

இவருடைய மாணவர்களில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் முன்னாள் இயக்குநர் பேரா. முனைவர் ச.வே. சுப்பிரமணியன், தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் ச. அகத்திய லிங்கம் போன்றோர் குறிப்பிடத்தக்கவராவர்.

பேரா. வ.அய்.சு. அவர்களின் படைப்புகளை ஆய்வு நூல்கள், தொகுப்பு நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள் என வகைப்படுத்தலாம்.

இவர் பல நூல்களைப் பதிப்பித்தவர் என்பது மட்டுமல்ல பதிப்புக் கலை பற்றி நுட்பமாகச் சிந்தித்த பெருமைக்குரியவர். பல்வேறு உயர் ஆய்வு நிறுவனங்களைச் செதுக்கிய சிற்பி. சென்னையிலுள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வரைவுக் குழுவின் செயலராக விளங்கியதோடு அந்நிறுவனத்தில் தமிழாய்வுகள் செய்யப் பல்வேறு ஆலோசனைகளை வழங்கிய பெருமைக்குரியவர்.

## பேரா. ச. அகத்தியலிங்கம்

இவர் கன்னியாகுமரி மாவட்டத்தில் தோவாளை வட்டத்தில் கேசவன் புதூர் என்னும் ஊரில் பிறந்தவர். தமிழ்த்துறையிலும், மொழியியல் துறையிலும் முனைவர் பட்டம் பெற்ற பெருமைக் குரியவர். 1986 முதல் 1989ஆம் ஆண்டு வரை மூன்றாண்டுகள் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராகப் பணியாற்றியுள்ளார்.

இவர் நூலாசிரியராகவும், பதிப்பாசிரியராகவும், ஆராய்ச்சிக் கட்டுரையாளராகவும், தமிழுக்கும் மொழியியலுக்கும் பல்வேறு பணிகளைச் செய்துள்ளார். உலக மொழிகள் (8 தொகுதிகள்), சங்கத் தமிழ் (5 தொகுதிகள்), சொல்லியல், பெயரியல், திராவிட மொழியியல் நூலடைவு, கல்வெட்டுக்களின் மொழிநிலை, நீலகிரி ஆதி வாசிகளின் ஆய்வு அடைவு, காணிக்காரமொழி, தொல்காப்பியச் சிந்தனைகள் முதலான 23 நூல்களின் நூலாசிரியராகவும் பதிப்பாசிரியராகவும் விளங்கியவர்.

இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றத்தின் சார்பில் ஆய்வுக் கோவைகள் (3 முதல் 21 வரை), நாட்டுப்புறவியல், என 35 தலைப்புகளில் பல்வேறு தொகுதிகளின் பதிப்பாசிரியராக அரும்பணி ஆற்றியுள்ளார்.

**பேரா. மு. சண்முகம்பிள்ளை**

இவர் கன்னியாகுமரி மாவட்டத்தில் பிறந்தவர். திருவையாறு அரசர் கல்லூரியில் வித்துவான் பயின்றவர். உயர்நிலைப்பள்ளி, கல்லூரி, சென்னைப் பல்கலைக்கழகத்திலும், மதுரை காமராசர் பல்கலைக்கழகத்திலும், தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்திலும் பணியாற்றியவர். இவர் சங்க இலக்கியம், தொல்காப்பியம், பக்தி இலக்கியம், நிகண்டுகள், சிற்றிலக்கியங்கள், அகராதிக்கலை, பதிப்புக்கலை, சமண இலக்கியங்கள், கவிமணியின் பாடல்கள் ஆகியவற்றில் தோய்ந்த ஈடுபாடும் ஆய்வும் கொண்டவர்.

இருபதாம் நூற்றாண்டுப் பதிப்பாசிரியர்களில் பேரா. மு. சண்முகம்பிள்ளை குறிப்பிடத்தக்கவர். இவர் ஏறத்தாழ 125 நூற்பதிப்புகளைத் தமிழ்கூறு நல்லுலகத்திற்குத் தந்தவர். அவற்றுள் இருபத்தைந்திற்கு மேற்பட்ட நூல்கள் சுவடிப் பதிப்புகளாகும். இவை மட்டுமல்லாமல் 10 ஆராய்ச்சி நூல்களையும், 185 ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதிக் குவித்தவர். தமிழ் – தமிழ் அகராதி, தமிழ் நூல் விவர அட்டவணை போன்ற ஒப்பற்ற பணிகளைச் செய்து முடித்தவர். இத்தனைக்கும் மேலாக, பேரா. வையாபுரிப் பிள்ளையின் அணுக்க மாணவர் பேரா. மு. சண்முகம்பிள்ளை என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாகும்.

பேரா. மு. சண்முகம்பிள்ளையின் சுவடிப்பதிப்புகளாக விளங்குபவை 26 நூல்கள். இவர்தம் சுவடிப் பதிப்புகள் வெவ்வேறு சிற்றிலக்கிய வகையைச் சார்ந்தவைகளாகும். அவற்றுள் அந்தாதி, அம்மானை, உலா, ஊஞ்சல், கும்மி, கோவை, தூது, மஞ்சரி, மாலை, வாழ்த்து, வண்ணம், பிள்ளைத்தமிழ், நன்னெறி போன்றவை குறிப்பிடத்தக்கனவாகும். இவர்தம் பதிப்பு நெறிமுறைகளில் பாடச் செம்மை, முகவுரை, தலைப்புகள், அடிக்குறிப்புகள், நூலின் முன்பின் இணைப்புகள், அச்சுப்பணி ஆகியவை குறிப்பிடத்தக்கவையாகும்.

**பேரா. தி. நடராசன்**

இவர் கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவிலுக்கு அருகில் உள்ள வைத்தியநாதபுரம் என்னும் சிற்றூரில் பிறந்தவர். மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழியற்புலச் சுவடியியல் துறையில் இலக்கணப் பேராசிரியராகப் பணியாற்றினார்.

இவர் ஏறத்தாழ 17 நாட்டுப்புறக் கதைப்பாடல்களைச் சுவடிப் பதிப்புகளாகப் கொண்டு வந்துள்ளார். குருசாமி கதை, தம்பிமார் கதை, வன்னியடி மறவன் கதை, உடையார் கதை, கட்டபொம்மு கும்மிப்பாடல், ஞான சவுந்தரி அம்மானை, கோவலன் கர்ணகி கதை, உலகுடைய பெருமாள் கதை, பத்திரகாளியம்மன் கதை, கன்னடியன் போர், அயோத்தி கதை, ஓட்டக்கார சுவாமி கதை போன்றவை இவர் பதிப்பித்த நாட்டுப்புறக் கதைப்பாடல் நூல்களாகும். ஓலைச் சுவடியிலிருந்து பெயர்த்தெழுதி மூலபாடத்தைச் சிதைக்காமல் சுவடியில் உள்ளவாறு பதிப்பிப்பது இவர்தம் தனிப் பண்பாகும். கதைப் போக்கிற்கேற்ப உட்தலைப்புகள் மட்டும் பதிப்பாசிரியர்களால் கொடுக்கப்பெற்றிருக்கும். நாட்டுப்புறக் கதைப்பாடல் வரலாற்றில் இவர்தம் பதிப்புப்பணி போற்றத்தக்கதாகும்.

## பேரா. ஏ.என். பெருமாள்

இவர் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒசரவிளை என்னும் கிராமத்தில் பிறந்தவர்.

> ***இவர் மிகச்சிறந்த நாடகப் படைப்பாளர். இவர் எழுதிய நாடகங்கள் தமிழ் நாடகத் துறையின் வளர்ச்சிக்கு மிகுந்த பங்களிப்பாக அமைந்தன[2]***

சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் இணைப் பேராசிரியராகப் பணியாற்றிச் சில காலம் இயக்குநராகவும் பணியாற்றினார்.

பனிமொழி, பால்மதி ஆகிய கவிதை நாடகங்களை எழுதிப் பதிப்பித்தார். உலக அரங்கில் நாடகம், தமிழக நாட்டுப்புறக் கலைகள், தமிழில் கதைப்பாடல்கள், கும்மிப் பாடல்கள் போன்ற ஆய்வு நூல்களையும் எழுதிப் பதிப்பித்துள்ளார். இவர் எழுதிய தமிழர் இசை, வாத்திய மரபுகள் போன்றவை உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடுகளாகும். நாடக வல்லுநராக, நாடக நூல் பதிப்பாசிரியராகத் திகழ்ந்தவர். இவர் மிகச் சிறந்த ஆய்வாளர். எனவே பல ஆராய்ச்சி நூல்களையும் எழுதிப் பதிப்பித்துள்ளார். இவர் எழுதிய தமிழர் இசை, வாத்திய மரபுகள் போன்றவை உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடுகளாக வந்துள்ளன. உயர்நிலைப்பள்ளி, கல்லூரிப் பேராசிரியராகப் பணியாற்றி நூலாசிரியராகத் திகழ்ந்தவர். பல ஆராய்ச்சி நூல்களை எழுதிப் பதிப்பித்துள்ளார்.

## முனைவர் சி. இலட்சுமணன்

இவர் கன்னியாகுமரி மாவட்டத்தில் மதுசூதனபுரம் என்னும் ஊரில் பிறந்தவர். இவர் பேராசிரியர் மு. சண்முகம் பிள்ளையின் சுவடிப் பதிப்புகளை ஆராய்ந்து ஆய்வியல் நிறைஞர் பட்டம் பெற்றவர். தொல்காப்பியம், எழுத்ததிகாரம் பதிப்பும் உரைகளும் என்னும் தலைப்பில் ஆய்வு மேற்கொண்டு முனைவர் பட்டம் பெற்றவர்.

வாழ்வியல் சிந்தனை, பேரா. மு. சண்முகம்பிள்ளையின் பதிப்புப் பணி போன்றவற்றின் நூலாசிரியராக விளங்குகின்றார். தமிழக வரலாற்றறிஞர்கள், காகிதச் சுவடி ஆய்வுகள், பதிப்பு நிறுவனங்கள், சுவடிப் பதிப்பாசிரியர்கள், பதிப்பியல் நெறிமுறைகள் ஆகிய நூல்களின் இணைப்பதிப்பாசிரியராகப் பணியாற்றியுள்ளார்.

அறிஞர் பெருமக்களின் வாழ்க்கை வரலாற்றையும் அவர்தம் பணிநிலைகளையும் வெளிப்படுத்த வேண்டும் என்பது இவர்தம் விருப்பமாகும். இக்கருத்தமைவில் ஆய்வுக்குப் போற்றும் தமிழறிஞர்கள், தமிழியல் ஆராய்ச்சி நன்மணிகள் ஆகிய நூல்களின் பதிப்பாசிரியராகத் திகழ்கின்றார். பதிப்பியல் தொடர்பாக 50க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார். சுவடியியல் கல்வியில் முதுகலைப் பட்டத்திற்குரிய பாடத்திட்டத்தை முழுமையாகத் தயாரித்துள்ளார். இவர் தற்பொழுது தமிழ்ப் பல்கலைக்கழகத்தில், அரிய கையெழுத்துச் சுவடித்துறைத் தலைவராகப் பணியாற்றி வருகின்றார்.

# நிறைவுரை

பதிப்புப்பணி என்பது எளிய பணியன்று; யார் வேண்டுமானாலும் செய்யக்கூடிய பணியுமன்று. இப்பெரும்பணியைச் செய்து முடித்தவர்கள் பண்டைய பதிப்பாசிரிய நன்மக்கள் ஆவர். இப்பெருமக்கள் ஆற்றிய பணி எத்தகைய கடினமான பணி என்பது உள்ளத்தால் உணரவேண்டியதொன்றாகும். பழந்தமிழ் நூற் பதிப்புகள் என்பன செய்தொழிலால் வேறுபட்ட செந்தமிழ்ப் புலவர்கள் கொய்தளித்த மலர்கள்தாம். சங்கப் பாடல்கள், அதுபோல இனத்தாலும், இடத்தாலும், ஏற்றதோர் பணியாலும் வேறுபட்ட பல்வேறு துறைசார்ந்த அறிஞர் பெருமக்களால் உருவாக்கப்பட்டவை யாகும்.

ஓலைச் சுவடிகளில் அடங்கியும் முடங்கியும் கிடந்த இலக்கிய, இலக்கண, மருத்துவ, சோதிட நூல்களை அச்சிட்டு வெளியிட்ட பெருமக்கள்தாம் பழந்தமிழ் நூற்பதிப்பாளர்கள்.

பாடவேறுபாடுகளை மூலபாட ஆய்வு நோக்கில் ஆராய்ந்து, மூலபாடத்தைச் செம்மை செய்து, பதிப்புக்குள்ளாகும் நூலுக்குத் தக்கவாறு பதிப்புருவாக்கப் பணிகளைச் செய்து, பல்வேறு ஆய்வுகளுக்குப் பயன்படுவதற்கேதுவாகவும், அந்நூலை நன்கு புரிந்து கொள்வதற்கேதுவாகவும் பயன்பாட்டு நோக்கில் தேவையான வற்றை நூலின் முன் இணைப்புகளாகவும் பின் இணைப்பு களாகவும் தந்து தரமான பதிப்புகளைத் தமிழ்கூறு நல்லுலகிற்குத் தந்த பெருமக்களே பழந்தமிழ் நூற்பதிப்பாளர் ஆவர்.

முற்காலத்தில் கற்றறிவாளர்களாகத் திகழ்ந்த புலவர் பெருமக்களும் கல்லூரி, பள்ளித் தமிழாசிரியர்களும் அவர்தம் பரம்பரையினரும் அச்சக உரிமையாளர்களும்தாம் பழந்தமிழ் நூற் பதிப்பாளர்கள். இன்னும் சொன்னால் அச்சில் வாரா அருந்தமிழாக இருந்த நூல்களெல்லாம் அன்று சுவடிகளாக இருந்தன. அந் நூல்களையெல்லாம் ஓலைச்சுவடிகளிலிருந்து பெயர்த்தெழுதி, ஒப்பு நோக்கி, மூலபாடத்தைச் செம்மை செய்து, அச்சு நூல்களாக உருவாக்கித் தந்த தமிழறிஞர் பெருமக்களே பழந்தமிழ் நூற் பதிப்பாளர்கள். இத்தகு பெருமக்கள்தாம் சுவடிப் பதிப்பாசிரியர்கள்

என்று சுட்டப்படுகின்றார்கள். இவர்களெல்லாம் "பதிப்பாசிரியர்" என்ற சொல்லுக்குப் பெருமை சேர்த்துக் கொண்டிருப்பவர்கள்.

பழந்தமிழ் நூற்பதிப்பாளர்கள் எல்லாம் "பதிப்பாசிரியர்" என்ற பெயருக்காகவோ பொன், பொருள், புகழ் போன்ற எவ்விதமான பயன் கருதியோ பதிப்புப் பணிகளில் ஈடுபடவில்லை என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும். தன்னலம் கருதாமல் தமிழ் மொழி ஒன்றையே கருதித் தமிழ்நூற் பதிப்புகளை இத்தரணிக்குத் தந்த இப்பெருமக்களின் அரிய பணி போற்றத் தக்கதாகும். பண்டைய பதிப்பாசிரியர்களின் அரிய பணி இல்லையேல் இன்று நாம் பயன்படுத்திக் கொண்டிருக்கும் இலக்கிய, இலக்கண, சோதிட, மருத்துவ நூல்கள் இல்லை.

தமிழ் நூற்பதிப்புத்துறை என்பது கற்றறிவாளர்கள் போற்றும் கலை உலகம். நற்றமிழ் உணர்வும் கலை உணர்வும் செறிந்த பதிப்பாசிரியர்களே "பதிப்புக்கலை" என்னும் சொல்லுக்குச் சொந்தக்காரர்கள்.

பதிப்பியல் சார்ந்த எந்தவொரு தலைப்பில் ஆய்வு மேற் கொண்டாலும் பதிப்பாசிரியர் பணிகளே முதன்மைப்படுத்தப்படும். பதிப்புகள், பதிப்பு நிறுவனங்கள், பதிப்பாசிரியர், பதிப்பின் தன்மை போன்ற எந்தவொரு தலைப்பில் ஆய்வு மேற்கொண்டாலும் பதிப்பாசிரியர்கள் பதிப்பு நெறிமுறைகளே விளக்கிக் கூறப்படும்.

பதிப்பாசிரியர்கள் குறித்த ஆய்வினைப் பதிப்பு நிறுவனம், காலம், நூற்பெயர், பதிவுகள் போன்ற பல்வேறு நிலைகளில் நிகழ்த்தலாம். நூற்பெயர் சார்ந்த ஆய்வில் ஒரே நூற்பதிப்பைப் பல்வேறு பதிப்பாசிரியர்கள் பதிப்பித்திருக்கலாம். இத்தகைய ஆய்விற்குப் பதிப்புவகை சார்ந்த தலைப்புகளைவிடப் பதிப்பாசிரியர்களின் வாழ்விடங்களை மையமாகக் கொண்டு வகைதொகை செய்து ஆய்வு மேற்கொள்வதே ஏற்புடைத்தாகும். இவ்அடிப்படையில் பழந்தமிழ் நூற்பதிப்பாசிரியர்களை அவர்தம் வாழ்வியல் இடம்சுட்டி யாழ்ப்பாணத்துப் பதிப்பாசிரியர்கள், புதுவைப் பதிப்பாசிரியர்கள் நெல்லை மாவட்டப் பதிப்பாசிரியர்கள் எனப் பகுப்பாய்வு செய்யப்பெற்றுள்ளது.

இத்தகைய ஆய்விற்கு அடிநாதமாக இருப்பவை அவர்தம் பெயர்களேயாகும். பதிப்பாசிரியர்களின் இடமும் இனமும் சுட்டிய

பெயர்களே இப்பகுப்பாய்விற்குப் பெரிதும் துணைநின்றன. இலக்கிய, இலக்கணப் பதிப்புகளை இலக்கியச் சுவடிப் பதிப்பு, இலக்கணச் சுவடிப்பதிப்பு என்று விதந்து கூறலாம். இத்தகைய நெறிமுறையில் இலக்கியச் சுவடிப் பதிப்பாசிரியர்கள், இலக்கணச் சுவடிப் பதிப்பாசிரியர்கள், சோதிட நூற் பதிப்பாசிரியர்கள், மருத்துவ நூற்பதிப்பாசிரியர்கள் என்றெல்லாம் பகுப்பாய்வு செய்யலாம்.

தமிழ்ப் பதிப்பு வரலாற்றில் யாழ்ப்பாணத்துப் பதிப்பாசிரியப் பெருமக்கள் குறிப்பிடத்தக்கவராவர். ஏறத்தாழ இருபத்தைந்திற்கும் மேற்பட்டோர் யாழ்ப்பாணத்துப் பதிப்பாசிரியர்களாகக் காணப்படுகின்றனர். பழந்தமிழ் நூற்பதிப்பாளர்களில் முன்னோடியாகக் கருதத் தக்கவர் மூவரென்று தமிழ்த் தென்றல் கூறுவதில் இருவர் யாழ்ப்பாணத்துப் பதிப்பாசிரியராவர். ஒருவர் ஆறுமுக நாவலர். மற்றொருவர் சி.வை. தாமோதரம்பிள்ளை ஆவார். அவர்தம் மதிப்பீட்டின்படி பழந்தமிழ் இலக்கிய வெளியீட்டிற்குக் கால்கொண்டவரும் சுவர் எழுப்பியவரும் யாழ்ப்பாணத்துப் பதிப்பாசிரியர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். அதுமட்டுமல்ல இலக்கணச் சுவடிப் பதிப்புகளைக் கொண்டுவந்த ஆறுமுகநாவலர், குமாரசுவாமிப் புலவர், கணேசையர், கனகசுந்தரம்பிள்ளை, சி.வை. தாமோதரம் பிள்ளை போன்ற பலரும் யாழ்ப்பாணத்துப் பதிப்பாசிரியர் என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

தமிழ் நூல்களைப் பிழையில்லாமலும் திருத்தமாகவும் அழகாகவும் முதன்முதல் அச்சிட்ட பெருமை ஆறுமுக நாவலரையே சாரும். இப்பெருமைமிகு பதிப்பாசிரியர் யாழ்ப்பாணப் பதிப்பாசிரியராவார். இலக்கண நூல்கள் மட்டுமல்ல; பல ஏட்டுச் சுவடிகளைக் கொண்டு முதல்முறை அச்சில் பதிப்பித்து வெளியிட்டவர் சி.வை. தாமோதரம் பிள்ளை. இப்பெருமகனாரும் யாழ்ப்பாணத்துப் பதிப்பாசிரியர்களுள் ஒருவராவார்.

சுவடிப் பதிப்பு வரலாற்றில் நெல்லை மாவட்டப் பதிப்பாசிரியர் பெருமக்கள் சுட்டத்தக்கவராவர். இப்பெருமக்களுள் பலர் படைப்பாற்றல் மிக்கவராகவும் சொல்லாற்றல் மிக்கவராகவும் விளங்கினர். நெல்லை மாவட்டப் பதிப்பாசிரியர்களில் வ.உ. சிதம்பரம்பிள்ளை, நாவலர் சோமசுந்தர பாரதியார், கா. சுப்பிரமணிய பிள்ளை போன்றோர் டி.கே. சிதம்பரநாத முதலியார், பேரா. ரா.பி. சேதுப்பிள்ளை,

பேரா. ச. வையாபுரிப் பிள்ளை போன்றோர் சட்டத்துறையில் பட்டம் பெற்ற வழக்குரைஞர்களாவர்.

இலக்கண சூடாமணி எச்.ஏ. கிருஷ்ணபிள்ளை பதிப்பித்த உரைநடை நூலாகும். மு.சி. பூரணலிங்கம் பிள்ளை தமிழ் இலக்கண வரலாற்றை ஆங்கிலத்தில் எழுதியவர். வ.உ.சி. மெய்யறிவு நூல் பலவற்றின் ஆசிரியர். நெல்லை மாவட்டப் பதிப்பாசிரியர் பலரும் பல்துறை வல்லவராவர்.

சுவடிப்பதிப்பு வரலாற்றில் தஞ்சை மாவட்டப் பதிப்பாசிரியர் களுக்குத் தனியிடம் உண்டு. தமிழ்த் தாத்தா உ.வே.சாமிநாதையர் தஞ்சை மாவட்டப் பதிப்பாசிரியருள் ஒருவராவார். திருவாசகத்திற்கு முதன்முதல் அச்சு வடிவம் கண்ட சிவக்கொழுந்து தேசிகர், நற்றிணைக்கு நல்லதோர் பதிப்புத் தந்த பின்னத்தூர் நாராயணசாமி ஐயர், பல நூல்களுக்கு உரையெழுதிப் பதிப்பித்த மறைமலை அடிகள். சங்க நூல்கள் பலவற்றைப் பதிப்பித்த பெருமை தஞ்சை மாவட்டப் பதிப்பாசிரியர்களையே சாரும்.

புதுவைப் பதிப்பாசிரியர்கள் எண்ணிக்கையில் குறைவாகக் காணப்பட்டாலும், தமிழ்ப் பதிப்பு வரலாற்றில் குறிப்பிடத் தக்கவராவர். இப்பெருமக்கள் பலரும் சுவடிப் பதிப்புகள் பலவற்றைத் தமிழ்கூறு நல்லுலகத்திற்குத் தந்தவராவர். புதுவைப் பதிப்பாசிரியர் அ. முத்துசாமிப் பிள்ளை முதன்முதலாக ஓலைச்சுவடிகளைத் திரட்டிய பெருமைக்குரியவராவார்.

முகவைப் பதிப்பாசிரியர்களில் இராமானுஜ கவிராயர், இரா. இராகவையங்கார், மு. இராகவையங்கார் போன்றோர் குறிப்பிடத்தக்கவராவர். பண்டைய புலவர்கள் வாழ்ந்த ஊர்களுக் கெல்லாம் சென்று ஏட்டுச்சுவடிகளைத் தேடித் தொகுத்தவர் மகா வித்துவான் இரா. இராகவையங்கார் என்பது குறிப்பிடத்தக்க தாகும். இராமநாதபுரம் மாவட்டத்துப் பதிப்பாசிரியர்கள் எண்ணிக்கையில் அதிகம் இல்லையென்றாலும் எண்ணத்தாலும் அவர்தம் கைவண்ணத்தாலும் உயர்ந்து நிற்கின்றனர் என்பது உண்மையாகும்.

தமிழ்நூற் பதிப்பு வரலாற்றில் சென்னை மற்றும் சென்னையைச் சார்ந்த இடங்களில் உள்ள பதிப்பாசிரியர்களும் குறிப்பிடத்தக்க வராவர். இலக்கியம், இலக்கணம், நீதிநூல், சிற்றிலக்கியம் எனப்

பல்துறை நூல்களும் பதிப்பித்த சரவணப் பெருமாளையர் சென்னை மாவட்டப் பதிப்பாசிரியருள் ஒருவராவர். தொல்காப்பியத்திற்கு இளம்பூரணர் உரைப் பதிப்புகள் கண்டவரும் தொல்காப்பிய விருது பெற்றவருமாகிய அடிகளாசிரியர் சென்னை சார்ந்த பதிப்பாசிரியருள் ஒருவராவார்.

மதுரை மகாலிங்கையர், அரசஞ் சண்முகனார், வி.கோ. சூரிய நாராயண சாஸ்திரியார் போன்றோர் மதுரை மாவட்டப் பதிப்பாசிரியருள் சுட்டத்தக்கவராவர். தொல்காப்பியத்தை முதன் முதலில் அச்சில் கொணர்ந்தவர் மழவை மகாலிங்கையர். தொல்காப்பியப் பாயிரத்திற்கு விருத்தியுரை கண்டு தனிப்பதிப்புக் கண்டவர் அரசஞ்சண்முகனார்.

திருச்சி மாவட்டப் பதிப்பாசிரியர்களுள் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை, சோடசாவதானம் சுப்புராயச் செட்டியார் போன்றோர் சுட்டத்தக்கவராவர். டாக்டர் உ.வே.சா.வை உருவாக்கிய பெருமகனார் மீனாட்சி சுந்தரம்பிள்ளை. இவர் திருச்சி மாவட்டப் பதிப்பாசிரியருள் ஒருவராவார்.

வடஆர்க்காடு மாவட்டத்தைச் சார்ந்த பதிப்பாசிரியர்களுள் பேரா. கா. நமச்சிவாயம் குறிப்பிடத்தக்கவராவர். இவர் பள்ளி மற்றும் கல்லூரியில் பணியாற்றிய தமிழாசிரியர். தமிழ்க்கடல் என்னும் அச்சகத்தைத் தொடங்கி அரிய நூல்கள் பலவற்றை அச்சிட்டு வெளியிட்டார். இவர்தம் அடிச்சுவட்டில் இன்றும், பேரா.வே.இரா. மாதவன் போன்றோர் பல்கலைக்கழக நிலையில் பணியாற்றி வருவதோடு நூற்பதிப்புப் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

பதிப்புச் செம்மல் மு. சண்முகம்பிள்ளை அவர்கள் குமரி மாவட்டப் பதிப்பாசிரியருள் ஒருவராவார். இவர் பேரா. வையாபுரிப் பிள்ளையின் பதிப்புப் பணிகளில் துணை நின்றவர். சென்னைப் பல்கலைக்கழகத் தமிழாய்வு இதழில் நூல்கள் பலவற்றைச் சுவடிப் பதிப்பாகக் கொண்டுவந்தவர். இவர்தம் பதிப்பு நெறிமுறைகள் பாராட்டத்தக்கனவாகும்.

பேரா. வ.அய். சுப்பிரமணியம் அவர்கள் ஆய்வு நூல்கள் பலவற்றைப் பதிப்பித்துள்ளார். இவர் சுவடித் துறையில் அளவற்ற பற்றுடையவர். பதிப்பியல் குறித்துப் பல விமரிசனக் கட்டுரைகளை

எழுதியுள்ளார். மூலபாட ஆய்வு செய்து பாட நிர்ணயம் செய்ய வேண்டும் என்பதில் அழுத்தமான கருத்துடையவர்.

பேரா. ச. அகத்தியலிங்கம் அவர்களும் மிகச் சிறந்த நூலாசிரியர் மட்டுமல்லர்; பதிப்பாசிரியர் என்றும் குறிப்பிடத்தக்கவர். ஆய்வுக் கோவைகள் பலவற்றைப் பதிப்பித்தவர்.

இடத்தாலும் இனத்தாலும் ஏற்றதோர் பணியாலும் வேறுபட்ட பல்வேறு துறைசார்ந்த அறிஞர் பெருமக்களால் உருவாக்கப்பட்டவை தமிழ் நூற்பதிப்புகளாகும். விடுதலைப் போராட்ட வேள்வியில் சாதி, சமயம், இனம், மொழி போன்ற வேறுபாடுகளைக் கடந்து சுதந்திரம் பெறுவது ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்ட பெருமக்கள் பலர். அதுபோல் பல்வேறு வேறுபாடுகளையும் கூறுபாடுகளையும் கடந்த நிலையில் சுவடி நூல்களை அச்சு நூல்களாக உருவாக்குவது ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்ட மக்கள் இப்பதிப்பாசிரியப் பெருமக்கள் ஆவர்.

## இனமும் இடமும்

பதிப்பாசிரியப் பெருமக்கள் பல்வேறு இனத்தைச் சார்ந்தவர்களாகவும் பல்வேறு இடத்தைச் சார்ந்தவர்களாகவும் திகழ்கின்றனர். இப்பெருமக்கள் பெயர்களின் முன்னொட்டுக்களும் பின்னொட்டுக்களும் அவர்தம் இனத்தையும் இடத்தையும் சுட்டுவனவாக அமைந்துள்ளன. அவர்தம் பெயர்களின் முன்னொட்டுகள் ஊர்ப்பெயரைக் குறிப்பிடுவனவாய் உள்ளன. சான்றாக, யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர், புதுவை நயனப்ப முதலியார், திருமயிலைச் சண்முகம் பிள்ளை, முகவை இராமாநுசக் கவிராயர், திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை என்போரைக் கூறலாம்.

பதிப்பாசிரியப் பெருமக்கள் பெயர்களின் பின்னொட்டுகள் அவர்தம் இனத்தைக் காட்டுவனவாக உள்ளன. சான்றாக, ச. வையாபுரிப் பிள்ளை, சோடசாவதானம் சுப்புராயச் செட்டியார், ந.மு. வேங்கடசாமி நாட்டார், தி.வை. சதாசிவ பண்டாரத்தார், சிவக்கொழுந்து தேசிகர், பின்னத்தூர் நாராயணசாமி ஐயர், உ.வே. சாமிநாத ஐயர் என்போரைக் கூறலாம்.

இப்பெருமக்களில் பலர் இந்து, கிறித்துவம், முசுலீம் எனப் பல்வேறு சமயத்தைச் சார்ந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## வேற்றுமையில் ஒற்றுமை

பதிப்பாசிரியர் பெருமக்களிடையே பல்வேறு வேறுபாடுகளும் கூறுபாடுகளும் இருப்பினும் அன்னைத் தமிழ் நூல்களை வெளிக் கொணர்வதில் ஒவ்வொருவரும் ஆர்வம் காட்டியுள்ளனர் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். பதிப்பு முன்னோடிகள் எனும் நிலையில் ஒரு சில பதிப்பாசிரியர்களைப் பற்றியே அதிகம் பேசப்படுகின்றது. ஒவ்வொரு பதிப்பாசிரியரின் பதிப்புப் பணிகளும் நினைவுகூர வேண்டும். இப்பெருமக்கள் பதிப்பித்த நூல்கள், பதிப்பு நெறிமுறைகள் ஆகியவற்றை ஆராயும்போக்கில் பதிப்பாசிரியர்கள் குறித்தும் விரிவாக ஆராயப்பட வேண்டும். அவ்வாய்வு வேற்றுமையில் ஒற்றுமை காண்பதாகவும் இருத்தல் வேண்டும்.

# பின்னிணைப்பு – 1

## சுவடிப் பதிப்பியல் கலைச்சொல் விளக்கங்கள்

**சுவடி**

காகிதமும் எழுதுகோலும் வழக்கிற்கு வராத காலத்தில் ஓலை நறுக்குகளில் எழுத்தாணி கொண்டு எழுதப்பட்ட நூல்களே சுவடிகள் எனப்படும். இன்று நாம் பயன்படுத்தும் அச்சுப் புத்தகங்களுக்குப் பதிலாக நம் முன்னோர்கள் பயன்படுத்திய பனையோலைப் புத்தகங்கள்தாம் சுவடிகளாகும்.

**சுவடி இயல்**

சுவடி சேகரித்தல், பாதுகாத்தல், பதிப்பித்தல் தொடர்பான பல்வேறு செய்திகளை வகுத்தும் தொகுத்தும் தருவது சுவடியியலாகும்.

**சுவடி எழுத்து**

மெய்யெழுத்துக்களும் உயிர்மெய் எழுத்துக்களும் வரிவடிவில் வேறுபாடில்லாமல் காணப்படும். தொல்காப்பியரின் மெய்யெழுத்துக் கோட்பாட்டில் புள்ளி என்பது வரிவடிவைக் குறிக்கவில்லை. மெய்யெழுத்துக்களைப் புள்ளி இல்லாமல் எழுதுவதே இயல்பு. சுவடி எழுத்துகளின் இயல்பும் அதுவேயாகும்.

**சுவடி வகை**

சுவடிகளை மொழி, எழுதுபொருள், துறை, அமைப்பு, மொழிநடை, அகப்புறத் தன்மை, இடம், காலம், சிறப்புத் தன்மைகள், தொகுத்தோர் சாப்பகங்கள், பதிப்பு நிலை என்பன போன்ற வரையறைகளில் வகைப்படுத்தும் வாய்ப்புகள் உள்ளன.

**சுவடியியல் கல்வியின் வரலாறு**

தமிழ் இலக்கிய வரலாறு என்பது ஏறத்தாழ 3000 ஆண்டுகளுக்குள் இருக்கலாம். இதில் நூற்பதிப்பு வரலாறு என்பது 200 ஆண்டுகளைக் கூட முழுமையாக எட்டவில்லை எனலாம். சுவடியியல் என்பது கடந்த 20 அல்லது 25 ஆண்டுகளாக வளர்ந்து வரும் கல்வியும் வரலாறுமாகும்.

**முப்பெரும் பணிநிலைகள் – இலக்கியப் பரப்பில் – சுவடியியலில்**

படைத்தல், பதிப்பித்தல், ஆய்வு செய்தல் என்பன தமிழ் இலக்கியப் பரப்பின் முப்பெரும் பணிநிலைகளாகும். சுவடி சேகரித்தல், பாதுகாத்தல், பதிப்பித்தல் என்பன சுவடியியலின் முப்பெரும் நிலைகளாகும்.

**கலைகளின் சங்கமம் (சுவடியியல் கல்வி)**

சுவடிக்கலை, அச்சுக்கலை, ஆராய்ச்சிக்கலை, பதிப்புக் கலை, சுவடிப் பாதுகாப்புக் கலை, மூலபாடத் திறனாய்வுக் கலை போன்ற பல்வேறு கலைகளின் சங்கமம்தான் சுவடியியல் கல்வி யாகும். எனவே சுவடியியல் கல்வியின் ஓர் அங்கம் பதிப்புக்கலை என்று கூறலாம்.

**சுவடி எழுதும் கலை**

அச்சுக்கலை தோன்றாத காலத்தின் நிலையை நினைத்துப் பார்க்கும்போது எழுதும் கலை எவ்வளவு அரிதாக இருந்திருக்கும் என்பது எண்ணிப் பார்க்கத்தக்கதாகும் என்பார் மு.வை. அரவிந்தன் அவர்கள்.

**பதிப்பு**

பதிப்பு என்றால் என்ன? என்பதற்குப் பல்வேறு விளக்கங்கள் கூறலாம்.

1. பதிப்பு உருவாக்கம் செய்து அச்சிட்டு வெளியிடப்படும் நூற்பிரதி பதிப்பு எனப்படும்.

பதிப்பு உருவாக்கம் என்பது பதிப்பு நெறிமுறைகளைப் பயன்படுத்தி, செப்பம் செய்து பயன்பாட்டு நோக்கில் நூலை உருவாக்குவதாகும்.

2. அச்சுக் கோர்த்தல் முறையிலோ, நிழற்பட முறையிலோ ஒரு தடவை வெளியிடப்பெறும் பிரதிகள் எத்தனையானாலும் அவை ஒரு பதிப்பு எனப்படும்.

3. பதிப்பு வகை அடிப்படையிலும் பல்வேறு விளக்கம் கூறலாம்.

## பதிப்புப் பதிப்பித்தல்

பதிப்பு என்றால் நூற்பெயரை முதன்மைப்படுத்திக் கூறுதலாகும். பதிப்பித்தல் என்பது நூல் உருவாக்கப் பணிகளை முதன்மைப்படுத்திக் கூறுவதாகும்.

## பதிப்பித்தல் வெளியிடுதல்

பதிப்பித்தல் என்பது பதிப்பு உருவாக்கப் பணியினைக் குறிக்கும். வெளியிடுதல் என்பது நூல் வெளியீட்டுச் செலவை ஏற்றல் என்னும் நிலையில் அமையும். எனவே பதிப்பித்தல் என்பது வேறு; வெளியிடுதல் என்பது வேறு என்பது அறியத்தக்கதாகும்.

## பதிப்பு வகைகள்

நூற்பதிப்புகளை இடம் பொருள் நோக்கு எனப் பல்வேறு வகைப்படுத்தலாம்.

பதிப்பின் தன்மை, நூலின் அளவு, அச்சிடப்பட்ட தட்டை, அமைப்பு, விலை, உள்ளடக்கம், உரிமை, வெளியீட்டு நிறுவனம், பதிப்பாசிரியர், வெளியாகும் காலம், வெளியாகும் இடம், மொழி, துறை, நூற்பெயர், உரை என்பன போன்று பல்வேறு நிலைகளில் வகைப்படுத்தலாம்.

## பதிப்புப்பணி

பதிப்பாசிரியர் ஒருவர் பெயர் சுட்டிப் பதிப்புப்பணி என்னும் நிலையில் அவர் பதிப்பித்த அனைத்து நூல்களையும் குறிப்பதோடு அவர்தம் பதிப்பு நெறிமுறைகளைக் குறிப்பதற்கு அமையும்.

## பதிப்பு நிறுவனங்கள்

பதிப்பு நிறுவனங்கள் என்பது சுவடிப் பதிப்பு வரலாற்றில் பதிப்பு நிறுவனங்கள் என்றே பொருள்படும். பதிப்பு வரலாற்றில் பல்கலைக்கழகங்கள், சுவடி நூலகங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள், சமய நிறுவனங்கள், நூற்பதிப்புக் கழகங்கள், கால அடிப்படையில் பழங்காலப் பதிப்பகங்கள், இட அடிப்படையில் அயல்நாட்டுப் பதிப்பு நிறுவனங்கள், யாழ்ப்பாணத்துப் பதிப்பு நிறுவனங்கள் என்றெல்லாம் பல்வேறு வகைப்படுத்தலாம்.

## பதிப்புப் பார்வை

நூற்பதிப்புகளைப் பதிப்புப் பார்வையில் ஆராய்ந்து பதிப்பு நெறிமுறைகளை வெளிக்கொணர்வது ஒன்று. பதிப்பு நெறிமுறைகளைப் பயன்படுத்தி ஒரு நூல் எவ்வாறு பதிப்பிப்பது என்று அறிய விழைவது மற்றொன்று.

## பதிப்பியல் ஆராய்ச்சி நெறிமுறைகள்

ஆராய்ச்சி நெறிமுறைகள், பதிப்பு நெறிமுறைகள், புத்தக உறுப்புகளின் உருவாக்கம் ஆகிய இம்மூன்றின் கூட்டுக் கல்வியே பதிப்பியல் ஆராய்ச்சி நெறிமுறைகளாகும்.

## பதிப்பு நெறிமுறைகள்

பதிப்பு உருவாக்கம் செய்வதற்குப் பதிப்பாசிரியர் மேற்கொண்ட பணிநிலைகள் யாவும் அவர்தம் பதிப்பு நெறிமுறைகளாகும். பதிப்பு, பதிப்பு வகை, பதிப்பாசிரியர், பதிப்புப்பணி, பதிப்பு நிறுவனம் போன்ற தலைப்புகளில் மேற்கொள்கின்ற ஆய்வுகள் அனைத்தும் பதிப்பு நெறிமுறைகளை வெளிக்கொணர்வதாய் அமையும்.

## சுவடிப் பதிப்பு

வெளிவராத சுவடிகளைப் பதிப்பிப்பதும், வெளிவந்த நூலாயின் சுவடியோடு ஒப்புநோக்கிப் பதிப்பிப்பதும் சுவடிப் பதிப்பாகும்.

சுவடியிலிருந்து முதன்முதலாக வெளியிடப்படும் நூல் சுவடிப்பதிப்பு என்று கூறப்படும்.

## பின்னிணைப்பு – 2

## பதிப்பு வகைகளும் அடிப்படைக் கோட்பாடுகளும்

| | |
|---|---|
| 1. பதிப்பு நிலை | சுவடிப் பதிப்பு |
| | ஆய்வுப் பதிப்பு |
| | மறுபதிப்பு |
| | தொகைப்பதிப்பு |
| | தொகுப்புப் பதிப்பு |
| | பாசிமிலிப் பதிப்பு |
| | சந்தாப் பதிப்பு |
| 2. அளவு | விரிவாக்கப் பதிப்பு |
| | சுருக்கப் பதிப்பு |
| | பையடக்கப் பதிப்பு |
| 3. அச்சிடப்பட்ட தடவை | முதற்பதிப்பு |
| | இரண்டாம் பதிப்பு |
| | மூன்றாம் பதிப்பு |
| 4. அமைப்பு | குறிப்பெதிர் பதிப்பு |
| | அடிக்குறிப்புப் பதிப்பு |
| 5. விலை | மலிவுப் பதிப்பு |
| | மாணவர் பதிப்பு |
| | விலையுயர்ந்த பதிப்பு |
| 6. உள்ளடக்கம் | மூலபாடப் பதிப்பு |
| | மூலபாட ஒப்பியல் பதிப்பு |
| | உரைப் பதிப்பு |
| | உரைவளப் பதிப்பு |
| | புத்துரைப் பதிப்பு |

| | |
|---|---|
| **7. மொழி** | பன்மொழிப் பதிப்பு |
| | தமிழ்ப் பதிப்பு |
| | மொழிபெயர்ப்புப் பதிப்பு |
| **8. பதிப்பாசிரியர்** | உ.வே.சா. பதிப்பு |
| | ஆறுமுக நாவலர் பதிப்பு |
| | சி.வை. தாமோதரம்பிள்ளை பதிப்பு |
| | மு. சண்முகம்பிள்ளை பதிப்பு |
| **9. வெளியீட்டு நிறுவனம்** | தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்பு |
| | மணிவாசகர் நூலகப் பதிப்பு |
| | சைவ சித்தாந்தக் கழகப் பதிப்பு |
| **10. வெளியாகும் காலம்** | காலைப் பதிப்பு |
| | மாலைப் பதிப்பு |
| | வாரப் பதிப்பு |
| | மாதப் பதிப்பு |
| **11. வெளியாகும் இடம்** | சென்னைப் பதிப்பு |
| | திருச்சிப் பதிப்பு |
| | மதுரைப் பதிப்பு |
| | கோவைப் பதிப்பு |
| **12. துறை** | இலக்கணப் பதிப்பு |
| | இலக்கியப் பதிப்பு |
| | காப்பியப் பதிப்பு |
| | சிற்றிலக்கியப் பதிப்பு |
| | மருத்துவப் பதிப்பு |
| | சோதிட நூற்பதிப்பு |
| **13. காலம்** | 18ஆம் நூற்றாண்டுப் பதிப்பு |
| | 19ஆம் நூற்றாண்டுப் பதிப்பு |
| | 20ஆம் நூற்றாண்டுப் பதிப்பு |

| | |
|---|---|
| **14. நூற்பெயர்** | தொல்காப்பியப் பதிப்புகள்<br>நன்னூல் பதிப்புகள்<br>குறுந்தொகைப் பதிப்புகள்<br>சிலப்பதிகாரப் பதிப்புகள்<br>தேவாரப் பதிப்புகள் |
| **15. உரிமை** | அதிகாரப்பூர்வப் பதிப்பு<br>கொள்ளைப் பதிப்பு |
| **16. உரை** | இளம்பூரணர் உரைப் பதிப்புகள்<br>நச்சினார்க்கினியர் உரைப் பதிப்புகள்<br>பரிமேலழகர் உரைப் பதிப்புகள்<br>வை.மு.கோ. உரைப் பதிப்புகள் |

# பின்னிணைப்பு – 3

## பதிப்பு வகைகளின் விளக்கங்கள்

### சுவடிப்பதிப்பு

. சுவடிகளைப் பெயர்த்தெழுதி அவற்றைப் பரிசோதனைக்குட் படுத்திப் பதிப்பு உருவாக்கம் செய்து அச்சிட்டு வெளியிடுவதாகும். இவ்வாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நூல்களனைத்தும் சுவடிப் பதிப்பாகும்.

### ஆய்வுப் பதிப்பு

பதிப்பு உருவாக்கத்தில் அதன் ஒவ்வொரு நிலையும் ஆய்வு செய்யப்பெற்றும், ஆய்வாளர்க்குத் தேவையான சொல்லடைவு முதலிய இணைப்புகள் தரப்பெற்றும் அமைவது ஆய்வுப் பதிப்பாகும். இதற்குச் சான்றாகத் தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடாகிய குறுந்தொகைப் பதிப்பைக் கொள்ளலாம்.

### மறுபதிப்பு

ஒரு முறை அச்சடிக்கப்பட்ட நூல் எவ்வித மாற்றமும் திருத்தமும் செய்யாமல் மீண்டும் அச்சேற்றி வெளியிடப்படுமாயின் அப்பதிப்பு மறுபதிப்பு எனப்படும். மறுபதிப்புப் பெற்ற எல்லா நூல்களும் இதற்குச் சான்றாகும். கழக வெளியீடான தொல்காப்பியத்தை ஈண்டுக் கொள்ளலாம்.

### தொகுப்புப் பதிப்பு

ஒருவருடைய அல்லது பலருடைய படைப்புகளிலிருந்து தொகுத்துத் தருவது தொகுப்புப் பதிப்பாகும். மு. இராகவையங்காரின் ஆராய்ச்சித் தொகுதியை இதற்குச் சான்றாகக் கொள்ளலாம்.

### பாசிமிலிப் பதிப்பு

ஒரு நூலை மறுபதிப்புச் செய்யும்போது புதிதாக அச்சுக் கோர்க்காமல் பழைய பதிப்பை ஆப்செட் செய்து போட்டோ எடுத்து அச்சிடுதல் பாசிமிலிப் பதிப்பாகும். இதற்குச் சான்றாகப்

பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் என்னும் நூலைக் கொள்ளலாம்.

### சந்தாப் பதிப்பு

நூல் வெளியீட்டிற்குப் போதிய பணம் இன்மையாலோ, விற்பனையாகுமோ ஆகாதோ என்ற அச்சத்தாலோ அந்நூல் பதிப்புக்கு உண்டாகும் செலவை ஈடுகட்டும் அளவுக்குச் சந்தா தாரர்களைச் சேர்த்துப் பின் அந்நூலை அச்சிட்டு, சந்தாதாரர் களுக்கு அளிப்பது சந்தாப் பதிப்பாகும். உ.வே.சா.வின் சீவக சிந்தாமணிப் பதிப்பை இதற்கு எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

### விரிவாக்கப் பதிப்பு

முந்தைய பதிப்பில் காணப்படும் செய்திகளின் அளவை விடப் பதிப்பிக்கின்ற நூலின் செய்திகள் விரிவுபடுத்தப்படுமாயின் அவை விரிவாக்கப் பதிப்பு எனப்படும். இதற்குப் பாரிநிலைய வெளியீடான புறநானூற்றுப் பதிப்பைச் சான்றாகக் காட்டலாம்.

### சுருக்கப் பதிப்பு

ஒரு நூலினது மூலத்தைப் பக்க அளவில் சுருக்கி வெளியிடுதல் சுருக்கப் பதிப்பாகும். இதற்குச் சான்றாகக் கழக வெளியீடாகிய சூளாமணி சுருக்கம் என்னும் நூலைக் கொள்ளலாம்.

### பையடக்கப் பதிப்பு

கைக்கு அடக்கமாக அல்லது பைக்கு அடக்கமாக இருக்கும் அளவில் அதனை அச்சிட்டுத் தருதல். இதனைப் பையடக்கப் பதிப்பு என்று கூறுவர். இதற்குக் கழக வெளியீடாகிய தொல்காப்பியத்தைச் (மூலம் மட்டும்) சான்றாகக் கொள்ளலாம்.

### இரண்டாம் பதிப்பு

நூல் வடிவில் வெளிவந்த முதற்பதிப்பை மீண்டும் பதிப்பிக்கும்போது அந்நூல் இரண்டாம் பதிப்பாகும். தொடர்ந்து அவை பதிப்பிக்கின்ற சூழலில் மூன்றாம் நான்காம் பதிப்புகளாகவும் ஆகும். அப்பதிப்பு முறையோடு அச்சிட்ட ஆண்டும் சேர்த்துக் கூறப்படும். பதிற்றுப்பத்து என்னும் நூலின் பல பதிப்புகளை இதற்குச் சான்றாகக் கூறலாம்.

## குறிப்பெதிர் பதிப்பு

நூலின் இரட்டைப் படை எண் வரும் பக்கங்களில் மூலமும், ஒற்றைப்படை எண் வரும் பக்கங்களில் குறிப்புரையும் அமையுமாறு பதிப்பிக்கப்படுமாயின் அப்பதிப்பு குறிப்பெதிர் பதிப்பாகும். பிங்கல நிகண்டுப் பதிப்பை இதற்கு எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

## அடிக்குறிப்புப் பதிப்பு

பாடவேறுபாடு, விளக்கம், அருஞ்சொற்பொருள், பதிப்பாசிரியர் குறிப்பு போன்றவற்றை அடிக்குறிப்பாகத் தந்து பதிப்பிக்கப்படுவது அடிக்குறிப்புப் பதிப்பாகும். இதற்குச் சான்றாகச் சீவலமாறன் கதை என்னும் முதற்பதிப்பைக் கொள்ளலாம்.

## மலிவுப் பதிப்பு

பதிப்பிற்கு உண்டான செலவை உள்ளிட்டு அடக்கவிலை அல்லது அதிலும் குறைவாகவும் விற்பதுண்டு. அத்தகைய பதிப்புகள் மலிவுப்பதிப்பு எனப்படும். பாரிநிலைய வெளியீடான பரிபாடல் நூற்பதிப்பைச் சான்றாகக் கூறலாம்.

## மாணவர் பதிப்பு

மாணவர்களின் நலன் கருதி எளிய நடையில் தேர்வுக்கான குறிப்புக்களுடன் குறைந்த விலையில் வெளிவரும் பதிப்பு மாணவர் பதிப்பாகும். ஆறுமுக நாவலரின் காண்டிகை உரைப்பதிப்பை இதற்குச் சான்றாக்கிக் கொள்ளலாம்.

## விலையுயர்ந்த பதிப்பு

சாதாரணப் பதிப்பிற்காகக் கோர்த்த அச்செழுத்து அச்சுப் படிவத்தை விலையுயர்ந்த தாளில் அச்சிட்டுத் தோல் அல்லது உயர்ந்த காலிகோவால் கட்டுமானம் செய்து அதிக விலையைக் குறிப்பிட்டு விற்பதுண்டு. அதனை விலையுயர்ந்த பதிப்பு எனலாம். தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடாக மராட்டியச் செப்பேடுகள் 50 என்ற நூலை இதற்குச் சான்றாகக் கொள்ளலாம்.

## மூலப்பதிப்பு

செய்யுளும் உரையும் அமைந்த நூலின் மூலத்தை (செய்யுள்) மட்டும் அச்சிட்டு வெளியிடுவதற்கு மூலப்பதிப்பு என்று பெயர்.

எஸ். ராஜம் வெளியீடான சங்க இலக்கியப் பதிப்புகள் அனைத்தையும் மூலப் பதிப்புகள் எனக் கொள்ளலாம்.

**உரைவளப் பதிப்பு**

ஒரு நூலுக்குப் பல உரையாசிரியர்களும், பதிப்பாசிரியர்களும் எழுதியுள்ள பல்வேறு உரைகளையும் குறிப்புகளையும் பாடவேறு பாடுகளையும் தொகுத்து வெளியிடுவது உரைவளப் பதிப்பாகும். உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடான தொல்காப்பிய உரைவளத்தை இதற்குச் சான்றாகக் கொள்ளலாம்.

**பன்மொழிப் பதிப்பு**

மூலம் ஒரு பகுதியிலும் அதன் எதிரே அதன் மொழி பெயர்ப்புகள் பல மொழிகளிலும் வர அமைவது பன்மொழிப் பதிப்பாகும். இதற்குச் சான்றாக Biblia Polyglotta Complutensis என்னும் நூலைக் கொள்ளலாம்.

**அதிகாரப்பூர்வப் பதிப்பு**

நூலாசிரியருடைய அல்லது பதிப்புரிமை பெற்றவருடைய ஒப்புதலைக் கொண்டு வெளிவருவது அதிகாரப்பூர்வப் பதிப்பாகும்.

**கொள்ளைப் பதிப்பு**

குறிப்பிட்ட எழுத்துரிமைத் தொகை தந்து குறிப்பிட்ட எல்லைக்குள் தம்முடைய நூல் அச்சிட்டு விற்பனை செய்ய வேண்டும் என்னும் நூலாசிரியர் வரைமுறையை மீறி வெளிநாட்டிற்குக் கடத்திச் சென்று அச்சிட்டு ஆசிரியருடைய ஒப்புதல், திருத்தம் எதுவும் பெறாமல், ஆசிரியர்க்கு ஊதியமும் தராமல் நூலை வெளியிட்டு விற்பனை செய்வது கொள்ளைப் பதிப்பாகும். எடுத்துக்காட்டாக ஹாலந்தில் மட்டுமே பதிப்பித்தற் குரியதொரு நூலைக் கடத்திச் சென்று இங்கிலாந்தில் பதிப்பித்து விற்றமையைக் கூறலாம்.

வெளியீட்டு நிறுவனம் மற்றும் பதிப்பாசிரியர் பெயராக அமைந்த பதிப்புகள், நூற்பதிப்புகளை வெளியிட்ட நிறுவனத்தின் பெயரோடும், பதிப்பித்த பதிப்பாசிரியர் பெயரோடும் சார்த்தி வழங்கப்படுவதுண்டு. இவை தொகுதியாக வழங்குவதற்கேயன்றிப்

பதிப்பு நிலையில் எவ்வித மாற்றமுமில்லை. இதற்குத் தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்புகள் கழகப் பதிப்புகள் என வெளியீட்டு நிறுவனத்தின் பெயரோடு சார்த்தி வழங்குவதையும் உ.வே.சா.வின் பதிப்புகள், மு.வ.வின் பதிப்புகள் எனப் பதிப்பாசிரியர் பெயரோடு சார்த்தியும் வழங்குவதைச் சான்றுகளாகக் கூறலாம்.

வெளிவரும் காலம், இடப்பெயரால் அமைந்த பதிப்புகள், பதிப்புகள் வெளியாகும் காலம், இடம் ஆகியவற்றின் அடிப்படையாலும் பதிப்பென்னும் சொல் சார்த்திக் கூறப்படும் இவை பெரும்பாலும் நாளிதழ், வார, மாத இதழ்களுக்கே பொருந்துவனவாகும்.

நாளிதழ்களை அவை வெளியாகும் காலத்தை முன்னிட்டுக் காலைப் பதிப்பு, மாலைப் பதிப்பு என்பதும் உண்டு. தினமலர் காலைப் பதிப்பாகும். மாலை முரசு, மாலை மலர் போன்றவை மாலைப் பதிப்பிற்குச் சான்றுகளாகும்.

வாரப்பதிப்பு, மாதப்பதிப்பு என்பன இதழ்களுக்கே பொருந்துவனவாய் அமையும். குமுதம் விகடன் போன்றவை வாரப் பதிப்புகளாகும். கலைமகள், கலைக்கதிர் போன்றவை மாதப் பதிப்பிற்குச் சான்றுகளாகக் காட்டத்தக்கவையாகும்.

## பின்னிணைப்பு – 4

## பதிப்பு நிறுவனங்களின் பன்முகப் பார்வை

1. பதிப்பு வரலாற்றில் பல்கலைக்கழகங்கள்
2. பதிப்பு வரலாற்றில் சுவடி நூலகங்கள்
3. பதிப்பு வரலாற்றில் ஆராய்ச்சி நிறுவனங்கள்
4. பதிப்பு வரலாற்றில் சமய நிறுவனங்கள்
5. பதிப்பு வரலாற்றில் தமிழ்ச் சங்கங்கள்
6. பதிப்பு வரலாற்றில் நூற்பதிப்புக் கழகங்கள்
6. பதிப்பு வரலாற்றில் முற்கால அச்சகங்கள்
8. பதிப்பு வரலாற்றில் பழங்காலப் பதிப்பகங்கள்
9. பதிப்பு வரலாற்றில் பதிப்பாசிரியர்கள் நிறுவிய பதிப்பகங்கள்
10. இடம் மற்றும் கால அடிப்படையில் பதிப்பு நிறுவனங்கள்

    அ) யாழ்ப்பாணத்துப் பதிப்பு நிறுவனங்கள்

    ஆ) அயல்நாட்டுப் பதிப்பு நிறுவனங்கள்

    இ) பழங்கால/அண்மைக்காலப் பதிப்பு நிறுவனங்கள்

    1. 18ஆம் நூற்றாண்டுப் பதிப்பு நிறுவனங்கள்
    2. 19ஆம் நூற்றாண்டுப் பதிப்பு நிறுவனங்கள்
    3. 20ஆம் நூற்றாண்டுப் பதிப்பு நிறுவனங்கள்
    4. 21ஆம் நூற்றாண்டுப் பதிப்பு நிறுவனங்கள்

## பின்னிணைப்பு – 5

## முற்கால மற்றும் தற்கால அச்சகங்கள்

1. அடிஸன் ஆண்ட் கோ பிரஸ்
2. அத்வைத விளக்கம் என்னும் அச்சுக்கூடம்
3. அப்சர்வர் அச்சுக்கூடம், கோயம்புத்தூர்
4. அமெரிக்கன்ஆர்க்காட் மிஷன் பிரஸ்
5. அமெரிக்கன் பிரஸ், சென்னை
6. அர்ச். சூசையப்பர் அச்சுக்கூடம், சென்னை
7. அர்ச். சூசையப்பர் கல்வி சாஸ்திர மடத்து அச்சுக்கூடம், திருச்சி.
8. அருட்பிரகாச அச்சுக்கூடம், சென்னை
9. அல்பினியன் பிரஸ்
10. அஷ்டலக்ஷ்மி விலாச அச்சுக்கூடம்
11. ஆதி கலாநிதி அச்சுக்கூடம், சென்னை
12. ஆதிவித்வ மனோரஞ்சனி அச்சுக்கூடம்
13. ஆ.ம.து.வே. ஆரியர் முத்தமிழ் வாணிபீடம் பிரஸ், சென்னை
14. ஆரியப் பிரகாசினி அச்சுக்கூடம், திருநெல்வேலி
15. ஆவலாக் அச்சியந்திர சாலை, சென்னை
16. ஆறுமுக விலாச அச்சுக்கூடம்
17. இயற்றமிழ் விளக்க அச்சுக்கூடம், காஞ்சீபுரம்
18. இவாஞ்சலிக்கல் லுத்தரன் மிஷன் பிரஸ், தரங்கம்பாடி
19. கலாநிதி அச்சுக்கூடம், கோயம்புத்தூர்
20. காசிம் பிரஸ், மதுரை
21. சிரோன்மணி விலாச அச்சுக்கூடம், மதுரை
22. பாண்டியன் பிரஸ், மதுரை
23. சகலகலா நிலைய அச்சுக்கூடம், ஈரோடு
24. சதர்ன்ஸ்டார் பிரஸ், திருச்சிராப்பள்ளி
25. சந்திரவதனி அச்சுக்கூடம், திரிசிரபுரம் கோட்டை
26. தூய வளனார் கல்லூரி அச்சகம், திருச்சி

27. ரிப்பன் பிரஸ், திருச்சி
28. சித்தாந்த வித்தியாநுபாலன யந்திரசாலை, சிதம்பரம்
29. பிரம்ம வித்தியா பிரஸ், சிதம்பரம்
30. சி.எம்.எஸ். டோவ் பிரஸ், மசூலிப்பட்டணம்
31. சின்னையா நாடார் அச்சுக்கூடம், திருப்பத்தூர்
32. சுதேசாபிமானி அச்சுக்கூடம், சேலம்
33. பாரதி விலாச யந்திரசாலை, அம்பாசமுத்திரம்
34. பூரண சந்திரோதய அச்சுக்கூடம், தஞ்சை
35. நேஷனல் அச்சுக்கூடம், தஞ்சை
36. நீலலோசனி பிரஸ், நாகப்பட்டினம்
37. நேடிவ் ராயல் அச்சுக்கூடம், திண்டுக்கல்
38. தேசாபிமானி அச்சுக்கூடம், கூடலூர்
39. பசுபதி அச்சுக்கூடம், கருவூர்
40. மீனலோசனி அச்சுக்கூடம், தேவகோட்டை
41. லார்டு ரிப்பன் அச்சுக்கூடம், கும்பகோணம்
42. விவேக சந்திரோதய அச்சுக்கூடம், தக்கோலம்
43. வேத விநாயகர் அச்சுக்கூடம், வெண்காடு
44. ஜகத்குரு யந்திரசாலை, நடுக்காவேரி
45. ஜியோதிர்விலாச அச்சுக்கூடம், திருவையாறு
46. பிரம்மானந்தா பிரஸ், திருவையாறு

# பின்னிணைப்பு – 6
## பதிப்பாசிரியர் அகரநிரல்

1. அண்ணங்கராச்சாரியார், உ.வே.
2. அநவரத விநாயகம்பிள்ளை (1877–1940)
3. அம்பலவாண நாவலர்
4. அம்பலவாண பண்டிதர் (1814–1879)
5. அரசஞ்சண்முகனார் (1866–1915)
6. அருணாசல சதாசிவம்பிள்ளை (1820–1896)
7. அருணாசலம், மு.
8. அனந்தராமையர், இ.வை (1872–1931)
9. ஆபிரகாம் பண்டிதர் (1859–1919)
10. ஆறுமுக நாவலர், யாழ்ப்பாணம் (1822–1879)
11. இரத்தினவேலு முதலியார், ஈக்காடு
12. இராகவையங்கார், இரா. (1870–1946)
13. இராகவையங்கார், மு. (1878–1960)
14. இராசகோபாலப் பிள்ளை, கோமளபுரம்
15. இராசு, செ. புலவர் (1938–)
16. இராசகோபாலையங்கார், வே.
17. இராசேந்திரன், ம. (1951–)
18. இராமச்சந்திரக் கவிராயர், இராசநல்லூர்.
19. இராமலிங்க அடிகள், வடலூர் (1823–1874)
20. இராமன், மு.கோ. (1927–)
21. இராமாநுசக் கவிராயர், முகவை. (1852–)
22. இராமாநுஜ நாவலர்
23. இளங்குமரன், இரா. புலவர் (1930–)
24. கணேசையர், சி.

25. கதிரேசஞ் செட்டியார், மு. (1881–1953)
26. கதிரைவேற்பிள்ளை, கு. (1829–1904)
27. கதிரைவேற்பிள்ளை, நா. (1844–1907)
28. கந்தசாமிக் கவிராயர், மு.ரா.
29. கலியாண சுந்தரனார், திரு.வி. (1883–1953)
30. கனகசபை பிள்ளை
31. கனகசுந்தரம்பிள்ளை, ந. (1852–1901)
32. கார்த்திகேய முதலியார், மா (1907–)
33. கிருட்டினமூர்த்தி, சா. (1949–)
34. கிருஷ்ணப்பிள்ளை, எச்.ஏ. (1827–1908)
35. கிருஷ்ணமாச்சாரியார், அ.
36. கிருஷ்ணமாச்சாரியார், சே.
37. குமாரசுவாமிப் புலவர் (1854–1922)
38. குலாம்காதிர் நாவலர் (1833–1909)
39. கோபாலையர், தி.வே. (1925–)
40. கோவிந்தபிள்ளை, வி.
41. கோவிந்தராச முதலியார், கா.வி. (1874–1949)
42. சக்கரவர்த்தி நயினார், அ. (1880–1960)
43. சடகோபராமானுஜச்சாரியார், வை.மு.
44. சண்முகம் பிள்ளை, திருமயிலை (1858–1905)
45. சண்முகம் பிள்ளை, மு. (1919–)
46. சதாசிவச் செட்டியார் (1872–1929)
47. சதாசிவப் பண்டாரத்தார், தி.வை (1892–1929)
48. சந்திரசேகர கவிராச பண்டிதர் (1883–)
49. சபாபதி நாவலர் (1843–1903)
50. சபாபதி முதலியார் சி.எஸ். காஞ்சிபுரம்
51. சபாபதி முதலியார் க. மகாவித்துவான் (1837–1898)

52, சரவணப் பெருமாளையர்

53. சவராயலு நாயகர், புதுவை (1829–1911)

54. சாமிநாத ஐயர், உ.வே. டாக்டர் (1855–1942)

55. சாமி வேலாயுதம் பிள்ளை

56, சிங்காரவேலு முதலியார், ஆ (1855–1931)

57. சிதம்பரம் பிள்ளை, வ.உ. (1872–1936)

58. சிதம்பர முதலியார், டி.கே.

59. சிவக்கொழுந்து தேசிகர், த.

60. சிவராஜ பிள்ளை கே.என். (1879–)

61. சுந்தரம்பிள்ளை பேரா. பெ. (1855–1897)

62. சுந்தரமூர்த்தி, இ. (1949–)

63. சுப்பராயச் செட்டியார் (1894–)

64. சுப்பிரமணிய ஐயர், வ.வே.

65. சுப்பிரமணிய பிள்ளை, கா. (1888–1945)

66. சுப்பிரமணிய பிள்ளை, வ.த. (1846–1909)

67. சுப்பிரமணியமுதலியார், வெ.ப. (1857–1947)

68. சுப்பிரமணியன் ச.வே.

69. செய்கு அப்துல் காதிரு நயினார் லப்பை ஆலிம் (1898–)

70. செய்குதம்பிப் பாவலர், சதாவதானி (1874–1950)

71. செல்வக்கேசவராய முதலியார், தி. (1864–1921)

72. ஜெகவீரபாண்டியனார் (1885–1967)

73. சேதுப்பிள்ளை, ரா.பி. பேரா. (1896–1961)

74. சொக்கலிங்கம், ராய. (1898–)

75. சொக்கலிங்கம், வீ. புலவர் (1925–)

76. சோமசுந்தர தேசிகர்

77. சோமசுந்தர நாயகர் (1846–1901)

78. சோமசுந்தர பாரதியார் ச. நாவலர் (1878–1958)

79. ஞானப்பிரகாசர் சுவாமி (1875–1947)
80. தம்பி முத்துப்பிள்ளைப் புலவர் (1857–1921)
81. தாண்டவராய முதலியார் (1850–)
82. தாமோதரம் பிள்ளை, சி.வை. (1832–1901)
83. துரைசுவாமிப் பிள்ளை, ஔவை. சு.
84. நமச்சிவாய முதலியார், பேரா. கா.
85. நயனப்ப முதலியார், புதுவை (1779–1845)
86. நல்லசாமிப் பிள்ளை, ஜே.எம். (1864–1920)
87. நவநீதகிருஷ்ண பாரதியார்
88. நாகராசன், ப.வெ. புலவர்
89. நாகலிங்க முனிவர், காஞ்சி (1865–1950)
90. நாராயணசாமி ஐயர், பின்னத்தூர் அ. (1862–1899)
91. நாராயணையங்கார் (1861–1947)
92. பரமசிவம், த.கோ.
93. பவனாந்தம் பிள்ளை, ச.
94. பழனியப்பப் பிள்ளை, தி.பொ. (1893–1951)
95. பாலசுந்தரம், ச.
96. பிச்சை இப்ராகீம் புலவர், ஆ.கா. (1863–1908)
97. பூர்ணலிங்கம் பிள்ளை, மு.சி. (1886–1947)
98. பூவராகம் பிள்ளை, ஆ.
99. பொன்னம்பல சுவாமிகள் (1832–1904)
100. மகதூர் முகம்மது புலவர், கண்ணகுமது
101. மகாலிங்கையர் மழவை
102. மகாலட்சுமி, தி.
103. மறைமலையடிகள் (1876–1950)
104. மாணிக்கவேலு நாயக்கர், பா.வே. (1871–1931)
105. மாதவன், வே.இரா.

106.மீனாட்சி சுந்தரம்பிள்ளை, மகாவித்துவான் (1815–1876)

107.முத்துசாமிப் பிள்ளை (1858–1917)

108.முத்துசாமிப் பிள்ளை, அ. (1840–)

109.முத்து வீர ஆச்சாரியர்

110. வடிவேலுச் செட்டியார், கோ. வேதாந்தி (1863–1935)

111. வடிவேலு முதலியார், மாங்காடு

112. வயித்தியலிங்கம் பிள்ளை, வல்லை (1852–1901)

113. விசாகப் பெருமாளையர், திருத்தணிகை

114. விஜயரங்க முதலியார், பம்மல் (1830–1895)

115. விபுலானந்த அடிகள் (1892–1947)

116. வீரசாமிச் செட்டியார்

117. வேங்கடசாமி நாட்டார், ந.மு. (1884–1944)

118. வேங்கடாசல பிள்ளை, கரந்தை (1888–1944)

119. வேங்கடாசல முதலியார்

120.வேணுகோபாலப் பிள்ளை, மே.வி.

121. வேதகிரி முதலியார், களத்தூர் (1795–1852)

122.வேதநாயகம் பிள்ளை, மாயூரம், ச. (1826–1889)

123.வேலாயுத முதலியார், தொழுவூர், ச.

124.வையாபுரிப் பிள்ளை, ச. (1891–1966)

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

## சென்னை - 600 113

## அண்மை வெளியீடுகள்

| | ரூ. பை. |
|---|---|
| அறிஞர்கள் பார்வையில் பேரறிஞர் அண்ணா | 145.00 |
| அறிஞர் அண்ணா–மொபசான் சிறுகதைகள்–ஒப்பாய்வு | 160.00 |
| இராசேந்திர சோழன் வெளியிட்ட எசாலம் செப்பேடுகள் | 55.00 |
| கடலடியில் தமிழர் நாகரிகம் | 55.00 |
| படைப்பு நெறிமுறைகள் | 150.00 |
| Comparative Studies in Literary Cultures | 100.00 |
| Sangam Classic : New Perspecties | 105.00 |
| கடற்பொறியியற் கலைச்சொற்கள் (குறுங்கலைக்களஞ்சியம்) | 150.00 |
| அரங்கியல் நோக்கில் கபிலர் பாடல்களில் காணலாகும் கதைமாந்தர்கள் | 100.00 |
| சங்க இலக்கியத்தில் சமூக ஆய்வுகள் | 55.00 |
| தமிழ் வாழ்க்கை வரலாற்றிலக்கியம் | 170.00 |
| கவிஞர் குலோத்துங்கனின் மானுடயாத்திரை காவிய வானில் புதிய தாரகை | 45.00 |
| தமிழ் நாடக வகையும் வரலாறும் | 110.00 |
| வா.செ.கு. என்ற ஆளுமையாளர் | 50.00 |
| உ.வே.சா.வின் குறுந்தொகை உரைத்திறன் | 45.00 |
| மருதத்தில் மக்கள் வாழ்வியல் | 40.00 |
| நன்னூல் உரைவளம் – தொகுதி – 1 பாயிரம் – 1 | 85.00 |
| நன்னூல் உரைவளம் – தொகுதி – 4 எழுத்தியல் – 2 | 140.00 |
| நன்னூல் உரைவளம் – தொகுதி – 2 பாயிரம் – 2 | 75.00 |
| நன்னூல் உரைவளம் – தொகுதி – 6 உயிரீற்றுப்புணரியல்–1 | 125.00 |
| நன்னூல் உரைவளம் – தொகுதி – 7 உயிரீற்றுப்புணரியல்–2 | 160.00 |
| நன்னூல் உரைவளம் – தொகுதி – 8 மெய்யீற்றுப்புணரியல் | 150.00 |
| நன்னூல் உரைவளம் – தொகுதி – 9 உருப்புணரியல் | 95.00 |
| நன்னூல் உரைவளம் – தொகுதி – 12 வினையியல் | 190.00 |
| நன்னூல் உரைவளம் – தொகுதி – 13 பொதுவியல்–1 | 140.00 |
| நன்னூல் உரைவளம் – தொகுதி – 16 இடைச்சொல்லியல் | 90.00 |
| நன்னூல் உரைவளம் – தொகுதி – 17 உரிச்சொல்லியல் | 55.00 |
| நன்னூல் உரைவளம் – தொகுதி – 18 தொல்.நன்னூல் | 120.00 |
| பண்டைத் தமிழ் எழுத்துக்கள் (ம.ப.) | 65.00 |
| வல்லம் புராணம் | 200.00 |
| இதழியல் உலகம் | 120.00 |
| தமிழும் தமிழ்க் கற்பித்தலும் | 60.00 |
| படைப்பிலக்கியம்–விளிம்புநிலை மக்கள் ஆய்வுநோக்கு | 100.00 |
| பழந்தமிழும் கிளைமொழிகளும் | 65.00 |
| உலக மொழிகளில் தமிழ்ச்சொற்களும் இலக்கணக்கூறுகளும் | 85.00 |
| அரசகுலச் சான்றோர் வரலாறும் மதுரைக்காஞ்சியும் | 115.00 |
| பெயரியல் | 55.00 |
| தமிழ்இசுலாம் உருவாக்கமும் திருக்குர்ஆன் தமிழ் வாசிப்பும் ஆய்வியல் சிந்தனை | 45.00 |
| தலித் அறம் | 45.00 |
| பொதுவுடைமை இயக்க இதழ்கள் | 115.00 |
| தமிழில் இதழியல் | 270.00 |

**717 சுவடிப் பதிப்பாசிரியர்கள் 45.00**